# இரிச்மண்டு தமிழ்ச்சங்கம்

(1999-2024)



# வெள்ளி விழா மலர்

## வெள்ளி நினைவுகள், தங்கக் கனவுகள்

வெள்ளி விழா

கொண்டாடும்

இரிச்மண்டு தமிழ்ச்

சங்க உறவுகளை

பெருமிதத்துடன் வாழ்த்தும்

Sumi

Global Sumi Technologies Inc
11549 Nuckols Road Ste B
Glen Allen VA 23059
201-993-3194
www.globalsumi.com



# இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் வெள்ளிவிழா

ஐயைந்து திங்கள் முடியும் இந்நேரம்,
RTS எங்கிலுமே வெள்ளி விழாக் கோலம்!

மூதன்னை என்றாலும் முதலன்னை அவளே!
காலங்களாய் நன்மக்கள் கோடி யீன்ற தமிழே!

அகர முதல எழுத்தெல்லாம் அகத்தினிலே எழுதியவள்!
அமெரிக்கா வந்தாலும் அரசோச்சும் அரசியவள்!

தேசங்கள் கடந்த போதும் நேசம் மிகு தாயாவாள்!
கரங் கோத்து உடன் வருவாள், கண நேரமும் பிரியாள்!

தெரியாதோர் நடுவினிலே தெரிந்தவளாய் அவள் இருப்பாள்!
நண்பர்களாய், உறவினராய்த் தமிழாலே தான் இணைப்பாள்!

கடல் தாண்டி வந்த பின்னும் கருத்தினிலே ஒருமித்தோம்!
கன்னித் தமிழ்க் காதலினால் தமிழ் சங்கம் அமைத்து வைத்தோம்!
ஆண்டுகள் ஆன போதும் ஆளுபவள் தமிழ் மகளே!
தலைமுறைகள் தவறாமல் பாடிடுவோம் அவள் புகழே!

தித்திக்கும் தமிழ் வாழி!
தமிழ் பிறந்த நாடு வாழி!

நம்மையெல்லாம் இணைத்து வைத்த இரிச்மண்டு தமிழ் சங்கம்
பல்லாண்டு பல்லாண்டு புகழோடு வாழி! வாழி!

- கவிநயா

# நிகழ்கால சங்க செயற்குழு

**தலைவர்**



மார்செலின்
லூவிஸ்மார்ட்டின்

**செயலாளர்**



சுபாஷினி
அருணாசலா

**பொருளாளர்**



சந்தானகுமார்
மோகனசுந்தரம்

**உதவி பொருளாளர்**



நித்யா கணபதி

**தமிழ்ப் பள்ளி இயக்குனர்கள்**



சிவகாமி செல்லப்பன்



பரமகல்யாணி சங்கரன்

**சமூக நலம் இயக்குனர்கள்**



கார்த்திகேயன்
சௌந்தரராஜன்



வைத்தீஸ்வரன்
ஜெகநாதன்

**செய்திமடல் இயக்குனர்**



சிவசக்தி
அறிவுக்கண்ணன்

## விளையாட்டு இயக்குனர்கள்



சுமேஷ்
சுரேந்திரன்



மணிகண்டன்
ராஜேந்திரன்

## மக்கள் தொடர்பு இயக்குனர்கள்



ஸ்ரீலதா
சந்தானகோபாலன்



இளமாறன்
அன்பழகன்

## உறுப்பினர் இயக்குனர்கள்



சிவரஞ்சனி
கிருஷ்ணமூர்த்தி



தீபிகா முரளி

## கலை மேம்பாடு இயக்குனர்கள்



யுவஸ்ரீ கணேஷ்



தங்கமீனா
சரவணபாண்டியன்



தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

அனைவருக்கும் வணக்கம்!

இரிச்மண்டு தமிழ்ச்சங்க வெள்ளி விழா மலர் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகிறோம்.

ஊர் கூடி இழுத்த தேர் போல 25 வருடங்களாக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மாமனிதர்களின் உழைப்பில் வளர்ந்த சங்கம் நமது.

வெள்ளி விழாவினைக் கொண்டாடும் இந்நல்வேளையில் நமது சங்கம் கடந்து வந்த வெற்றிப்பாதையினையும், அதற்கென தமது பொன்னான நேரத்தை அளித்த தன்னார்வலர்களையும் போற்றும் விதமாக இதுகாறும் நமது சங்கத்தை வழி நடத்திய தலைவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்கின்றனர்.

தமிழ் வளர்ச்சிக்கு தமிழ்ப்பள்ளி ஆற்றி வரும் அரும்பெரும் தொண்டுகளை விளக்கும் கட்டுரைகள், கவிதைகள், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள், இந்தியாவிலிருந்து வருகை தரும் பெற்றோர்களின் கருத்துகள் மற்றும் வாழ்த்துகள் ஆகியவை மலருக்கு மேலும் சுவை கூட்டுகின்றன.

மலரின் சிறப்பு அம்சமாக, தமிழக முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள், தமிழக அமைச்சர் மாண்புமிகு T.R.B. ராஜா அவர்கள், தமிழ்திரையுலகின் நட்சத்திரம் திரு. சிவகார்த்திகேயன் அவர்கள் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெற்றுள்ளன. வாழ்த்திய உள்ளங்களுக்கும், வாழ்த்துகளை ஒருங்கிணைத்த திரு. கார்த்திகேயன் அவர்களுக்கும் திரு. வைத்தீஸ்வரன் அவர்களுக்கும் எங்கள் நன்றிகள்.

வர்ஜினியா மாகாணத்தின் செனட்டர்கள், ஆளுநர், பெட்னா தலைவர் என பல்வேறு தலைவர்களும் அனுப்பியுள்ள வாழ்த்துகள் நமது சங்கத்தை பெருமைப்படுத்துவதோடு, மேலும் சிறப்பாக நாம் செயல்பட ஊக்கம் அளிக்கின்றன என்றால் மிகையாகாது.

இம்மலர் இரிச்மண்டு தமிழ்ச்சங்கத்தின் 25 ஆண்டு வரலாற்றுக்கான ஆவணமாக அமையும் என நம்புகிறோம். அனைத்து தரப்பினரும் ரசிக்கும் வகையில் பல்சுவை மலராக வெளிவரும் இரிச்மண்டு தமிழ்ச்சங்க வெள்ளி விழா மலர் உங்கள் அனைவர் மனங்களிலும், ஆவணமாக உங்கள் இல்லங்களிலும் நீங்கா இடம் பெறும் என உறுதியாக எண்ணுகிறோம்.

இரிச்மண்டு தமிழ்ச்சங்க வெள்ளி விழா மலர் ஆசிரியர் குழு

## ஸ்ரீலதா சந்தானகோபாலன்

**ஆசிரியர்**

# வெள்ளி விழா மலர் ஆசிரியர் குழு



நித்யா கணபதி



இளமாறன் அன்பழகன்



சிவசக்தி
அறிவுக்கண்ணணன்

**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

08.03.2024

**வாழ்த்துச் செய்தி**

அமெரிக்காவின் வர்ஜினியா மாகாணத்தில் 1999–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் 25–ஆம் ஆண்டு நிறைவு விழா, வரும் ஏப்ரல் மாதம் 20–ஆம் தேதி நடைபெறுவதை அறிந்து மகிழ்கிறேன்.

*"தமிழ் எங்கள் உயிர் என்பதாலே – வெல்லும்*
*தரமுண்டு தமிழருக்குப் புவிமேலே"*

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் முழக்கத்தை உண்மையாக்கும் வகையில், அமெரிக்காவின் இரிச்மண்டில் இயங்கி வரும் இத்தமிழ்ச் சங்கம், உலகளாவிய தமிழர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் இருந்து மட்டுமின்றி, இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளைச் சேர்ந்த தமிழ் உறவுகளும் தங்களது குடும்பத்துடன் உறுப்பினர்களாகச் சேர்ந்து ஆக்கப்பூர்வமான தமிழ்ப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் இலச்சினைச் சின்னத்திலேயே "ஒற்றுமையே உயர்வு" என்ற சொற்றொடர் இடம் பெற்றிருப்பது சிறப்புக்குரியது. தமிழினம் தழைக்கவும், புவியரங்கில் தலைநிமிர்ந்து நிற்கவும் பல்வேறு தளங்களில் இத்தமிழ்ச் சங்கம் தனது பணிகளை ஆற்றி வருவது பாராட்டுதலுக்குரியது.

குறிப்பாக, தமிழ்ப் பள்ளி ஒன்றை நடத்தி அந்நிய மண்ணில் வளரும் குழந்தைகளுக்கு தாய்த்தமிழைக் கற்பிக்கும் உன்னதமான பணியை இத்தமிழ்ச் சங்கம் ஆற்றி வருகிறது. அவ்வாறு தமிழ் பயிலும் மாணவர்களுக்கு பல்வேறு தமிழ்மொழித் திறன் சார்ந்த



போட்டிகளை நடத்தி, தாய்த்தமிழில் அவர்களது ஆற்றலை வளர்த்தெடுக்கும் பாராட்டுதலுக்குரிய பணிகளையும் முன்னெடுத்து வருகிறார்கள்.

அத்துடன், தமிழ்சார்ந்தும், தமிழர்கள் சார்ந்தும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வரும் இரிச்மண்டு தமிழ்ச் சங்கம், என்றென்றும் தமிழ்கூறும் நல்லுலகின் புகழ் பரப்பும் அமைப்பாகத் தனது அறப்பணிகளை வெற்றிகரமாகத் தொடர வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

**(மு.க.ஸ்டாலின்)**

பெறுநர்

**திரு. மார்செலின் லூவிஸ்மார்ட்டின் அவர்கள்,**

தலைவர்,

இரிச்மண்டு தமிழ்ச்சங்கம்.

**முனைவர் டி.ஆர்.பி. ராஜா**
அமைச்சர்
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு
மற்றும் வர்த்தகம்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

நாள் 1.3.24.

**வாழ்த்துச்செய்தி**

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி என தமிழினத்தின் தொன்மையைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டிற்கு உண்மையாகவும் அதனை வளப்படுத்தும் வகையில் உழைத்தும் பெருமை சேர்ப்பவர்கள். அதே நேரத்தில் எத்திசையில் இருந்தாலும் தங்களின் தாய்மொழி உணர்வை என்றும் மறவாத நெஞ்சம் கொண்டவர்கள். முச்சங்கம் வைத்து தமிழை வளர்த்த பெருமை மிகுந்த மரபு கொண்டது நம் தாய்மொழி.

வேலைவாய்ப்பினைத் தேடி அயல்நாடு சென்ற நம் தமிழர்களும் தாய்மொழியின் சிறப்பை மறவாமல் அதனைப் போற்றி வளர்த்திடும் பெரும்பணியை மேற்கொண்டு வருவதால் தான் இந்தக் கணினித் தொழில்நுட்பக்காலத்திலும் தொன்மை மிகுந்த செம்மொழியாம் தமிழ்மொழி சிறப்புற்று விளங்கிகுறது.

வர்ஜினியா மாநிலத்தின் தலைநகராம் இரிச்மண்டு நகரில் அமைந்துள்ள இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் சங்க உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்கா வாழ் மக்களாகிவிட்ட இளந்தலைமுறையினரிடமும் மொழியுணர்வையும் பண்பாட்டையும் ஊட்டி வளர்க்கும் சீரிய பணியினை இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் கடந்த 25 வருடங்களாக செய்து வருகின்றது என்பதை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இக்குழுவினரின் பணி மென்மேலும் செம்மையாக தொடர்வதற்கும் மலர் சிறக்கவும் எனது நல்வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் அன்புடன் தெரிவித்து கொள்கிறேன்.

வாழ்க இரிச்மண்டு தமிழ்ச்சங்கம்! வெல்க தமிழ் எந்நாளும்!!

நன்றி.

அன்புடன்,

1/3/24

(முனைவர்.டி.ஆர்.பி.ராஜா)



# COMMONWEALTH of VIRGINIA

## *Office of the Governor*

Glenn Youngkin
Governor

April 20, 2024

Dear Friends,

On behalf of the Commonwealth of Virginia, I want to extend my warmest congratulations to Richmond Tamil Sangam on its 25th anniversary. This is a momentous occasion, and we are proud to recognize the organization's unique history and culture.

Virginia is a melting pot of cultures and ethnicities, and we are grateful to have a vibrant and flourishing Tamil community among us. The Tamil people have added a rich tapestry of diversity to our society and have made significant contributions to our economy, academia, and civic life as entrepreneurs, educators, and community leaders. Celebrations like this remind us of the importance of community and the promise of a bright future.

The First Lady and I encourage all Virginians to learn more about Tamil culture and history. We look forward to seeing all the great things you will accomplish in the years ahead and strengthen the Spirit of Virginia.

Sincerely,

Glenn Youngkin



MARK R. WARNER
VIRGINIA

UNITED STATES SENATOR
WASHINGTON, D.C.

April 20, 2024

Dear Mr. Lovismartin,

I am pleased to extend my warmest congratulations to you and the executive committee and members of Richmond Tamil Sangam as you celebrate the organization's $25^{th}$ anniversary.

Richmond Tamil Sangam creates an environment for its members in which lasting friendships can be established while participating in cultural events together. Language plays such an important role in each culture; your work has been vital in raising awareness and furthering knowledge of the Tamil language in the Richmond region. I commend you for your tremendous service.

On this important occasion, I am very pleased to join with your families, friends, and community in wishing Richmond Tamil Sangam continued success in the years to come.

Sincerely,

MARK R. WARNER
United States Senator



Tim Kaine
Virginia

April 20, 2024

Richmond Tamil Sangam
11232 Prescott Place
Glen Allen, Virginia 23059

Dear Friends:

It gives me great pleasure to congratulate Richmond Tamil Sangam (RTS) on its 25th Anniversary. I commend RTS on this significant milestone.

The Richmond Tamil Sangam has played an instrumental role in raising awareness and fostering togetherness within the Greater Richmond area. Since it was established, RTS has positively impacted countless lives and continued to promote the cultural significance of the Tamil language and values. We must never forget the importance of community and diversity in the Commonwealth, and Richmond RTS has set a great example for everyone.

Thank you for the valuable work you are doing and please accept my best wishes for another successful year!

Sincerely,

Tim Kaine



அமுதே தமிழே, அழகிய மொழியே.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவர்க்கும் வணக்கம். வடஅமெரிக்காவில் தொன்மை வாய்ந்த கூட்டமைப்பு என்னும் செருக்குடன் பேரவை 36 ஆண்டுகள் தொடர்ந்து தமிழர்களின் குரலாக இருந்து வருகிறது. பேரவையின் தமிழ்-தமிழர் நலன் சார்ந்த குறிக்கோள்கள் தான் என்னையும் உங்களையும் பேரவையின் பால் ஈர்த்து தன்னார்வலத் தொண்டாற்ற அழைத்தன.

நன்முறையில் கோலாகலமாக வெள்ளிவிழா கொண்டாடும் இரிச்மண்டுத் தமிழ்ச் சங்கத்தினை முதலில் வாழ்த்துகிறேன். வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் சார்பாக இரிச்மண்டுத் தமிழ்ச் சங்கத்தினர் அனைவர்க்கும் வணக்கம்.

நண்பர்களே! *இந்த வெள்ளிவிழா நாளில், நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் நம்மை விட்டுப் பிரியும் போது இந்தச் சந்திப்பதற்குமுன் இருந்ததைவிட நல்ல மனநிலையுடன் விலகவேண்டும் என்று உறுதி எடுப்போம்.* எனது இந்தப் புரிதலுக்குத் தமிழுக்கும் தமிழ்க் கலைக்கும் கலைஞர்களுக்கும் தான் நான் நன்றி சொல்லவேண்டும். தமிழையும் தமிழ்க் கலைகளையும் வளர்க்க அயராது உழைப்பவர்கள் மீது எனக்குத் தனி மரியாதையும் அன்பும் எப்போதும் உண்டு. தமிழையும் தமிழ்க் கலைகளையும் வளர்த்தெடுப்பதில் இரிச்மண்டுத் தமிழ்ச் சங்கம் யாருக்கும் சளைத்ததல்ல. மேலும் "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே, அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என்ற மகாகவியின் கூற்றினையும் “எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு” என்ற பாவேந்தரின் கூற்றினையும் கருப்பொருளாக்க் கொண்டு தமிழ்ப் பள்ளியினை பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு சங்கம் நடத்தி வருவது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் சங்கத்தினர்க்கும் பள்ளி மாணவர்க்கும் கொண்டு சேர்க்கும் இரிச்மண்டுத் தமிழ்ச் சங்கத்தினையும் அதன் தலைவர் மார்சலின், செயற்குழுவினர், மற்றும் சங்கத்தின் தூண்களான உறுப்பினர்கள் அனைவரையும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துகிறேன்.

இந்த மடலை நான் எழதும் அதே வாரத்தில் தான் உலக மகளிர் நாள் கொண்டாடப்படுகிறது. இங்கு உங்கள் பள்ளியின் முகப்பில் பொறிக்கப்பட்டிருக்கும் பாவேந்தர் எழுதிய மற்றோர் வரிகள்தான் எனக்கு நினைவிற்கு வருகின்றன, “ஏணை அசைத்தலும் கூடும் -- அதை / யார் அசைத் தாலுமே ஆடும்.” ஆம், தொட்டல் யார் அசைத்தாலும் ஆடும். பெண்கள் மட்டும் தான் சில பணிகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அறவே அகலவேண்டும். நம் இல்லங்களிலும் நாம் இதனை வழக்கிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அருள் கூர்ந்து விண்ணப்பிக்கிறேன்.

முடிவாக என் சார்பாகவும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவை சார்பாகவும் உங்களை வரும் சூலைத் திங்களில் சான் ஆண்டோனியோ மாநகரில் நடக்க இருக்கும் 37-ஆவது பேரவை விழாவில் சந்திக்க ஆவலாக இருக்கிறேன். நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்.

வாழ்க வளமுடன் நும் வாழ்வை ஆள்க அறமுடன்.
நட்புடன்,
முனைவர் பாலா சுவாமிநாதன்
தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவை



# இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்
# 25ஆவது ஆண்டு விழா
# வாழ்த்து மடல்

நம் தாய்நாடான இந்தியாவிலிருந்து புறப்பட்டு வந்து, கடல் கடந்து பல ஆயிரம் மைல்களுக்காப்பால் இருக்கும் அமெரிக்காவில் வாழும் நம் தமிழர்கள், ஓர் இடத்தில் ஒன்று கூடி மகிழவும், ஒருவருக்கொருவர் நேரடியாக சந்தித்துக் கொள்ளவும், நம் நாட்டில், நாம் கற்ற மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம் இவை அனைத்தையும் பேணிக்காப்பதற்காகவும் நடத்தப்படுவதே தமிழ்ச் சங்கம்..!

அந்த வகையில் வெர்சீனியா மாநிலத்தின் தலைநகரில் இயங்கும் இரிச்மண்டு தமிழ்ச் சங்கம் 25ஆவது ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுகிறார்கள்..!

இந்த சங்கம் மேலும் 100 ஆண்டுகாலம் சிறந்து விளங்கவும், நம் சமுதாய மக்களுக்கு தொடர்ந்து பல சேவைகளை செய்திடவும் நான் மனமாற வாழ்த்துகிறேன்...!

வாழ்க தமிழ்..!

வளர்க நம் தமிழ் சமுதாயம்..!!

என்றும் அன்புடன்

உங்கள்

**திரு. நெப்போலியன்**

**நடிகர், தொழிலதிபர் மற்றும் முன்னாள் இந்திய அமைச்சர்**

கார்த்திகேய சிவசேனாபதி
தலைவர்
அயலக தமிழர் நல வாரியம்
குட்டப்பாளையம் சாமிநாதன் இல்லம்,
குட்டப்பாளையம், காங்கயம் வட்டம்,
திருப்பூர் - 638 108, தமிழ்நாடு.

Karthikeya Sivasenapathy
Chairman
Non Resident Tamils Welfare Board
Kuttapalayam Saminathan Illam,
Kuttapalayam, Kangayam Taluk,
Tiruppur - 638 108, Tamil Nadu.

+91 74186 74257
+91 96559 12456
nrtwb.chairman@gmail.com

16-04-2024

பெறுநர்,
தலைவர்,
இரிச்மெண்டு தமிழ் சங்கம்

அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்தில் 1999 -ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ரிச்மண்டு தமிழ் சங்கத்தின் 25- ஆம் ஆண்டு நிறைவு விழா வரும் ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதி நடைபெறுவதையறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழை என்னுயிர் என்பேன்
கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனிய என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்.

முழக்கத்தை மெய்ப்பிக்கும் வகையில் அமெரிக்காவின் ரிச்மண்டில் இயங்கி வரும் இத்தமிழ்சங்கம் உலகளாவிய தமிழர்களை உறுப்பினர்களாக கொண்டு செயல்பட்டு வருவது பாராட்டுதலுக்கு உரியது.

இந்தியாவிலிருந்து ( தமிழ்நாடு) மட்டுமின்றி இலங்கை, சிங்கப்பூர் ,மலேசிய நாடுகளை சேர்ந்த தமிழ் உறவுகளும் தங்களது குடும்பத்துடன் உறுப்பினர்களாக சேர்ந்து ஆக்கபூர்வமான தமிழ்ப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கணியன் பூங்குன்றனார் வரிகளுக்கு ஏற்ப ரிச்மண்டு தமிழ் சங்கம், ஒற்றுமையே உயர்வு என்னும் வாக்கிற்கு இணங்க செயல்படுவது சிறப்புக்குறியது.

கார்த்திகேய சிவசேனாபதி
தலைவர்
அயலக தமிழர் நல வாரியம்

குட்டப்பாளையம் சாமிநாதன் இல்லம்,
குட்டப்பாளையம், காங்கயம் வட்டம்,
திருப்பூர் - 638 108, தமிழ்நாடு.

Karthikeya Sivasenapathy
Chairman
Non Resident Tamils Welfare Board

Kuttapalayam Saminathan Illam,
Kuttapalayam, Kangayam Taluk,
Tiruppur - 638 108, Tamil Nadu.

☎ +91 74186 74257
+91 96559 12456
nrtwb.chairman@gmail.com

தமிழினம் தழைக்கவும் உலகில் தலைநிமிர்ந்து நிற்கவும் பல்வேறு தளங்களில் இத்தமிழ்ச் சங்கம் தனது பணிகளை ஆற்றி வருவது பாராட்டுதலுக்குரியது

குறிப்பாக தமிழ்ப் பள்ளி ஒன்றை நடத்தி வெளி நாடுகளில் ணில் வளரும் குழந்தைகளுக்கு தாய்மொழியாம் தமிழை கற்பிக்கும் உன்னதமான பணியை இத்தமிழ் சங்கம் ஆற்றி வருகிறது. அவ்வாறு தமிழ்ப் பயிலும் மாணவர்களுக்கு பல்வேறு தமிழ் மொழி திறன் சார்ந்த போட்டிகளை நடத்தி தாய் தமிழில் அவர்களது ஆற்றலை வளர்த்தெடுக்கும் பணிகளையும் முன்னெடுத்து வருகிறார்கள்.

பல்வேறு பணிகளை மேற்கொண்டு வரும் ரிச்மண்டு தமிழ்ச் சங்கம் என்றென்றும் தமிழ் கூறும் நல்லுலகின் புகழ் பரப்பும் அமைப்பாக தனது அறப்பணிகளை வெற்றிகரமாக தொடர வேண்டும் என்று உளமார வாழ்த்துகிறேன்.

நன்றி!!

அன்புடன்

கார்த்திகேய சிவசேனாபதி.



# D SIVAKARTHIKEYAN

ACTOR - PRODUCER

**வாழ்க தமிழ்**

இதயம் நிறைந்த வணக்கம்.

அமெரிக்காவின் வர்ஜினிய மாகாணத்தில் 1999 ஆம் ஆண்டு இரிச்மண்டில் தொடங்கப்பட்ட தமிழ் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் தேதி நடைபெறுவதை அறிந்து மனதெல்லாம் மகிழ்ச்சி.

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத**
**தமிழென்று சங்கே முழங்கு"**

- என்ற வைர வரிகளுக்கு வலிமை சேர்க்கும் வகையில் இரிச்மண்டில் இயங்கும் இத்தமிழ் சங்கம் உலகில் இருக்கும் எண்ணற்ற தமிழர்களோடு இணைந்து இயங்குவதில் ஒரு தமிழனாக நானும் பெருமைப்படுகிறேன்.

இச்சங்கத்தில் இருக்கும் தமிழர்கள் ஒரு குடும்பமாக இணைந்து தங்களின் பொன்னான நேரத்தை இதற்கென ஒதுக்கி தமிழும் தமிழர்களும் வாழ்வில் உயர பாடுபடுவது குறித்து அறிந்தேன்.

குறிப்பாக அங்கிருக்கும் தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் வழிக் கல்வியும் தனித்திறன் வகுப்பும் கல்வி கலாச்சாரம் குடும்ப ஒற்றுமை என்று நமது பாரம்பரியத்தை கடல் கடந்தும் கடைபிடிக்கும் உங்கள் உயர்ந்த பண்பை பாராட்டுகிறேன்.

தொடர்ந்து தமிழ் கூறும் நல் உலகம் தங்களை வியந்து பார்க்கும் அளவிற்கு சாதனைகள் படைத்து உயர்ந்த நிலையை அடைய உங்களில் ஒருவனாய் வாழ்த்துகின்றேன்.

நன்றி
வணக்கம்

அன்புடன்,

(D.சிவகார்த்திகேயன்)



## இரிச்மண்டு தமிழ்ச்சங்கத்தின்
## வெள்ளி விழாவிற்கு எங்களது வாழ்த்துக்கள்

SHORT PUMP HOME & REAL ESTATE

Powered by:

REALTY
Central Virginia Realty Inc.

Represents Legault Homes

EQUAL HOUSING OPPORTUNITY

# YOUR **HOME**
# OUR **COMMUNITY**

Let me guide you through your
next buying or selling transaction



Kumar Ramanathan

Kumar Ramanathan
(O) 804 - 399 - 0483
(C) 609 - 902 - 6058
kumar@shortpumprealestates.com



# கொண்டாடுவோம் எதிர்நோக்குவோம்

வணக்கம்,

இவ்வாண்டு தன் வெள்ளி விழாவை பெருமையுடன் கொண்டாடும் இரிச்மண்டு தமிழ் சங்கத்தின் அங்கத்தினர் அனைவருக்கும் வாழ்த்துகள் !

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து தமிழ்க் குடியினர் பணி மற்றும் தொழில் நிமித்தமாக அமெரிக்க தேசத்துக்கு வந்து, விர்ஜினியா மாகாணத்தின் தலைநகரான இரிச்மண்டில், தனக்கென ஒரு அடையாளத்தை நிறுவி கால் நூற்றாண்டு ஆகிறது. இந்த நீண்ட பயணத்தில், ஒற்றுமையான ஒரு குடும்பமாக, தமிழ்க் கலாச்சாரத் தூதுவர்களாக மற்றும் அனைத்துத் தரப்பு மக்களும் மெச்சும் சமூகமாக அந்த அடையாளம் விரிவடைந்துள்ளது என்றால் மிகையாகாது.

இந்த இரிச்மண்டு தமிழ்ச் சங்கக் குழந்தையைப் பெற்று, பேணிப் பாதுகாத்து, அனுபவங்களை ஊட்டி வளர்த்து, திமிறிடும் இளங்காளையாய் இன்று நமக்கு அளித்திருக்கும் நம் முன்னத்தி ஏர்களாம், 1999 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இருந்த நிர்வாகக் குழுவினர் அனைவருக்கும் இந்நேரத்தில் நம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வோம்.

சிறப்புமிகு இத்தருணத்தில் நிர்வாகக் குழுவில் பணியாற்ற வாய்ப்புப் பெற்றமைக்காக நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த 15 மாதங்களில், புதிதாக ஆடவர் கேளிக்கை இரவு, தொழில் முனையும் தமிழ்ப் பெண்டிர் வழங்கிய "நங்கை", CPR பயிற்சி, உயர் நிலைப் பள்ளிக்கான தயாரிப்பு மற்றும் தாயம் போட்டி ஆகிய நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.









சங்கத்தின் சட்ட திட்டங்கள் முழுமையாக மறுசீரமைப்பு செய்யப்பட்டது.

ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு ஒரு நிகழ்ச்சி என பொங்கல் வாழை இலை விருந்து, கோடை முகாம், மகளிர் கேளிக்கை இரவு, கைப்பந்து போட்டி , எறிபந்து போட்டி, உள்ளரங்க விளையாட்டுப் போட்டி, சிறார் கலை நிகழ்ச்சி, பெரியவர் கலை நிகழ்ச்சி, டென்னிஸ் பயிற்சி மற்றும் மாதாந்திர கதம்பம் இதழ் ஆகியவை புது உத்வேகத்துடன், தொழில் முனையும் நல்லோர் ஆதரவுடன் நடத்தப்பட்டன.

நமது தமிழ்ப் பள்ளியில் முதல் முறையாக, உயர் நிலை மாணாக்கர்கள் தனிப்பேருந்தில் வர்ஜினியா மாநில சட்ட மன்ற கட்டிடத்திற்கு சுற்றுலா சென்று வந்தனர். ஆத்திச்சூடி, திருக்குறள் போன்ற பல்வேறு போட்டிகளில் நம் மாணவர்கள் பங்கேற்று பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர். நமது பள்ளியில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் அங்கீகாரம் பெற்றுத்தர, நம் தமிழ்ப் பள்ளி இயக்குனர்கள் தொடர்ந்து முயன்று வருகிறார்கள்.

இவ்வேளையில் நமது வழிகாட்டும் குழுவையும், தமிழ்ப்பள்ளியின் ஆசிரிய பெருமக்களையும், தன்னலமற்ற தன்னார்வலர்களையும் மற்றும் சங்கத்தின் முதுகெலும்பாம் நிர்வாகக்குழுவினரையும் நன்றியுடன் நினைவு கூர்வோம்.

இப்பெருமைமிகு தருணம் நமக்குச் சொல்லும் செய்திகள் யாவை ?

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தக் குடியாம் நாம், வளம் செறிந்த நமது மொழியை, பாரம்பரியத்தை, கலாச்சாரத்தை மற்றும் இலக்கியங்களை, நம் வழித்தோன்றல்களும் அறிந்து அதனுடன் ஒன்றி வாழ அயராது வழி வகுப்போம். இதுகாறும் நம்முள் நிலவிவந்த அதே ஒற்றுமை, தமிழையே ஆதாரமாகக் கொண்டு, வருங்காலங்களிலும் நம்முள் நிலைத்திருக்கச் செய்வோம். நாம் வாழும் நல்லூராம் இந்த இரிச்மண்டில் நம் முத்திரையை தொடர்ந்து பதிக்கும் அதே வேளையில், நாம் பிறந்த மண்ணுக்கும், இவ்வூருக்கும் திருப்பி வழங்கும் வழக்கத்தைத் தொடர்வோம்.

வாழ்க தமிழ் !

**மார்செலின் லூவிஸ்மார்ட்டின்**
**தலைவர்**

## 1999-2000

தலைவர்



திரு. பழநியப்பன்
இலக்குவன்

தலைவர்



திரு.சேகர்
வீரப்பன்

செயலாளர்



திருமதி.
சுபா ஸ்ரீதர்

# நாங்கள் விதைத்த விதை

25 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் விதைத்த விதை, இன்று செடியாகி, மரமாகி , காய்த்து கனிந்து நிற்கிறது. இரிச்மண்டு தமிழ் சங்கம் மென்மேலும் வளர்ந்து நூற்றாண்டு காண சங்கத்தின் முதல் செயற்குழு சார்பாக வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். சங்கத்தின் முதல் தலைவராகும் வாய்ப்பு கொடுத்த இரிச்மண்டு தமிழ் சமூகத்திற்கு என் மனமார்ந்த நன்றி.

சங்கத்தின் ஆரம்ப நாட்கள் கண் முன்னே வருகிறது. ரிச்மண்டில் தமிழ் சங்கம் வேண்டுமா என்ற கேள்விக்கு, இருக்கும் தமிழ் குடும்பங்களுக்கும் புதிதாக குடியேறும் தமிழ் குடும்பங்களுக்கும் ஒரு பாலமாக இருப்பதற்கும், தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சார வளர்ச்சிக்கும், அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கும் ஒரு தமிழ் சங்கம் அவசியம் தேவை என்று சில தமிழ் குடும்பங்கள் தீப் ரன் பூங்காவில் நடந்த கோடை கால சந்திப்பில் முடிவெடுத்தனர். பின்னர் திருமதி சுபா ஸ்ரீதர் அவர்கள் இல்லத்தில் சந்தித்து சங்கத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் எக்கோ லேக் பூங்காவில் நடந்த பொதுக்கூட்டத்தில் அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சங்கத்தின் முதல் செயற்குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள். இரிச்மண்டு தமிழ் சங்கம் 1999-ம் ஆண்டு வர்ஜினியா மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டது. திரு சேகர் வீரப்பன் சங்கத்தின் இலச்சினையை உருவாக்கினார்.

சங்கம் ஆரம்பித்த முதல் ஆண்டில் உறுப்பினர் எண்ணிக்கை 57 ஆக இருந்தது. அப்போது எங்களால் உள்ளூர் கலை நிகழ்ச்சிகள் மட்டுமே ஏற்பாடு செய்ய முடிந்தது. 25 ஆண்டு கால வளர்ச்சி பிரமிக்க வைக்கிறது. இன்று தமிழ் பள்ளி, பிரம்மாண்ட கலை நிகழ்ச்சிகள் என்று செயல்பாடுகள் சிறப்பாக நடைபெறுவது மிக்க மகிழ்ச்சி தரும் விடயம்.

2000-இல் தமிழ் சங்கத்தை ஒரு இலாப நோக்கற்ற (501(c )(3) nonprofit) அமைப்பாகப் பதிவு செய்வதற்குத் தேவையான அடிப்படை வேலைகளைத் துவங்கினோம். வருவாய்த் துறை (IRS) அதிகாரிகளுடன் நேர் காணல் உட்பட, இதற்கு வேண்டிய அனைத்து வேலைகளிலும் திருமதி சுபா ஸ்ரீதர் முக்கியப் பங்கு வகித்தார். இந்த விடா முயற்சியின் காரணமாக, இரிச்மண்டு தமிழ் சங்கம், 2000-ஆம் ஆண்டு இறுதியில், இலாப நோக்கமற்ற நிறுவனம் என்ற அங்கீகாரத்தை பெற்றது.

வெள்ளி விழா காணும் சங்கத்திற்கு மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்._

# 1999-2000

## தலைவர்கள்



திரு. பழநியப்பன் இலக்குவன்



திரு.சேகர் வீரப்பன்



செயலாளர்

திருமதி. சுபா ஸ்ரீதர்



பொருளாளர்

திருமதி. பார்கவி கணேஷ்



சமூக சேவை

திருமதி. ராஜி சுப்பையா



உறுப்பினர் சேர்க்கை

திருமதி. தேவகி



சமூக சேவை

திருமதி. நளினி பிரேம்குமார்



கலை

திருமதி. உமா செட்டி



மத நடவடிக்கை ஒருங்கிணைப்பாளர்

திரு. ஹரி வெங்கடேசன்



தொடர்பு அலுவலர்

திரு. ராஜ் பிரசாத்

நிர்வாக ஆலோசகர்

திரு. நரசிம்மாச்சாரி

## 2001-2002



# தமிழ் சங்கம் புரிந்த சாதனை

2001-2002 ஆண்டுகளில் திரு சுப்பையா அவர்கள் தலைமையில் இரிச்மண்டு தமிழ் சங்கம் புரிந்த சாதனைகளை இங்கே வரையறுத்துள்ளோம்.

நிர்வாகத்தினர் மாறும்பொழுது முந்தைய நிர்வாகக் குழுவின் சிந்தனைகளும் சாதனைகளும் தொடர்ந்து நடைபெற "தொடர் குழு" ஒன்று சேர்க்கப்பட்டது.

இரிச்மண்டு தமிழ் சங்கம் 'அசம்பாவித 9/11' க்கு நிதி திரட்டும் பொருட்டு திருமதி ரேவதி அவர்கள் பரதநாட்டிய நிகழ்ச்சி நடத்தி பெருந்தொகை கொடை செய்தது.

இரிச்மண்டில் தமிழர்களை ஒன்று சேர்க்க, இணைந்து வாழ, தமிழ் சங்கம் மாதம் ஒரு கலை நிகழ்ச்சி நடத்தி பெரும் தொண்டு புரிந்தது.

அவ்வண்ணம் நடத்திய நிகழ்ச்சிகளில் சில: குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் மேடை ஏறி பாட, ஆட, நாடகம் நடத்த சந்தர்ப்பங்கள் தரப்பட்டன. அநேகர் பங்கேற்று சங்கத்துக்கு பெருமை தேடித் தந்தனர். அங்ஙனம் பங்கேற்ற குழந்தைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இரிச்மண்டு திரு கணேஷ் அவர்கள் வில்லு பாட்டு நடத்தினார்.

"கிரேசி மோகன்" நாடக குழு "ஜுராசிக் பேபி" என்ற நகைச்சுவை நாடகத்தையும், நமது சங்க உறுப்பினர் திரு ரமேஷ் பாலகிருஷ்ணன் அவர்கள் எழுதிய "யமனிருக்க பயமேன் " நாடகத்தையும் அரங்கேற்றினர்..

மறைந்த நண்பர் திரு முத்து சுப்பிரமணியன் அவர்கள் நடுவராக நகைச்சுவை பட்டிமன்றம் "சமையலில் சிறந்தவர் ஆண்களா, பெண்களா" என்ற தலைப்பில் நடைபெற்றது. அனைவரும் பங்கேற்று இன்புற்றனர்.

திருமதி ராஜி, திருமதி நளினி அவர்கள் முன்னிலையில் சங்கம் வீடு இல்லாதோருக்கு (homeless) உணவு கொடை செய்தது.


திரு ரவி, திரு ஹரி அவர்கள் தலைமையில் காரம் (carrom), மேசை டென்னிஸ் (table tennis), டென்னிஸ் போன்ற பற்பல விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் நடத்த தங்கள் இல்லங்களை பகிர்ந்து கொண்ட உறுப்பினருக்கு தகடுகள் (plaques) வழங்கப்பட்டன.

சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை 100 க்கும் மேலானது. இங்கே சங்க குழுவில் இல்லாதிருந்தும், ஒரு உறுப்பினரின் உயர்ந்த சேவை பற்றி குறிப்பிட வேண்டும். தினமலர் பத்திரிகை திரு லட்சுமிபதி அவர்களின் புதல்வி, திருமதி மல்லிகா மூர்த்தி, இரிச்மண்டில் உள்ள ஒவ்வொரு தமிழருடனும் பேசி ஊக்குவித்து உறுப்பினர் ஆக்கினார். மெச்சத்தக்க சேவை. நன்றி மல்லிகா.

இந்த இரண்டு ஆண்டுகளில் சங்க விதி முறைகளை (by laws), முன்னோக்கு பார்வையுடன் முறையாக மாற்றி எழுதினோம். திரு சுப்பையா அவர்கள் தலைமையை பாராட்டி சங்கம் அவருக்கு ஒரு தகடு வழங்கியது.

இரண்டு ஆண்டு காலம் முடிந்து அடுத்த குழுவினர் பொறுப்பு ஏற்கும் நிகழ்வுகளை செவ்வனே செய்து பின் வரும் சந்ததியருக்கு ஒரு வழி காட்டியாக பற்பல ஏற்பாடுகள் செய்து வைத்தோம்.

# செயற்குழு 2001-2002



தலைவர்
திரு. மந்திரம் சுப்பையா



செயலாளர்
திரு. கணபதி கார்த்திகேயன்




பொருளாளர்
திரு. ராம் ராமச்சந்திரன்




கலாச்சார குழு
திருமதி. ராஜி தேவதாசன்



கலாச்சார குழு
திருமதி. நளினி சேகர்



உறுப்பினர் குழு
திரு. நடராஜ மூர்த்தி




உறுப்பினர் குழு
திரு. ராம்நாத் அய்யர்



தொடர்பு குழு
திரு. ஹரி வெங்கடேசன்



சமூக சேவை குழு
திரு. நாகு பரசு



மதக் குழு நடவடிக்கை
திரு. வெங்கட் குருநாதன்



இணையதள/ விளையாட்டு குழு
திரு. ரவி திருவேங்கடத்தான்



இணையதள/ விளையாட்டு குழு
குமாரி லட்சுமி சீதாராமன்

2003-2004




திரு. வேங்கடேசன்
செட்டியார்

# என்றென்றும் புதுமை

அனைத்திலும் நவீன மயமாகியுள்ள இந்த காலத்தில் ஒரே வீட்டில் இருந்தாலும் முகம் பார்த்து பேச முடியாத அளவுக்கு பரபரப்பாக இருக்கும் வாழ்க்கைச் சூழலில் வெளி நாட்டில் நம் தமிழ் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் பணியில் நம் தமிழ் சங்கம் 25 வது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது நமக்கு மிகவும் பெருமையாக உள்ளது. இந்த ஆண்டின் செயற்குழு இதனை முழு முனைப்புடன் புதுமைகள் புகுத்தி சிரமேற்கொண்டு கொண்டாடுவது மிகவும் பெருமைக்குரிய விஷயம்.தலைவர் மார்செலின் தலைமையில் செயல்படும் இந்த குழுவிற்கும், இது வரை செயல்பட்ட அனைத்து குழுவினர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

2003 – 2004 ஆண்டின் செயல்குழு ஏதாவது புதிதாக செய்ய வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்டது.

1. பலமான கட்டமைப்பு வேண்டும் என்பதற்காக சங்கத்தை இலாப நோக்கமற்ற நிறுவனமாக மாற்றி மேனாள் குழுக்கள் பெற்ற அங்கீகாரம் சார்ந்த பிற தகவல்கள் மற்றும் ஆவணங்கள் வழங்கி உறுதி செய்தோம்.
2. மக்கள் தொடர்பை மற்றும் செய்தி தொடர்பை மேம்படுத்த “தமிழ்த்துளி” என்ற பத்திரிக்கை நடத்தியது.
3. வருமானம் தன்னிறைவு பெற நாடகம் மற்றும் திரைப்படங்கள் நடத்தியது.
4. நாடகக் கலையை முன்னிறுத்தி YG மகேந்திரன் நாடகம் அரங்கேற்றப் பட்டது
5. தமிழ்ப்பள்ளி நடத்துவது பற்றி ஆலோசனை நடந்தது.
6. பாரம்பரிய கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கலை மேம்பாடு நிர்வாகிகள் பரதம், கிராமிய இசை, கிராமிய நடனம் போன்ற நிகழ்ச்சிக்கு விழாக்களில் முன்னுரிமை அளித்தனர்.
7. தமிழ் பட்டிமன்றங்கள், தமிழ் கலாச்சாரம் காக்கும் நிகழ்வுகளை நடத்தினர்.
8. உறுப்பினர்களின் ஆர்வத்தை அதிகப்படுத்தி தமிழ் விழாக்களை மிக்க எதிர்பார்ப்புடன் சீரும் சிறப்புமாக நடத்தி மக்களின் மனதில் ஒரு இடத்தை பிடித்த ஒரு முக்கியமான செயற்குழு என்பதை மிக்க பெருமையுடன் இங்கு சொல்ல விழைகிறோம்.

# செயற்குழு 2003-2004



தலைவர்
**வேங்கடேசன் செட்டியார்**



செயலாளர்
**சுந்தரம் ஸ்ரீதர்**



செயலாளர்
**சேகர் வீரப்பன்**



பொருளாளர்
**ஷோபனா கோவிந்தராஜன்,**



பொருளாளர்
**செல்வா நவநீதகுரு**



கலை மேம்பாடு
**புவனா இராம்நாத்**



கலை மேம்பாடு
**பார்கவி கணேஷ்**




சமூக நலம்
**சுசரிதா விக்னேஸ்வர்**



சமூக நலம்
**நட்ராஜ் பழனியப்பன்**




சமூக நலம்
**பாபு பக்தவத்சலு**



மக்கள் தொடர்பு
**சசிகுமார்**



மக்கள் தொடர்பு
**மார்செலின் லூவிஸ்மார்ட்டின்**



விளையாட்டு தகவல்
**சத்யா திருவேங்கடத்தான்**



விளையாட்டு தகவல்
**பவனி ராம்**

## தமிழ்த்துளி ஆசிரியர் குழு



**ஸ்ரீலதா**



**முரளி இராமச்சந்திரன்**



**மீனா வீரப்பன்**



**நாகேந்திரன் பரசு**



**வேங்கடேசன் செட்டியார்**

# 2003-2004

தமிழ் சங்கத்தின் ஆண்டு வேர்கள்

2003-2004

## என்றென்றும் புதுமை

அனைத்திலும் நவீன மயமாகியுள்ள இந்த காலத்தில் ஒரே வீட்டில் இருந்தாலும் முகம் பார்த்து பேச முடியாத அளவுக்கு பரபரப்பாக இருக்கும் வாழ்க்கைச் சூழலில் வெளி நாட்டில் நம் தமிழ் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் பணியில் நம் தமிழ் சங்கம் 25 வது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது நமக்கு மிகவும் பெருமையாக உள்ளது. இந்த ஆண்டின் செயற்குழு இதனை முழு முனைப்புடன் புதுமைகள் புகுத்தி சிரமேற்கொண்டு கொண்டாடுவது மிகவும் பெருமைக்குரிய விஷயம்.

தலைவர் மார்ஷலின் தலைமையில் செயல் படும் இந்த குழுவிற்கும், இது வரை செயல்பட்ட அனைத்து குழுவினர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

2003 - 2004 ஆண்டின் செயல்குழு ஏதாவது புதிதாக செய்ய வேண்டும் என்ற நோக்குடன் செயல் பட்டது.

1. பலமான கட்டமைப்பு வேண்டும் என்பதற்காக சங்கத்தை இலாப நோக்கமற்ற நிறுவனமாக ( Non-Profit Association) ஆக அங்கீகாரம் பெற்றது.
. மக்கள் தொடர்பை மற்றும் செய்தி தொடர்பை மேம்படுத்த "தமிழ்த்துளி " என்ற த்திரிக்கை நடத்தியது.
வருமானம் தன்னிறைவு பெற நாடகம் மற்றும் திரைப்படங்கள் நடத்தியது.
நாடக கலையை முன்னிறுத்தி YG மகேந்திரன் நாடகம் அரங்கேற்றப் பட்டது
மிழ் பள்ளி நடத்துவது பற்றி ஆலோசனை நடந்தது.
ரம்பரிய கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் Cultural Directors பரதம், ிய இசை, கிராமிய நடனம் போன்ற நிகழ்ச்சிக்கு விழாக்களில் முன்னுரிமை னர்.
ட்டி மன்றங்கள், தமிழ் கலாச்சாரம் காக்கும் நிகழ்வுகளை நடத்தினர்.
ர்களின் ஆர்வத்தை அதிகப்படுத்தி தமிழ் விழாக்களை மிக்க
மீதும் சிறப்புமாக நடத்தி மக்களின் மனதில் ஒரு இடத்தை பிடித்த ஒரு
என்பதை மிக்க பெருமையுடன் இங்கு சொல்ல விழைகிறோம்.



வேங்கடேசன் செட்டியார்
தலைவர் (President)

2003 - 2004 ரிச்மாண்ட் தமிழ் சங்கம் செயற்குழு உறுப்பினர்கள்

தலைவர் : வேங்கடேசன் செட்டியார்

செயலாளர் : சுந்தரம் ஸ்ரீதர்
சேகர் வீரப்பன்

பொருளாளர் : ஜோசப்ன கோவிந்தராஜன்
செல்வா நவநீதகிருஷ்ணன்

கலை மேம்பாடு : புவனா இராமநாத
பார்கவி சுவாமி

சமூக நலம் : சுசீந்த்ர விக்னேஸ்வர்
நடராஜ் பழனியப்பன்
பாபு பக்தவத்சலு

மக்கள் தொடர்பு : சசிகுமார்
மார்ஷலின் லெவிஸ் மார்ட்டின்

விளையாட்டு நலம் - சத்யா திருவேங்கடத்தான்
பவனி ராம்

தமிழ்த்துளி - ஆசிரியர் குழு

---

ரிச்மாண்ட் தமிழ் சங்கம்

தமிழ்த்துளி

துளி 1 திவலை 2

4/1/2003

---

ரிச்மாண்ட் தமிழ் சங்கம்

தமிழ்த்துளி

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்;"

துளி - 1 திவலை - 3

07/01/2003

---

ப்ரதோஷ மஹிமை

" To Serve you Best Please Join With Us "

Annual Membership Fees $20/- Per Family

Make your checks payable to "Richmond Tamil Sangam"

To Add/ Renew your Membership, Please Contact

Sasikumar -346-3238

Marcelin levis Martin -290-4233

Send your Name and contact details to the following Address:

Sasikumar,
8631 Aldershot Drive, Richmond, VA - 23294

---

தமிழ்த்துளி

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்;"

துளி - 1 திவலை — 4

10/01/2003

செயற்குழு உறுப்பினர்கள்

-346-3238

### உற்சாகம், ஊக்கம், உறுதி

அன்புள்ள சங்கத்தின் அங்கத்தினர்களே!

உங்கள் அனைவருக்கும் சங்கத்தின் இனிய **தீபாவளி, ரம்ஜான் மற்றும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!!!**
சங்கத்தின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும், முயற்சிகளுக்கும் நீங்கள் காட்டும் ஆதரவு, புதிய முயற்சிகளையும் மற்றும் பல நல்ல நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ள ஊக்கப் படுத்தியுள்ளது. இதனால் இந்த வருடம் இறுதிகளுள் மேலும் பல நல்ல நிகழ்ச்சிகளை உங்களுக்கு அளிக்க இருக்கிறோம்.
**வரும் அக்டோபர் திங்கள் 24ம் தேதி "கலைமாமணி YG மகேந்திரனின் "Judgement Day" நாடகம் நடத்த இருக்கிறோம். மேலும் நவம்பர் திங்களில் "Deepawali and Christmas Festival", நடிகை Shobana வின் பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் நடக்க உள்ளது. இந்நிகழ்ச்சிகளில் உறுப்பினர் ஆக பதிவு செய்**

# Suvai Foods

Fresh, high quality homemade food, every day!



## We offer a variety of tasty and health options:

### Daily Dishes

Sambar
Paruppu Urundai Kulambu
Veg/Chicken/Mutton Gravy
& More

### Briyani

Jackfruit/Veg/Chicken/Mutton
Styles: Hyderabadi/Thalapakatti/Chennai Spl/Donne

### Blistree Products

We offer a wide range of healthy millet grains, millet products & much more.
Visit blistree.us for more products




### Idli/Dosa Batters

We offer a wide range of delicious ready-to-use Idli/Dosa batter:

Regular Batter
Multi-millet Batter
Ragi Batter
Rava Batter
AdaiBatter

### Party Orders

Please call us for your special occasions

**Contact us:**

**804-368-5497**
**(Akila Anand)**

**www.suvaifoods.us**

## 2005-2006











# உற்சாகமான செயற்குழு

நமது சங்கத்தின் ஆரம்ப நாட்களான 2005–06 ஆண்டுகளில் நடத்திய சில விழாக்களை குறித்துப் பார்க்கலாம். திரு. ராம் ராமச்சந்திரன் தலைமையில் இயங்கிய செயற்குழு சங்க விழாக்களில் நம் தமிழ் சமூகத்தின் பங்கேற்றலை மிகவும் அதிகப்படுத்தியது.

திருமதி மல்லிகா நடராஜமூர்த்தி, திருமதி லாவண்யா ரவிச்சந்திரன் இருவரின் அயராத உழைப்பினால் அங்கத்தினர் எண்ணிக்கை முதல் முறையாக நூறைத் தாண்டியது. சிவா பிள்ளையும் திருமதி ஷீலா கார்த்திகேயனும் கிரிக்கெட் மற்றும் இதர விளையாட்டுப் போட்டிகளை நடத்தி நமது அங்கத்தினர் சேர்ந்து விளையாடிக் களிக்க உதவினார்கள்.

பிருந்தா சங்கரும் ரமேஷ் பாலகிருஷ்ணனும் கலைநிகழ்ச்சிகளில் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கு நடனப் போட்டிகள் நடத்தினார்கள். பல வயது குழந்தைகளும் அப்போட்டிகளில் பங்கு கொண்டு சான்றிதழ்களும் கோப்பைகளும் பரிசாகப் பெற்றார்கள். பிருந்தா சங்கரும் வாணி பவனிராம் ஒருங்கிணைத்து வழங்கிய மலர்கள் என்னும் நடன நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்கள் படம் இது.

இரிச்மண்டில் முதல் முறையாக கிரேசி மோகன் அவர்களின் நகைச்சுவை நாடகம் டீப் ரன் உயர்நிலைப் பள்ளியில் அரங்கேற்றப் பட்டது.


உள்ளூர் கலைஞர்களான கார்த்திக், ஸ்ரீதர், சுப்பையா, ரமேஷ், ஹரி, லஷ்மி, ரவி நடித்த நாடகமும் மக்களை மிகவும் மகிழ்வித்தது. கலைநிகழ்ச்சிகளைத் தவிர ஒரு பிக்னிக் நிகழ்ச்சியும் சிறப்பாக நடத்தப்பட்டது.

முதல்முறையாக ஷார்ட் பம்ப் திரையரங்கில் ஒரு தமிழ் திரைப்படத்தையும் இந்த செயற்குழு கொண்டு வந்தது. இந்த செயற்குழு புதுமணத் தம்பதிகள் போட்டி, பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளையும் நடத்தியது.

இரிச்மண்டில் ஹிந்து செண்டர் நடத்திய ஃபெஸ்டிவல் ஆஃப் இந்தியா நிகழ்ச்சியிலும் தமிழ்ச் சங்கம் உற்சாகமாக பங்கு கொண்டு நடத்திய உணவகத்தின் சில படங்கள் இதோ.

இந்த செயற்குழு நிறைவாக நடத்திய நிகழ்ச்சியில் பொருளாளர் ஸ்ரீதர் சுந்தரம் விரிவாக நிதி நிலைமை குறித்து சிறப்பாக விளக்கியதில் சங்கத்தின் நிதி நிலைமை நன்றாக உயர்ந்திருந்தது தெளிவாகத் தெரிந்தது.

அந்நிகழ்ச்சியில் தலைவர் ராம் ராமச்சந்திரனும், ஒவ்வொரு செயற்குழு அங்கத்தினரும் அவர்கள் தொகுத்தளித்த நிகழ்ச்சிகள் குறித்து வரைபடங்கள், புகைப்படங்கள் உதவியுடன் பெருமையுடன் விளக்கினார்கள்.







# செயற்குழு 2005-2006



தலைவர்
ராம் ராமச்சந்திரன்



பொருளாளர்
ஸ்ரீதர் சுந்தரம்



செயலாளர்
திருமதி. ராஜி சுப்பையா



உறுப்பினர் சேர்கை
மல்லிகா நடராஜமூர்த்தி




உறுப்பினர் சேர்க்கை
லாவண்யா ரவிச்சந்திரன்



உறுப்பினர் சேர்க்கை
முரளி சேதுராமன்



விளையாட்டு
ஷீலா கார்த்திகேயன்



விளையாட்டு
சிவா பிள்ளை



கலை
பிருந்தா சங்கர்



கலை
ரமேஷ் பாலகிருஷ்ணன்



திரு. நாகேந்திரன்
பரசு

# ஜேம்ஸ் நதிக்கரையினிலே

இருபத்தைந்தாவது ஆண்டு காணும் நம் தமிழ்ச் சங்கம்! நம் அனைவருக்கும் பெருமையான, பெருமிதமான தருணம். சில நண்பர்களின் ஆர்வத்தில் விதைத்தது இன்று ஆலமரமாய் வளர்ந்து நிற்கிறது. துவக்கி வைத்து இன்று வரை வளர்த்த அனைத்து இதயங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி!

அந்த நாட்களில் நம் சங்கத்தில் அங்கத்தினர் எண்ணிக்கை குறைவாக இருந்தது. 70-80 அங்கத்தினர்கள் சேர்ந்தாலே பெரும் ஆச்சரியம். எண்ணிக்கை நூறு தாண்டினால் விழாவே எடுத்து விடுவோம். அங்கத்தினர் எண்ணிக்கையை அதிகரிக்க , கலைநிகழ்ச்சிகளில் அங்கத்தினர் மட்டுமே பங்கேற்கலாம் என்று ஒரு விதி கொண்டு வந்தோம். ஒரு நடனத்தில் என் பிள்ளை பங்கேற்க ஆண்டு சந்தா கட்ட வேண்டுமா என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அங்கத்தினர் ஆகவில்லை என்றால் கடைசி விநாடியில்கூட மேடையேறாமல் தடுப்போம் என்றெல்லாம் மிரட்டியிருக்கிறோம். லதா தியாகாவைக் கேளுங்கள். நிறைய கதைகள் சொல்வார்.

எங்கள் குழு நடத்திய சில நிகழ்ச்சிகள் இன்றும் (எங்கள்) நினைவில் நிற்கின்றன. ஆண்டுக்கு மூன்று கலைநிகழ்ச்சிகள், கோடையில் பூங்காவில் விளையாட்டு, சமூக சேவைகள் போன்றவை துவக்கக் கால தமிழ்ச் சங்க செயல்பாடுகளாய் இருந்தன.

தமிழ்ச் சங்க கலைநிகழ்ச்சிகளில் பெரிய மாற்றம் கொண்டு வந்தவர் அன்றிலிருந்து இன்றுவரை அனைவரையும் “ஆட்டுவிக்கும்” கவிதா மலைச்சாமி. அப்போதெல்லாம் கலைநிகழ்ச்சிகளில் ஒரு முழு பாட்டுக்கு ஓரிருவர் மட்டுமே நடனம் ஆடுவார்கள். ஒரு நடனத்திற்கு பல பாடல்களைத் தொகுத்து பலர் ஆடுவது கவிதாவின் முத்திரை. ஒவ்வொரு நடனத்திலும் பத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள், பெண்கள் ஆடியதால் அனைவரின் பங்கேற்பும் அதிகரித்தது. முதல்முறையாக தமிழ்ச் சங்க விழாவில் எழுபதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஆடினார்கள். அப்போது ஆடல் சொல்லித்தர யாரும் இல்லாததால், அனைத்து நடன நிகழ்ச்சிகளையும் கற்றுக் கொடுத்து ஒருங்கிணைத்து வழங்கினார்கள் கவிதாவும், லக்ஷ்மியும். நடன நிகழ்ச்சிகளில் குழந்தைகளின் பரதநாட்டியம் அதிகரித்ததில் லக்ஷ்மி வடிவழகின் பங்கும் பெரிது.

# 2007-2008



நிறைய குழந்தைகள் பாடத் துவங்கியிருந்த காலம் அது. ஆகவே திரையிசையைத் தவிர்த்து நம் குழந்தைகளை முழுவதும் கர்நாடக சங்கீதத்தில் தமிழிசை பாடவைத்தது இன்னொரு விழா. சில பாடல்கள் எங்கள் நினைவில் இன்றும் இருக்கின்றன. அதில் வருவாய் வருவாய் கண்ணா என்று அழகாகப் பாடிய பிரியங்காவை சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கண்ணனே அழைத்துக் கொண்டு போய்விட்டான். அந்த விழா நிகழ்ச்சிகளை ஒலி/ஒளி வடிவில் லஷ்மியின் கணவர் வடிவழகு வெளியிட்டார்.

கோடையில் சிறுவர்களுக்கான தமிழ்ப் பள்ளி லதா தியாகாவின் முயற்சியில் ஒரு நண்பரின் வீட்டில் நடத்தினோம். பத்து பதினைந்து சிறுவர்களுக்கு என ஆரம்பித்து இன்று ஒரு தனிப் பள்ளியாக வளர்ந்திருப்பது பெருமைக்குரியது. ரிச்மண்டின் எழுத்தறிவிக்கும் தெய்வங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

ஹாரி பாட்டர் கதைகள் மிகப் பிரபலமாக இருந்த அந்த நாட்களில் சிறுவர்களுக்கு பிடித்த அக்கதைகளில் இருந்து அரவிந்தன் நடத்திய ஒரு வினாடிவினா போட்டிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. இந்தப் போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்று ஒரு சிறுவன் அந்தக் கதைகள் அனைத்தையும் ஒரு முறை திரும்பப் படித்தான். ஒரு போட்டியில் கலந்து கொள்ள எவ்வளவு கடின உழைப்பு வேண்டும் என்பதற்கு சான்றாக அவன் ஜெயித்தது பெரு மகிழ்ச்சியாக இருந்தது. ஹாரி பாட்டருக்கும் தமிழ்ச் சங்கத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம். போட்டி முடிந்தவுடன் மேடையில் ஏறி நமது தமிழ் இலக்கியங்கள் ஆயிரம் இருக்க, இவற்றை ஏன் கட்டி அழுகிறீர்கள் என்று நண்பர் முத்து கணேசன் அங்கலாய்த்தார். எட்டுத் திக்கின் கலைச்செல்வங்கள் மாதிரி என்று சொல்லி சமாதானப்படுத்தினோம். சிறுவர்கள் மனதுக்கு பிடித்த போட்டிகள் நடத்தினால் எவ்வளவு அமைதியாக ஆர்வத்துடன் அனைவரும் பார்ப்பார்கள் என்பதை அந்தப் போட்டி காண்பித்தது.


நமது சங்க வலைப்பூ(அதாங்க ப்ளாக்) சூடு பிடித்து நிறைய எழுத்தாளர்கள் எழுத ஆரம்பித்ததும் இந்த நாட்களில்தான். கதை, கட்டுரை, நகைச்சுவை, கவிதை என்று நிறைய எழுதினார்கள். இன்றும் அந்த வலைப்பூ இருக்கிறது. எழுத ஆளில்லை. ஆனால் மாதம் ஒரு முறை வரும் கதம்பம் இதழ் அந்த இடத்தை நிரப்பியிருக்கிறது. அது மிக்க மகிழ்ச்சியான சேதி.

கோடைக்காலத்தில் டோரி பூங்காவிலும் டீப்ரன் பூங்காவிலும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் நிறைய போட்டிகள் நடத்தினார்கள் மகேஷும் செல்வமும். கோடையில் இந்தியாவில் இருந்து வந்திருந்த பெற்றோர்கள் பங்கு கொண்டு மகிழ்ச்சி அடைந்தார்கள். பொதுச்சேவையாக ரிச்மண்டு நகர வீடற்ற ஏழைகளுக்கு உணவு வழங்கல் சரண்யாவும் சுபாஷிணியும் முன்னின்று நடத்தினார்கள். மகேஷ் பெரியவர்களுக்கான டென்னிஸ் போட்டி நடத்தினார்.

இந்த அனைத்து நிகழ்ச்சிகளும் வெற்றிகரமாக நடந்ததில் செயலாளர் லஷ்மி ஹரியின் பங்கு பெரிது.

நமது வலைத்தளத்தை சீரமைத்து எளிதாக நிர்வகிக்க வசதி செய்து கொடுத்தார் ஜெயகாந்தன்.

# செயற்குழு 2007-2008



தலைவர்
**நாகு பரசு**



செயலாளர்
**லஷ்மி ஹரி**



பொருளாளர்
**அரவிந்தன் கோபாலகிருஷ்ணன்**



கலாச்சாரத்துறை
**கவிதா மலைச்சாமி**



கலாச்சாரத்துறை
**லஷ்மி வடிவழகு**



உறுப்பினர் நிர்வாகம்
**லதா தியாகராஜன்**



உறுப்பினர் நிர்வாகம்
**ரோஹித் ரகுவீர்**



விளையாட்டு
**மகேஷ் சுகுமாரன்**




விளையாட்டு
**செல்வம் ஸ்ரீனிவாசன்**



சமூக சேவை
**சரண்யா சத்தியமூர்த்தி**



சமூக சேவை
**சுபாஷிணி ஸ்ரீனிவாசன்**



இணையதள நிர்வாகம் (கௌரவப் பொறுப்பு)
**ஜெயகாந்தன் நாராயணன்**

VISTA
WEALTH SERVICES

**WEALTH BUILDING | INSURANCE**
**RETIREMENT PLANNING**
**COLLEGE SAVINGS | LONG TERM CARE**

## Products & Services

- Indexed Universal Life (IUL), Tax-Free
- Indexed Annuities (FIA), Tax-Deferred
- Life Insurance
- Long Term Care, College Planning
- 401K Rollovers, IRAs, Annuities
- Retirement Plans
- Will & Trust
- 10, 20, 30, 35 Yr Term Plans
- Living Benefits, Return-on-Premium
- Easy Online Comprehensive Estate Plan
- Wealth Management

+1-804-402-7687

www.vistawealthservices.com
info@vistawealthservices.com




2009 - 2010

திரு. முரளி இராமச்சந்திரன்

# கூடி இருந்து குளிர்ந்தேலோர்

அன்புடையீர்.

25 ஆண்டுகளை நிறைவு செய்து, மிகுந்த வலிமையுடன், முன்னேறியபடியிருக்கும், இரிச்மண்டு தமிழ்சங்கத்திற்கு எனது உளமார்ந்த வாழ்த்துகள்.


இச்சங்கத்தின் அகவை 25, எனினும், இதன் நாதமான, இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்புடைய தமிழன்னையின் சிறப்பை இச்சங்கம் மேன்மேலும் வளர்த்திட உழைக்கட்டும்.

பல்வேறு கலை நிகழ்ச்சிகள், பல்சுவை நிகழ்வுகள், பலதரப்பட்ட மாந்தர்கள், பலப் பல செயல்களால், எண்ணிலடங்கா சுய லாபம் கருதா நல்லுல்லங்களால் கட்டமைக்கப்பட்ட இந்தச் சங்கம் நீண்ட நெடும் காலம் தமிழ்ப் பணியில் சிறக்க வாழ்த்துகிறேன்.


2009 - 2010 ஆண்டுகளில் எங்களின் செயற்குழு மற்றும் பொதுக்குழுத் தலைவர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் ஏகோன்னதமான துணையுடன் சிற்சில மாற்றங்களைச் செய்ய முடிந்தது.

1. தமிழ்ச் சங்கத்தில் தமிழ் வகுப்புகள் முறையாக கோவிலில் இருந்த தாற்காலிக இருப்பிடத்தில் துவக்கப் பட்டது
2. 2 ஆசிரியர்களுடன் துவங்கிய வகுப்புகள், மாணாக்கர்களின் எண்ணிக்கை அதிகமான காரணத்தால், சுமார் ஓரிரு மாதங்களில் 5 ஆசிரியர்கள் தேவை எனும் அளவிற்கு உயர்ந்தது.
3. வருடத்திற்கு 3 கலை நிகழ்ச்சிகள் என நெறிப்படுத்தப்பட்டது, 1 நிகழ்ச்சி "கூடி இருந்து குளிர்ந்தேலோர்" என்பதாக ஒரு பொதுப் பூங்காவில் உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்களுடைய குடும்பத்துடன், ஓடி, ஆடி, விளையாடி, களித்திருந்து, விருந்துண்டு, மற்றவருடன் கலந்துரையாடி மன மகிழ்வுடன் ஒரு நாள் முழுவதும் ஓரிடத்தில் இயற்கையோடு ஒன்றி இருக்க செய்தது.
4. சங்கத்தின் முக்கிய குழுவாக செயல் படும் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கும், சங்கத்திற்காக அவர்கள் செய்யும் பணப் பரிமாற்ற முறைகளுக்கும், நிதி நிலைமை, கணக்கு வழக்கு மற்றும் செலவினங்களின் உரிமைகளுக்கும் வரைமுறை கொண்டு வரப்பட்டது. எந்த ஒரு செலவிற்கும் முக்கியக் குழுவின் பெரும்பான்மை ஆதரவு (2:1 அல்லது 3:0) இருந்தால் மட்டுமே அந்தச் செலவு ஏற்றுக் கொள்ளப்படும் என்று செலவுகளுக்கு வரைமுறை கொண்டு வரப்பட்டது.
5. வருடத்தில் ஓர் நாள் தேர்ந்தெடுக்கப் பட்டு, அன்று, பல நல்ல உள்ளங்களின் ஒத்துழைப்புடன் இரிச்மண்டு நகரத்திலிருக்கும் ஒரு தேவாலயத்தில் வீடில்லாத பலருக்கு ஒரு நாள் இரவு உணவு வழங்கப் பட்டது.
6. மேற்கூறிய சில முக்கிய செயல்களைத் தாண்டி, பற்பல விளையாட்டு நிகழ்ச்சிகள், கலை மற்றும் கலாச்சாரம் சார்ந்த நிகழ்ச்சிகள் வழக்கம்போல் நடத்தப் பட்டது.


# செயற்குழு 2009 - 2010




தலைவர்
**திரு. முரளி இராமச்சந்திரன்**



செயலாளர்
**திரு. ஜெயகாந்தன் நாராயணன்**



பொருளாளர்
**திரு. நாராயணன் (நாரி)**



பொருளாளர்
**திரு. ஜெயபால் ஐய்யாபிள்ளை**




விளையாட்டு
**திரு. சரண் பாலன்**

விளையாட்டு
**திரு. சதீஷ்**



கலை
**திருமதி. லக்ஷ்மி ஶ்ரீதர்**




கலை
**திரு. நடராஜ் அழகப்பன்**



தகவல் தொடர்பு
**திரு. ராஜேஷ் கிருஷ்ணசாமி**



தகவல் தொடர்பு
**திருமதி. சாரதா முத்து**



உறுப்பினர் சேர்கை
**திரு. முத்துசாமி சுப்பிரமணியன்**



உறுப்பினர் சேர்க்கை
**திருமதி. சாந்தா ஜெயசங்கர்**



திரு. முத்துசாமி
ஜீவானந்தம்



சத்தியா
சண்முகசுந்தரம்

# தமிழர் ஓங்க தமிழும் ஓங்கும்

இருபத்து ஐந்தாம் வயதில் கால்பதிக்கும் இரிச்மண்டு தமிழ்ச்சங்கத்திற்கு எனது மனமார்ந்தவாழ்த்துகள். இரிச்மண்டு வாழ் தமிழர்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு வெகு சிலரோடு தொடங்கிய இப்பயணம், இன்று 400 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் பரந்து விரிந்திருக்கிறது. இருபத்து ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து பணியாற்றுவது மட்டுமன்றி, வளர்ந்து வரும் இரிச்மண்டு தமிழ் சமூகத்தின் தேவையையும் தேடுதலையும் அறிந்து காலத்திற்கேற்ப தனது சேவைகளின் எல்லைகளை விரித்துவருகிறது.

இச்சிறந்த பயணத்தில் நானும் ஒரு துளி என்பதில் பெருமிதம் கொள்கிறேன். திறமைவாய்ந்த பலர் இணைந்த எங்கள் செயற்குழு, தமிழ்ச்சங்கம் என்ற கட்டடத்தின் அடித்தளத்தில் ஒரு சிறிய படிக்கல்லை சிறப்பாக அமைத்தது என்றால் மிகையாகாது. தற்காலிக இடத்தில் இயங்கிக் கொண்டிருந்த தமிழ் வகுப்புகள் வகுப்பறைகளுக்கு மாற்றப்பட்டன. சிறுவர்கள் எளிதில் கற்கும் வகையில் ஆய்வு செய்யப்பட்ட முறையில் தமிழ் கற்பிக்கப்பட்டது. உறுப்பினர்கள் ஒன்று கூடி தங்கள் கருத்துக்களை பகிரும் வகையில் சிந்தனை வட்டம் நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன.

எங்கள் குழுவின் செயல் காலத்தில், தமிழ்ச்சங்க உறுப்பினர்களை உற்சாகப்படுத்தும் வகையில், மிகப் சிறப்பாக ஒரு பிக்னிக் deep run பூங்காவில் நடத்தப் பட்டது. இதில் கிரிக்கெட், மற்றும் பெற்றோர்களும் குழந்தைகளும் கலந்து கொள்ளுமாறு பல போட்டிகள் நடத்தப் பட்டன. சுவையான உணவு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டது. இரண்டு வருடங்களிலும், தமிழ் சங்க டென்னிஸ் வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டன. வருடக் கடைசியில், உறுப்பினர்களை கவுரப்படுத்தும் வகையில், சிறப்பான இரவு உணவு அளிக்கப் பட்டது. இரண்டு வருடங்களிலும் இரண்டு கலாசார நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன.

ஆனாலும் நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம். நமது அடுத்த தலைமுறை தமிழ்-இந்திய அமெரிக்கர்களும் சங்கத்தில் இணைந்து பணியாற்றும் வகையில் நம்மை கட்டமைப்பது இன்றியமையாதது. இனி வரும் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வர் என்பதில் எந்த ஐயமும் எனக்கு இல்லை. “தமிழர் ஓங்க தமிழும் ஓங்கும்”.

# செயற்குழு 2011-2012



உறுப்பினர் சேர்ப்பு மற்றும்
தேவை அனுசரிப்பு
**நிர்மலா மஹேஷ்**



கலை நிகழ்ச்சி
வடிவமைப்பு
**விஜி நடராஜன்**



கலை நிகழ்ச்சி
வடிவமைப்பு
**சுகந்தி ஆனந்த்**




சமூக ஒருங்கிணைப்பு
மற்றும் தமிழ் பள்ளி
**மார்செலின்
லூவிஸ்மார்ட்டின்**




சமூக ஒருங்கிணைப்பு
மற்றும் தமிழ் பள்ளி
**செந்தில்குமார்
ராஜகோபால்**



உறுப்பினர்கள் சிந்தனை
வட்டம் மற்றும் பொழுதுபோக்கு
**சீனிவாசன்
பாலசுப்ரமணியன்**



விளையாட்டு நிர்வாகம்
**பெரியகருப்பன்
சுப்ரமணியன்**



விளையாட்டு நிர்வாகம்
**நாகராஜன்
ராமசந்திரன்**



விளையாட்டு நிர்வாகம்
**நன்மாறன்
நல்லதம்பி**



பொருளாளர்
**ஸ்ரீ ரங்கநாதன்
ஸ்ரீ ராமுலு**



பொருளாளர், செயலாளர்
**தியாகராஜன்
சுப்ரமணியன்**



தலைவர்
**முத்துசாமி
ஜீவானந்தம்**



தலைவர்
**சத்தியா
சண்முகசுந்தரம்**

2013-2014



முருகவேள்
முத்துகிருஷ்ணன்

# முதன்முதலாக ஊரைக்கூட்டி கூடாரமடித்த குழு

வணக்கம் நண்பர்களே.

இரிச்மண்டு தமிழ்ச்சங்க நிருவாகக் குழுவாக இரண்டாண்டுகளுக்குப் பணியாற்றும் வாய்ப்பு 2013ல் எங்களுக்கு அமைந்தது.

இரண்டு முழு ஆண்டுகள் இருக்கிறது என மெதுவாக வேலை செய்ய நம்மக்கள் அனுமதிக்கவில்லை. இரண்டே ஆண்டுகள்தான் உள்ளது, வேகமாக ஓடுங்கள் எனப் பணித்தனர்.

2014 முடிவில் திரும்பிப் பார்க்கும் போது "இன்னும் கொஞ்சம் கூட ஓடியிருக்கலாம்" என பேராசை தோன்றினாலும் ஓடிக் கடந்த தூரம் என்னவோ மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

25ம் ஆண்டு விழா மலருக்காக எங்கள் குழு சாதித்தவைகளின் பட்டியலில் ஒரு பகுதி கீழே கொடுத்திருக்கிறோம். மீதிப்பட்டியல் 50ம் ஆண்டு மலரில் வெளிவரக்கூடும். நினைவில் வைத்திருந்து மறவாது கேளுங்கள்.

2013–14 காலகட்டத்தில் சாதித்தவைகளில் சிலவற்றின் பட்டியல்:

- குழுவாக நம்மூரார் ஆண்டுதோறும் கோடையில் எங்காவது கூடாரமடித்து கூடி நட்பை உறுதியாக்க வழிகோலியது
- தமிழ்ப் பள்ளியை விரிவாக்க கோவிலின் கீழ்தளத்தை பெற்றுக் கொடுத்து, மார்செலின் லூவிஸ்மார்ட்டின் உதவியோடு அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழக பாடத்திட்டதில் தமிழ்ப்பள்ளியை இணைத்தது
- நற்செயல்களுக்குச் செலவழிக்க உள்ளூர் இசைக்கலைஞர்களை ஒருங்கிணைத்து இசைநிகழ்ச்சிகள் மூலம் நிதிதிரட்டிக் கொடுத்தது
- ஆண்களுக்காக கைப்பந்து போட்டிகளும் மகளிருக்காக எறிபந்து போட்டிகளும் தொடங்கி வைத்தது
- ஏற்கனவே நன்முறையில் நடைபெற்று வந்த தமிழ்ச்சங்க டென்னிசு போட்டிகளில் உள்ளூர் வீரர்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்தியது

- கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை திறம்பட திட்டமிட்டு அரங்கு, வாடகை போன்றவற்றின் செலவைக் குறைத்து



ஒரே நாளில் GRAMAM போன்ற நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற வழியமைத்துக் கொடுத்தது

எனப் பெருமை கொள்ள காரணங்கள் உண்டு. அதிலும் குறிப்பாக, முதன்முதலாகக் கூடாரம் போட்டு ஒரு வாரயிறுதியைக் கொண்டாட ஆரம்பித்து வைத்தது பட்டென பற்றிக் கொண்டது. இன்றுவரை இரிச்மண்டு தமிழ் மக்களின் மனம்கவர் கொண்டாட்டத் திருவிழாவாக ஆண்டுதோறும் நடக்கிறது.

நிற்க.

50ம் ஆண்டைப் பற்றி விளையாட்டாக மேலே உள்ள பத்தியில் குறிப்பிட்டாலும், நெஞ்சார தமிழ்ச்சங்கத்தை 50ம் ஆண்டும் பின் நூற்றாண்டு விழாவும் கொண்டாட வாழ்த்துகிறோம்.

ஒப்புரவு என்று சொல்லப்படும் சமூகப் பணி தமிழர்கள் மனம் விரும்பிச் செய்வது. சேர்த்த அறிவுச் செல்வம், பொருட்செல்வம், உடல் உழைப்பு எனத் தேவைப்படும் எதையும் தயங்காது சமூகப் பணிக்குக் கொடுக்க விரும்பும் நெஞ்சம் நம்முடையது.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு - குறள்.

(தேடித் தேடி சேர்த்த பொருள் எல்லாம் தேவைப்படுவோர்க்கு சேவையாக செய்திடவே)

அதைத்தான் தமிழ்ச்சங்கமாகச் செய்கிறோமே. எனவே,

நூற்றாண்டு விழா கனவல்ல. மெய்ப்படும். மெய்ப்படட்டும்.

வாழ்க தமிழ், வளர்க தமிழ்ச்சங்கம்.







# செயற்குழு 2013-2014



தலைவர்
முருகவேள் முத்துகிருஷ்ணன்



செயலாளர்
சுனிதா சந்திரமோகன்



பொருளாளர் 1
ரங்கநாதன் ஸ்ரீராமுலு



பொருளாளர் 2
ராமசாமி சுபாஷ்



உறுப்பினர் துறை
அரவிந்த் நாராயணன்



உறுப்பினர் துறை
அரவிந்தன் தாய்புள்ள



கலாச்சாரத்துறை
சிவகாமி செல்லப்பன்



கலாச்சாரத்துறை
மீனாட்சி மெய்யப்பன்



விளையாட்டுத்துறை
நித்யப் பிரபா




தகவல் தொடர்புத்துறை 1
ராமசாமி சுபாஷ்



தகவல் தொடர்புத்துறை 2
கார்த்திக் அங்கமுத்து



சமூகவள மேம்பாட்டுத்துறை
கிருபாகரன் தனபாலன்



சமூகவள மேம்பாட்டுத்துறை
வாசு சண்முகம்

STEM: INNOVATE, CREATE, ELEVATE!

## STREAM For Kidz

MONDAY - FRIDAY

AFTERSCHOOL PROGRAM
2:00 PM - 6:00 PM

ONE HOUR STEM PROGRAMS

STEM WEEKENDS

CAMPS - YEAR AROUND

SUMMER

SPRING BREAK

WINTER BREAK

ONE DAY

- Robotics - WeDo, Arduino and more...
- Electrical and Electronics lab
- Game Making Lab - Kodu
- Game Making Lab - Minecraft
- App Building Lab
- Computer Programming
    - Scratch, Python, Java
- 3D Design/Modeling
- Animation
- 3D Printing
- Virtual Reality
- Roblox Game Programming

**Register FOR Summer CAMP 2024**

https://forms.gle/sD2X8RMnWMN3R46F6

## CONTACT

**programsupport@streamforkidz.com**
**Address: 5213-C Hickory park dr**
**Glen Allen VA 23059**
**PHONE (Text) 804-719-1745**
**https://streamforkidz.com**

## 2015-2016






திரு. மலைசாமி
சேதுராமன்

# ஐந்து குத்து விளக்குகள்

ஊருக்கு வணக்கம்.

தமிழ்ச்சங்க நிர்வாகக் குழுவாக எங்கள் அணி பதவி ஏற்றுக் கொண்டு செய்த சில செயல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

2015, 16 இரு ஆண்டுகள் எங்களுக்கு இருந்தது.

அந்த காலகட்டத்தில் நம் இரிச்மண்டு தமிழ் மக்களின் மனநிலை, "வர்றோம், குழந்தை குட்டிகளோடு அதுக துவக்கப்பள்ளி முடியற மட்டும் ஆண்டுக்கு ஒருமுறை குத்தாட்டம் போடறோம், புள்ளிங்கோ நடுநிலைப் பள்ளிக்கு வந்ததும் கண்டுக்காம கழண்டுகிறோம்" என்பதாக இருந்தது.

தமிழ்ச்சங்க உறுப்பினர் எண்ணிக்கை, பசலை கொண்ட தலைவியென வாடி மெலிந்து போகத் துவங்கியிருந்தது. ஒட்டியாணமாக இருந்து வளையலாகிக் கொண்டிருந்தது. மோதிரமாகி மூக்குத்தியாகும் முன் ஏதாவது செய்தாக வேண்டும் எனும் நிலை.

யோசிச்சோம். போடுறா ஒரு பட்டியலைன்னு, "குறைந்தது இதைச் சாதிப்பது" என்ற Common Minimum Program பட்டியல் இடப்பட்டது.

### ஐந்து குறிக்கோள்களைக் கொண்ட திட்டம் உருவானது

1. உறுப்பினர் எண்ணிக்கையை தக்க வைப்பது, முடிந்தால் உயர்த்துவது.
2. அடுத்த தலைமுறையினரை தமிழ்ச்சங்க செயல்பாடுகளில் பங்கேற்க வைத்து ஊக்குவிப்பது.
3. இரிச்மண்டு தமிழ்ச் சமூகத்துக்குள் நட்புறவை வலுவாக்குவது.
4. பரந்துபட்ட சமூக சேவையில் தமிழ்ச் சங்கத்தை ஈடுபடுத்துவது.
5. தமிழ்ப்பள்ளிக்கான அங்கீகாரத்தை பள்ளி கல்வித் துறையிடம் பெற்றுத் தருவது.

### உறுப்பினர் எண்ணிக்கை கூடியது





குழந்தைகளை இளம் பெற்றோர் விரும்பி மேடையேற்றும் நிகழ்ச்சி குழந்தைகள் சற்று பெரிதாகும் போது ஆர்வம் மங்கிப் போகிறது என்பதை உணர்ந்தோம். எனவே சிறியவர் பெரியவர் என தனித்தனியாக கலை, விளையாட்டுப் போட்டிகளை நடத்தலாம் என்று முடிவெடுத்தோம். நாமதான் எங்கே போனாலும் யாதும் ஊரே யாவரும் கேளிரேன்னு பக்கத்துல இருக்கறவங்களையும் சேர்த்துக்குவோமே விளையாட்டுப் போட்டிகள் மற்ற மொழி, குழுவினரோடும் சேர்ந்து நடத்தத் துவங்கினோம்.

தமிழ்நாட்டில் இருந்து கலைஞர்களை அழைத்து வந்து "அசத்தப் போவது யாரு" நிகழ்ச்சி, சித்த மருத்துவர் அன்பு கணபதி, செல்வ சண்முகம் அழைத்து வந்து தமிழ் மருத்துவ மகத்துவத்தைப் பேசச் செய்தோம்.

ஊர் கவனித்தது.

ஐயன் இளையராசாவின் இசைக் கச்சேரி வாசிங்டனில் நடைபெற்ற போது நுழைவுக் கட்டணத்தில் சலுகை பெற்றுக் கொடுத்து நம் மக்கள் இசைபட வாழ, மகிழ வழியமைத்துக் கொடுத்தோம்.

"இவனுக எதோ நல்லாத்தான் வேலை செய்யறானுவோ" என பறவைகள் திரும்பத் துவங்கின.

இரிச்மண்டில் எவரையும் விட்டுவிடக் கூடாது என பரபரவென இயங்கியது எங்கள் குழு.

104ல் தொடங்கிய உறுப்பினர் எண்ணிக்கை அந்த ஆண்டு முடிவில் 242 என ஆனது.

அஞ்சு குத்து விளக்குகளில் ஒன்று ஏத்தியாச்சு என எங்களுக்கு நிம்மதியாச்சு.

## இளைஞர் அணி உருவாக்கம்:

புதியவர்களை இணைத்து இளமையாக, வேகமாக, திறமையாகவே இருப்பது என்பது அமெரிக்கக் கலை. புதியவர்கள் வர வர சேர்த்துக் கொண்டு ஓடுகிறோம், இனி இளையவர்களையும் கூட்டிக் கொண்டு ஓடுவோம் என "சீர்மிகு மாணவர் அணி" என ஒன்றை உருவாக்கி. நடுநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்களைக் கொண்டு உதவிக் கொள்ள, திறமைகளைப் பகிர்ந்து கொள்ள, பயிற்றுவித்தோம், ஊக்குவித்தோம். நம் பயலுக நல்லாத்தான் ஏற்றுக்கொண்டார்கள். மலையேற்றங்கள், கால்பந்து, மொபைல் நிரல்கள் எழுதும் பட்டறை நடத்துதல் என பட்டையைக் கிளப்பினார்கள்.

மனம் மகிழ்ச்சியானது.

இப்படியாக இரண்டாவது குத்துவிளக்கும் ஏற்றப்பட்டது.

## தமிழ்ச் சமூக நட்புறவை வலுவாக்குவது

முன்பே இரிச்மண்டு வந்த மூத்தோரது பட்டறிவும் திறமையும் மொத்த தமிழ்ச் சமூகத்தை வலுவடைய பயனுற வேண்டும் என விரும்பினோம். "ஆன்றோர் அவை" என ஒன்றை உருவாக்கி பெரிதாக எதைச் செய்ய விழையும் போதும் அவர்களைக் கலந்தாலோசிக்கத் துவங்கினோம். அவர்களை தமிழ்ச் சங்கப் பேரவை (FETNA) போன்றவற்றிக்கு நம் சார்பில் ஓட்டளிக்கும் உறுப்பினராக அனுப்பி வைத்தோம். இன்றுவரை "மூத்தோர் சொல் மதிப்புடையது" என அவர்களது ஆலோசனைகளைப் பெறுகிறது தமிழ்ச்சங்கம்.




மூன்றாவது விளக்கும் அப்போதிருந்து ஒளிரத் துவங்கியது.

### பரந்துபட்ட சமூக சேவையில் ஈடுபடுவது

சிறு உதவிகள் ஆயினும் காலத்தால் செய்வது ஞாலத்தின் பெரிதாச்சே என, உறுப்பினர்களின் தேவைக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது, வயதானவர்களுக்கு போக்குவரத்துக்கு முடிந்த உதவி செய்வது என செய்ய ஆரம்பித்தோம்.

2016ல் ஒரு பெருமழை பெய்து தமிழ்நாட்டை சேதப்படுத்தியது மக்கள் தடுமாறிப் போனார்கள். இங்கே நமக்கு சதையாடியது. நிதி திரட்டினோம். கணினி, செல்பேசி செயலி உருவாக்கப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தினோம், கட்டணம் வாங்கினோம். அதை வெள்ள நிவாரணத்தில் சேர்த்தோம். கலை நிகழ்ச்சிகள் நடத்தினோம், பாடினோம், ஆடினோம், பணம் வாங்கினோம். வந்த வெள்ளத்தைக் காட்டிலும் பெரிதாக மடைதிறந்தது நம் மக்களின் கொடையுள்ளம். நிவாரண நிதி $27000 சேர்ந்தது. வெள்ள பாதிப்பில் இருந்து மீள உதவினோம். தேவைக்கும் மேல் பணம் சேர்ந்திருந்தது. சென்னையின் ஆவடியில் 400க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயிலும் பள்ளிக்கு வழித்தடம் அமைத்திட ஒரு பாலம் கட்டிக் கொடுக்க எஞ்சிய தொகையைக் கொடுத்தோம்.

பிறந்த நாட்டோடு ஒரு பாலம்: நம் இரிச்மண்டு மக்களின் கொடையுள்ளம் தமிழ்நாட்டு குழந்தைகள் பள்ளிக்கு பாலம் அமைக்க உதவியது என கவித்துவமாக அச்செலவு அமைந்தது.

உள்ளத்தனைய பாலத்தின் நீட்டம் என நான்காவது விளக்கும் பளீரிட, வெள்ளத்தில் நிரம்பிய ஏரியென மனம் நிறைந்தது.

### தமிழ்ப்பள்ளிக்கான அங்கீகாரம்

தமிழ் மொழி மற்ற சில மாநிலங்களில் பள்ளிக்கூட பாட மொழிகளில் ஒன்றாக இருக்கும் போது, நம் பேரூராட்சி (கவுண்டி) பள்ளிக்கல்வி அதிகாரிகளுக்கு விளக்கிச் சொல்லி நம் குழந்தைகளுக்கும் தமிழை ஒரு மொழிப்பாடமாக ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும், அதற்கான முயற்சிகளைத் துவக்க வேண்டும் என நினைத்தோம்.

தரச்சான்றிதழ் பெற்றுத் தரும் நிறுவனங்களை அணுகி வேலையைத் துவங்கினோம். இது நீண்ட காலம் எடுத்துக் கொள்ளும் செயல் என்பதால், தமிழ்ச்சங்க அமைப்பு விதிகளில் (Bylaw), "பள்ளி இயக்குனர்" எனும் புதிய பதவியை நிரந்தரப் பதவியாக்கி மாற்றம் கொண்டு வந்தோம்.

அடுத்தடுத்த குழுவினர் இந்த முயற்சியைத் தொடர்ந்து, இறுதி இலக்கினை அடைந்திட பாதையமைத்து வைத்து ஐந்தாம் குத்து விளக்கினையும் ஏற்றி வைத்தோம்.

இப்படியாக, எங்கள் பொறுப்புக் காலத்தில் அழுந்தக் குறிப்பிடும்படியான ஐந்து குத்து விளக்குகளையும் இன்னும் சில பல அகல்விளக்குகளையும் ஏற்றி இரிச்மண்டு வாழ் தமிழரிடையே நட்பும் ஒற்றுமையும் ஒளிரிடப் பாடுபடும் வாய்ப்புக் கிடைத்தது.

ஒப்புரவு எனும் சமூக சேவை மனம் நிறைப்பது. கைமாறு வேண்டா உதவி எங்கு செய்தாலும் மனம் மகிழும். தமிழுக்கு தமிழருக்கு, தமிழ்நாட்டுக்கு, நம் தமிழ்ச் சுற்றம் உட்பட மொத்த இரிச்மண்டுக்கும் சேவை செய்திட வாய்ப்பு கிடைப்பது தேனில் ஊறிய பலாச்சுளையைச் சுவைப்பது போல. இரட்டை மகிழ்ச்சி.

**புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற – குறள்.**


(ஒப்புரவைக் காட்டிலும் சிறந்த பண்பை எவ்வுலகிலும் பெறுதல் அரிது)

வாய்ப்பளித்த ஊருக்கும் தமிழுக்கும் நனிநன்றி.

# செயற்குழு 2015-2016



தலைவர்
**திரு. மலைசாமி சேதுராமன்**



செயலாளர்
**திரு. மகேஷ் மகாலிங்கம்**



பொருளாளர்
**திருமதி. குழல் மொழி சுந்தர்**



கலை மேம்பாடு
**திருமதி. சுபத்ரா அரவிந்தன்**



கலை மேம்பாடு
**திருமதி.ஸ்வர்ணா சுந்தரராஜ்**



சமூக நலம்
**திரு. கார்த்திக் சுப்பிரமணியன்**



சமூக நலம்
**திரு. ஸ்ரீ ரங்கநாதன் ஸ்ரீ ராமுலு**



மக்கள் தொடர்பு
**திரு. ராஜேஷ் ஜெகன்மோகன்**

மக்கள் தொடர்பு
**திரு. சதீஷ் சந்திரன்**



விளையாட்டு
**திரு. திருநாவுக்கரசு கோவிந்தராசன்**



தகவல்
**திரு. கார்த்திக் அங்கமுத்து**








திரு. பாலாஜி முத்துவரதன்







# தொண்டு – அன்பின் மிக உயர்ந்த வடிவம்

இரிச்மண்டு தமிழ்ச் சங்க வரலாற்றில் முதன் முறையாக நேரடி இசை நிகழ்ச்சி மூலம் தொண்டுக்காக நிதி திரட்டி, மற்றும் உட்புற விளையாட்டு போட்டிகளை நடத்தியும் மற்றும் சமூகத்தின் அடி தட்டில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி பயில்வதுக்கு தேவையான அனைத்து பொருட்களும் வழங்கிய பண் முகம் கொண்ட மேலாண்மை குழு”

**தனித்துவமான நிகழ்வுகள்**

- பல தொண்டு அமைப்புகளுக்காக – நேரடி இசை நிகழ்ச்சி மூலம், இன்றளவும் மிக பெரிய தொகையான $24000 நிதி திரட்டி, தமிழ்நாடு உழவர் அறக்கட்டளை, ஹென்றிகோ தீயணைப்பு வீரர்கள் மற்றும் பிளாண்ட் ஒன் மரம் நடும் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது
- பள்ளி குழந்தைகள் பயில்வதற்கு தேவையான பொருட்கள் வழங்கினோம் ( w/ Better Housing Coalition)
- உட்புற விளையாட்டு போட்டிகள் – சதுரங்கம் , கேரம் போர்டு , டேபிள் டென்னிஸ் போன்ற போட்டிகளை நடத்தியது.
- பண்டைய தமிழர்களின் கலை, இலக்கியம், வரலாறு மற்றும் பாரம்பரியம் பற்றிய ஒரு சிறப்பான பகிர்வினை திரு. ஒரிசா பாலு அவர்களை அழைத்து வந்து இரிச்மண்டு தமிழர்களையும் ஒருங்கிணைத்து வழங்கினோம்.
- Y.G மதுவந்தி அவர்களுடன் உள்ளூர் நாடகக் கலைஞர்களும் இனைந்து சிறப்பான நாடகத்தை அரங்கேற்றியது.
- கைபேசியிலும் இயங்கும் புதிய இணையதளம் சங்கத்தில் அறிமுகம் செய்தோம்.




# செயற்குழு 2017-2018




தலைவர்
பாலாஜி
முத்துவரதன்




செயலாளர்/ இடைக்கால
தலைவர்
ரங்கராஜ் சுந்தர்



பொருளாளர்
செல்லப்பன்
சிதம்பரம்



தமிழ்ப்பள்ளி நிர்வாகி
முத்துராஜ்
சண்முகவேல்



உறுப்பினர் துறை
கணபதி
சுப்ரமணியன்



உறுப்பினர் துறை
சேதுராமன்
ராமநாதன்



உறுப்பினர் துறை
வினோத் குமார்
விங்கி செட்டி



கலாச்சாரத் துறை
சுவாதி பரத்வாஜ்




கலாச்சாரத் துறை
பாரதி
கோவிந்தசாமி



விளையாட்டுத் துறை
ரமேஷ் அப்பாதுரை



விளையாட்டுத் துறை
ராம்குமார்
வாசுதேவன்



தகவல் தொடர்புத் துறை
சரவணன்
விஸ்வநாதன்



சமூகவள மேம்பாட்டுத்
துறை
சாந்தா ஜெயசங்கர்



சமூகவள மேம்பாட்டுத்
துறை
ஜான் ஆனந்த்
லூர்துசாமி




திரு. மெய்யப்பன் மெய்யப்பன்

# நம்ம ஊரு திருவிழா

2019 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்த நிர்வாக குழு தனது பணியை சிறப்பாக தொடங்கியது, மிகச் சிறப்பாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியது இந்த நிர்வாக குழு. அதில் மிகவும் குறிப்பிடத்தக்கது

1. இரிச்மண்டு தமிழ்ச் சங்க வரலாற்றில் 300 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்க்கை
2. இரிச்மண்டு தமிழ்ப் பள்ளியில் 150 க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கை
3. நம்ம ஊர் திருவிழா எனும் தமிழர் திருவிழா அறிமுகம்
4. வாழை இலை விருந்து எனும் அறுசுவை நிகழ்வு அறிமுகம்
5. இளைஞர்களுக்கான IMPACT 2019 எனும் நிகழ்ச்சி அறிமுகம்
6. கவனகம் மற்றும் நீங்கள் நினைப்பது(What's on your mind?) போன்ற புதிய வித்தியாசமான நிகழ்ச்சிகள் அறிமுகம்

### தமிழர் திருவிழா

இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் புதிய முயற்சியாக தமிழர்களின் கலைகள், வீர விளையாட்டுகள் மற்றும் பல போட்டிகள் கொண்ட நம்ம ஊரு திருவிழா எனும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகள், தமிழ்ப் பாரம்பரிய விளையாட்டுகள், பண்பாட்டு உணவுகள் போன்ற தமிழ் மரபு சார்ந்த நிகழ்ச்சிகள் நமது அடுத்த தலைமுறையினருக்கு தமிழ் மரபினைக் கொண்டு செல்ல உதவியது. இதில் 200-க்கும் மேற்பட்ட தமிழ்ச் சொந்தங்கள் பங்கு பெற்று விழாவினைச் சிறப்பித்தனர்.

### வாழை இலை விருந்து

இரிச்மண்டு தமிழ்ச் சங்க வரலாற்றில் முதன் முறையாக வாழை இலை விருந்து எனும் அற்புத அறுசுவை



விருந்து நிகழ்ச்சி அறிமுகம் செய்யப்பட்டு 300-க்கும் மேற்பட்ட தமிழ்ச் சொந்தங்கள் அதில் கலந்து கொண்டு அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்தனர்.

## இளைஞர்கள் நிகழ்ச்சி - IMPACT 2019

இன்றைய மாணவர்கள்; நாளைய தலைவர்கள். நம் வீட்டில் உள்ள ஒவ்வொரு இளைஞரையும் தமிழ்ச் சங்கத்தோடு ஒருங்கிணைக்கும் ஒரு புதிய முயற்சியாக இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதன் வாயிலாக அவர்களுக்கு பொருளாதார மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, கல்லூரிப்படிப்பு ஆகியவை குறித்த சிறப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த இந்நிகழ்ச்சி வழிவகை செய்தது.

## கவனகம்


இரிச்மண்டு தமிழ்ச் சங்கப் பள்ளி மாணவர்களின் நினைவாற்றலைப் பெருக்கும் விதமாக கவனக பயிற்சி பட்டறையை தமிழ்ச் சங்கம் நடத்தியது. நினைவாற்றல் வல்லுநர் கவனகச் செம்மல் முனைவர் கலை செழியன் சிறப்பு விருந்தினராக வருகை தந்து மாணவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளித்தார். இதில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

## நீங்கள் நினைப்பது - What's on your mind?

இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் புதிய முயற்சியாக நீங்கள் நினைப்பது - என்ற சுவாரசியமான நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் தொலைக்காட்சிப் புகழ் ராகேஷ் ஷ்யாம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நாம் நினைப்பதை துல்லியமாகத் தன் தன நுண்ணறிவால் கணித்து நிகழ்ச்சியை சிறப்பாகவும் நகைச்சுவையாகவும் கொண்டு சென்று தமிழ்ச் சொந்தங்களை திகைப்பில் ஆழ்த்தினார்.

யாரையும் நேரில் சென்று காண முடியாத சூழலில் நம் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த இணையம் சார்ந்த நிகழ்ச்சிகள் அனைவருக்கும் ஒரு பெரிய ஆறுதலையும் உற்சாகத்தையும் அளித்தது. மேலும் 2020 இல் அடுத்த நிர்வாக குழுவிற்கு பொறுப்பை மாற்றும் பொழுது இணையம் வழியாக அந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி நிறைவு செய்தது. பல்வேறு சவால்கள் இருந்த போதிலும் அவற்றை வெற்றிகரமாக சமாளித்து சிறப்பான சேவையை இரிச்மண்டு தமிழ் சங்க மக்களுக்கு இந்த நிர்வாக குழு வழங்கியதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

# செயற்குழு 2019-2020



தலைவர்
மெய்யப்பன்



செயலாளர்
சிவகாமி
சோலையப்பன்




பொருளாளர்
பரத் ரெங்கசாமி



தமிழ்ப்பள்ளி முன்னிலை
ஆலோசகர்
ராமசாமி சுபாஷ்



தமிழ்ப்பள்ளி நிர்வாகி
வெங்கடேசன்
செட்டியார்



உறுப்பினர் துறை
தமிழ்செல்வி
குப்புசாமி



உறுப்பினர் துறை
அரவிந்த்
ஆரோக்கியராஜ்




கலாச்சாரத்துறை
சுதாராணி
ராகவன்



கலாச்சாரத்துறை
ஆஷா சேகர்
குணசேகரன்




விளையாட்டுத்துறை
பால் சாமுயேல்



விளையாட்டுத்துறை
பத்மநாபன்
மன்னன்கட்டி




தகவல் தொடர்புத்துறை
பாஸ்கரன்
ஜெயராஜன்



தகவல் தொடர்புத்துறை
கணேஷ்குமார்
நஞ்சுண்டமூர்த்தி




சமூகவள மேம்பாட்டுத்துறை
ரமேஷ்குமார்
கந்தசாமி



சமூகவள மேம்பாட்டுத்துறை
வடிவேல்முருகன்
பொன்பாண்டியன்

# இரிச்மண்டு தமிழ்ச்சங்க தொண்டு மென்மேலும் தொடர வாழ்த்துகள்!









# பின்னோக்கி ஒரு பார்வை!



**திருமதி. மீனாட்சி சங்கரன்**

“கையில் உள்ள பத்து விரலும் சேர்ந்து வேலை செய்தால், இந்த உலகத்தில் நாம் எவ்வளவோ சாதிக்கலாம் தெரியுமா?” – சிறு வயதில் என் அம்மா வாயிலிருந்து அடிக்கடி உதிர்ந்த முத்துக்களில் இதுவும் ஒன்று. சுவையான உணவுடன் சேர்த்து இது போல பல நெறிமுறைகளை பொன்மொழிகளாக தினமும் எங்களுக்கு ஊட்டி வளர்த்த என் அம்மாவுக்கு நான் பட்டிருக்கும் கடன் அதிகம்.

விவேகியான என் அம்மா சொன்னது என்னவோ உண்மைதான். எப்படின்னு கேட்கறீங்களா? உதாரணம் வேண்டுமா? இதோ 25 வருடமாக இரிச்மண்டில் அமர்க்களமாக நடந்து வரும் நம் தமிழ்ச்சங்கத்தையே எடுத்துக் கொள்ளுங்கள்.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஒரு புது நிர்வாகக் குழு முன்வந்து அவர்களின் முழுநேர வேலை மற்றும் குடும்பப் பொறுப்புக்களை மீறி சமூக சேவையாக கருதி நம் சமூக தமிழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த உழைத்துக் கொண்டு இருக்கிறார்களே, எப்படி அவர்களால் முடிகிறது? ஒருவராக செய்யக்கூடிய வேலையா இது? தனி நபர் இழுத்தால் ஒரு தேர் நகருமா? ஆனால் அதே பன்னிரெண்டிலிருந்து பதினைந்து நபர்கள் வரை கூடி சேர்ந்து வேலை செய்யும்போது மலை போல் பெரிதாகத் தெரியும் இரண்டு வருட சங்கத்தின் பணி மிக சுலபமாக முடிந்து விடுகிறது. நான் மிகைப்படுத்தவில்லை. தமிழ் சங்கத்தின் தலைவியாய் பணியாற்றிய அனுபவத்தில் சொல்கிறேன். கூட்டு முயற்சி என்பதுதான் நம்முடைய மிகப் பெரிய ரகசிய பக்கபலம்.

சரிதான். கூட்டு முயற்சியில் அப்படி என்னதாங்க நீங்களும் உங்கள் குழுவும் சாதிச்சீங்கன்னு நீங்க மனசுக்குள் காரமாக கேட்பது எனக்கு தெளிவாகவே கேட்டு விட்டது. நீங்கள் சாதாரண குரலில் பேசினால் கூட எனக்கு காது சுமாராக தான் விழுமோ என்னவோ ஆனால் இந்த மனக்குரலில் பேசினால் மட்டும் (mind வாய்ஸ்) எப்படியோ எனக்கு தெளிவாகக் கேட்டு விடும். உங்கள் கேள்விக்கான பதிலுக்கு மேலே படியுங்கள்.

2021 மற்றும் 2022 தான் எங்கள் குழுவின் பதவிக்கால நேரம். எங்கள் குழு சேர்ந்து செய்த முயற்சிகள் சிலவற்றை இங்கு சொல்கிறேன்.

- செய்தி தொடர்பு துறையில் முதல் முறையாக சங்கச்செய்திகள் உறுப்பினர்களுக்கு சுலபமாக போய் சேர வாட்ஸாப் சேனல் ஒன்றை நிறுவினோம்.
- இதோ விளையாட்டு போல் மூன்று வருடங்களுக்கு மேலாக வெற்றிகரமாக நடந்து வரும் மாத இதழ் கதம்பம் எங்கள் குழு துவங்கிய ஒரு முயற்சிதான்.
- கோவிட் நோய் தலை விரித்து ஆடிய போது கூட விடாமல் இரண்டு வருடங்களும் கைப்பந்து, எறிபந்து போட்டிகள் மற்றும் டென்னிஸ் முகாம்களை சீராக ஏற்பாடு செய்த பெருமை என் குழுவினர்க்கே சேரும்.
- நோய் பரவலுக்கு பயந்து கூடி சேர்ந்து கொண்டாட வழியில்லாத போது விடாமல் 2021 வருடத்தில் மதுரை முத்து அவர்களின் நகைச்சுவை நிகழ்ச்சி, பொம்மலாட்டம் (puppet show), யோகா பயிற்சி, கர்நாடக மற்றும் மெல்லிசை நிகழ்ச்சிகளை ஆன்லைன் மூலமாக உறுப்பினர்களுக்கு அளிக்க உதவிய என் குழுவினருக்கு நன்றியை சொல்ல கடமை பட்டிருக்கிறேன்.

- 2022 வருடம் கோவிட் நோயின் வீரியம் குறைந்த பின்பு நேர்வழி நிகழ்ச்சிகளாக பெண்களின் கேளிக்கை இரவு, குழந்தைகளுக்கான கலாச்சார விழா, பட்டிமன்றம் மற்றும் இனிய மெல்லிசை நிகழ்ச்சி ஆகியவற்றை அருமையாக தொகுத்து அளித்த எங்கள் கலாச்சாரக் குழுவுக்கு வாழ்த்துக்கள்.
- 2021 ஆண்டில் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது இரிச்மண்டில் உள்ள முதியவர்கள் இல்லத்துக்கு குளிர்கால போர்வைகள் ஐம்பதை வாங்கி பரிசாக அளித்தோம்.
- 2021 ஆண்டில் உங்களை போல பல நல்ல உள்ளங்களின் உதவியோடு இருபது ஆயிரம் அமெரிக்க டாலர் நிதி திரட்டி பல தமிழ்நாட்டு மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் ஆக்சிஜன் செறிவு மற்றும் இதர மருத்துவ கருவிகளை வாங்கி அளிக்க முடிந்ததில் மன அமைதி அடைந்தோம்.




சரிதான். வெறும் சாதனைகளை மட்டும் இங்கு பட்டியலிட்டுக் கொண்டே போய் மற்றதை காற்றோடு விட்டு விட்டால் அது தவறில்லையா? ஆகையால் இதையும் கேட்டு விட்டு செல்லுங்கள்.

எங்கள் பதவிக்காலத்தின் கடைசியில் சில நிதிநிலை நிர்வாக முறைகேடுகள் நடந்து விட்டிருந்ததை கண்டு பிடித்தோம். உண்மை தெரிந்த உடனே உள்துறை தணிக்கை (internal audit) ஒன்றை ஏற்பாடு செய்து கணக்கியலில் நடந்திருந்த தவறுகளை சீர் செய்து சங்க உறுப்பினர்களுக்கு நடந்ததை தெளிவாக தெரியப்படுத்தினோம். நல்லதும் கெட்டதும் சேர்ந்ததுதான் வாழ்க்கை என்பதற்கேற்ப எங்கள் குழுவின் இரண்டு வருட பதவிக்காலத்தில் நிறைய நல்ல அனுபவங்களுக்கு நடுவே இந்த சம்பவத்தையும் ஒரு வாழ்க்கை பாடமாக எடுத்துக் கொண்டு இன்று எதிர்காலத்தை நோக்கி நகர்ந்து விட்டோம்.

சரி தான், அந்த பழங்கதையை விடுங்க. தமிழ்ப்பள்ளி என்ன ஆச்சு? அதை மேம்படுத்தினீங்களான்னுதானே கேக்கறீங்க? நிச்சயமாக செய்தோம். எங்களோட பணிக்காலத்தில் நம் இரிச்மண்டு தமிழ்ப் பள்ளி பெருமளவு விரிவடைந்து அதில் முதல்முறையாக திருக்குறள், கதை சொல்லுதல் மற்றும் பேச்சுப் போட்டிகள் குழந்தைகளுக்காக கோலாகலமாக நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் உதவியோடு பள்ளி நிர்வாகத்தை திறம்பட நடத்திய எங்கள் குழு பள்ளி நிர்வாகிக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

இவை எதையுமே தற்பெருமைக்காக சொல்லவில்லை. இதில் எதையும் நாங்கள் ஒருவராக சாதித்து விடவும் இல்லை. எங்கள் குழுவினர் கூட்டாக சேர்ந்து சமூக மேன்மைக்காக செய்த சில முயற்சிகள் தான் இவை. என் அம்மா சொன்னது போல் பத்து விரல்கள் சேர்ந்து உழைத்தால் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு சில உதாரணங்களாக இதை எடுத்துக் கொள்ளலாம்.


நம் தமிழ்ச்சங்கத்தின் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை கோலாகலமாக கொண்டாட ஏற்பாடு செய்திருக்கும் தற்போதைய சங்க நிர்வாகக் குழுவினருக்கு என் மனமார்ந்த பாராட்டுகள். நம் தமிழ்ச்சங்கம் இன்னும் பல்லாண்டு காலம் வளர்ந்து இந்த சமூகத்தின் மேன்மைக்கு உழைக்க சிறந்த வாழ்த்துக்கள். கடைசியாக என்னுடன் இரண்டு வருடம் சேர்ந்து உண்மையாக உழைத்த என் குழுவினருக்கு பிரியம் கலந்த என் நன்றியை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

**நட்புடன், மீனாட்சி சங்கரன், 2021-2022 நிர்வாகக் குழு தலைவி**

# செயற்குழு 2021-2022



தலைவி
**மீனாக்ஷி சங்கரன்**



செயலாளர்
**ராம்கி கவசேரி**



தமிழ்ப்பள்ளி நிர்வாகி
**லதா தியாகராஜன்**



உறுப்பினர் துறை
**சுரேஷ் கண்ணா**



உறுப்பினர் துறை
**சுகந்தி குமரேசன்**



கலாச்சாரத்துறை
**பரமகல்யாணி கே.எஸ்**



கலாச்சாரத்துறை
**சிவரஞ்சனி கிருஷ்ணமூர்த்தி**



விளையாட்டுத்துறை
**இராஜாராம் தனஞ்செழியன்**



விளையாட்டுத்துறை
**கவியரசன் அம்பேத்கார்**




தகவல் தொடர்புத்துறை
**கணேஷ் குமார் நஞ்சுண்டமூர்த்தி**



தகவல் தொடர்புத்துறை
**சுகதேவ் வேலாயுதம்**



சமூகவள மேம்பாட்டுத்துறை
**கார்த்திகேயன் ராஜகோபால்**



சமூகவள மேம்பாட்டுத்துறை
**வடிவேல்முருகன் பொன்பாண்டியன்**

KUMON

**Tablet Study Available**

## Enroll now and save
# 50% on registration!*

*Offer expires 07/11/2024.
Valid at this Center only.




**Preschool – High School**

**Math and Reading Program**

**Kumon Math and Reading Center of Glen Allen - Cross Ridge**


10210 Staples Mill Road
Glen Allen, VA 23060

kalaramesh@ikumon.com
804-564-2017

©2022 Kumon North America, Inc. All rights reserved.

# ஆலோசனைக் குழு

திரு. நரசிம்மாச்சாரி
(1999 - 2000)




திரு.மனுவேல் தலைவர்
(2015 - 2016, 2017 - 2018, 2019 - 2020)


திரு.பத்மநாபன் சுந்தரம்
(2017-2018)



திரு.சேகர் வீரப்பன்
(2015-2016, 2017-2018)



திரு. கணபதி கார்த்திகேயன்
(2015 - 2016)




திரு.மலைசாமி சேதுராமன்
(2019-2020, 2023-2024)



திருமதி.மீனா சங்கரன்
(2019-2020)



ராமசாமி சுபாஷ்
(2023-2024)




திரு.மெய்யப்பன் மெய்யப்பன்
(2023-2024)


Dear Richmond Tamil Sangam Happy 25th to you. May you be blessed and prosperous.
Piano / Guitar / Vocal Classes
Faith Devapalan Music Studio An Affiliate of Trinity College Music London BSM, MA, MED, EDS, EDD
1. Highly Experienced and Qualified Teachers
2. Trinity College London Piano Exams
3. Kids play with both hands on the very first class
4. Kids learn their favorite songs
5. All ages 4 and above can learn
6. Summer package is available
Text or Call Faith
804.300.3106

# Best Wishes from



# Ashok, Uma, Karthik and Ashwin Chetty
## and
# Apsaras Arts Dance Group




# அந்த நாள் ஞாபகம்



ரவி திருவேங்கடத்தான்

நினைவேக்கமும் (nostalgia) ஒரு வகை நோய்தான் என்ற ஒரு கருத்து உண்டு. பலருக்கு மாற்றுக்கருத்து இருக்கலாம். அது அப்படி ஒன்றும் பொருட்படுத்தத் தக்க ஒரு நோய் அல்ல என்பது என் கருத்து. கடந்த காலங்களை அசை போடுவதும் நினைவலைகளில் மூழ்கி ஒரு சோகம் கலந்த பரவச நிலைக்குச் செல்வதும் பலருக்கும் நிகழக்கூடியதே.

இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவேறப் போகும் நிலையில் நான் முதன்முதலில் 27 ஆண்டுகளுக்கு முன் டென்னஸ்ஸியிலிருந்து இங்கு குடிபெயர்ந்த நாளையும் அதன் பின்னர் தமிழ்ச்சங்கம் தொடங்குவதற்காக 1999ல் எக்கோ ஏரி (Echo Lake) பூங்காவில் நடைபெற்ற, ஒரு 15-20 பேர் கொண்ட, கூட்டத்தையும் நினைத்துப் பார்க்கிறேன். கடந்து வந்த 27 வருட கால இரிச்மண்டு வாழ்க்கையும், ஏற்படுத்திக் கொண்ட நட்பு வட்டங்களும் மகிழ்ச்சியையும் மலைப்பையும் ஒரு சேரத் தருகின்றது.

தற்போது படு சுறுசுறுப்பாகக் காட்சி தரும் ஷார்ட் பம்ப் (Short Pump) பகுதி இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரும் ஒரு முக்கியமான இடமாக இருந்திருக்கிறது. இரிச்மண்டிலிருந்து சார்லட்ஸ்வில்லிற்கும் அதற்கு அப்பாலும் குதிரை வண்டியில் சென்ற பிரயாணிகள் தாங்கள் இளைப்பாறவும் மேலும் குதிரைகளுக்கு தண்ணீர் காட்டுவதற்காகவும் இங்கு நிறுத்தியதால் ஷார்ட் பம்ப் என்று பெயர் வந்ததாகக் குறிப்புகள் இருக்கின்றன.

90களின் ஆரம்பத்தில் ஆட்சியாளர்களின் தொலைநோக்கு பார்வையால் அமையப்பெற்ற இன்ஸ்ப்ரூக் (Innsbrook) வணிகப் பூங்கா மக்கள் இந்தப் பகுதியில் குடியேற வழி வகுத்தது. அதன் விளைவாக பெருங்கடைகளும் வர ஆரம்பித்தன. 90களின் இறுதியில் நான் வந்த போது ப்ராட் சாலை (Broad Street) ஷார்ட் பம்ப் / பவுன்ஸி ட்ராக் சந்திப்பிற்கு அப்பால் குறுகிய இரண்டு வழிச் சாலைதான். அதற்கு சில மாதங்களுக்கு முன் திறக்கப்பட்ட வால்மார்ட்டும் திறந்து சில நாட்களே ஆகி புதுக்கருக்கு குலையாமல் இருந்த டார்கெட்டும்தான் அப்போது இருந்த பெருங்கடைகள். மற்றபடி இப்போது இருக்கும் ஹோம் டிப்போ, லோவ்ஸ், கோல்ஸ் போன்றவை பின்னர் வந்தவைதான். பிரபலமான ஷார்ட் பம்ப் மால் 2004ல் தான் திறக்கப்பட்டது.

இப்போது நினைத்துப் பார்க்க விந்தையாக இருக்கலாம். இந்திய மளிகைச் சாமான்கள் வாங்குவதென்றால் அப்போது இருந்த ஒன்றிரெண்டு சிறிய கடைகளைத் தவிர வேறு கதியில்லை. வாஷிங்டன் டி.சி. அருகில் இருக்கும் ஆர்லிங்டன் ஏ1 கடைக்கோ அல்லது மேரிலேண்டில் இருக்கும் படேல் கடைக்கோ மாதமொரு முறை வண்டி கட்டிக் கொண்டு செல்வது வழக்கமான ஒன்று. நாம் போவதை அறிந்து அவரவர் வீட்டு மளிகைப் பட்டியலை நண்பர்கள் கொடுப்பதும் சகஜமான ஒன்றே. அந்தக் கடையில் 1999ல் படையப்பா ஒலித்தகடு வாங்கிய நினைவு இன்றும் பசுமையாக இருக்கிறது.

தமிழ்ச்சங்கம் தொடங்கிய பின் உறுப்பினர்களைச் சேர்த்ததும் சவாலான ஒன்றே. ஒரு 30-40 ஆர்வலர்களைத் தாண்டி மற்றவர்களைச் சேர்ப்பதற்குள் நுரை தள்ளி விடும். ஏதோ ஆம்வேகாரர்களைப் பார்த்தது போல் ஓடி ஒளிவார்கள். தமிழ்ச்சங்கம் க்ரீன் கார்டு வாங்கித் தருமா என்று கேட்டவர்களும் உண்டு.

25 ஆண்டுகளை நிறைவு செய்யும் தமிழ்ச்சங்கத்திற்கு உங்கள் பணி மேன்மேலும் சிறக்க உளங்கனிந்த வாழ்த்துக்கள்.



# பெற்றோர் பார்வையில் இரிச்மண்டு

அமெரிக்காவில் வெர்சீனியா மாநிலத்தில் அனைத்து வசதிகளும் பெற்றுள்ள எழில்மிகு நகரம் இரிச்மண்டு. இதில் வாழும் தமிழ் மக்கள் தம் மனநலம் மிகுதியால் தமது இனநலம் மேலோங்க அறிவுத்திறன் ஆக்கம் பெறவும் அதை வெளிப்படுத்தி ஊக்கமளிக்கவும் ஏற்பட்டது தமிழ்ச் சங்கம்.

**"மனநலம் மண்ணுயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்"**

என்பது வள்ளுவர் வாக்கு. அதன்படி இனநலம் பேணுவது எல்லாப்புகழையும் தருவது கண்கூடு. தமிழகப் பண்டிகை சமயங்களில் மக்கள் கூடி தங்கள் மேன்மையை ஆடல் பாடல் நிகழ்ச்சிகளாகக் கொண்டாடுகிறார்கள். மேலும் தமிழ்வழிக் கல்விக்கு பள்ளி நிறுவியிருக்கிறார்கள்.



இரா.வள்ளியம்மை, Dr.நா.ராஜேந்திரன்

மனையுறு மகளிர் சிறார்களுக்கு எழுத்து சொல்வளம் கற்பிப்பதால் சரளமாக தமிழ் பேசவும் புரிந்து கொள்ளவும் ஏதுவாகிறது. நல்ல உச்சரிப்புடன் பொருள் உணர்ந்து தமிழில் உரையாடுகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ளது போல் உணர்வு ஏற்படுகிறது.

இவையெல்லாம் மகிழ்ச்சிக்குரியவை.

தமிழ்ச்சங்கம் மேலும் வளர எங்களது வாழ்த்துக்கள்.

வாழ்க செந்தமிழ் வளர்க நற்றமிழர்.

Congratulations to

Richmond Tamil Sangam

on celebrating its

Silver Jubilee !

# JemJ Services



# தமிழ்ச்சங்கம் எனும் ஊர்க்கிணறு

**தவமணி**

உலகின் எந்த மூலையில் தன் வாழ்க்கை அமையப் போகிறது என அறிந்திடாத காலம். தமிழ்நாட்டில் பிறந்து, நல்ல முறையில் படித்து தேறி, இந்திய ஒன்றிய அரசு, "எங்க வேணா ஓடிப்போ" என கொடுத்த கடவுச் சீட்டை கையில் வைத்துக் கொண்டு அலைந்து கிடந்த காலம்.

அமெரிக்கா போகலாம் எனும் வாய்ப்பு வருகிறது. இரிச்மண்டு என்று ஒரு ஊர் இருப்பதோ, கேப்பிடல் ஒன், ஏந்தம் போன்ற நிறுவனங்கள் இருப்பதோ தெரிந்திருக்கவில்லை. அலுவலகத்தில் மேலதிகாரிகள் கூப்பிட்டு, ஆன்சைட்டு போக வேண்டி இருக்கும், ஏற்பாடுகளைச் செஞ்சுக்கோ என்ற போது, காலம் என்ற மலையருவி வாழ்க்கை எனும் பாறையை இரிச்மண்டு நோக்கி உருட்டி விடப் போகிறது என்று அறிந்திருக்கவில்லை. அப்படித்தான் நடந்தது. உருண்டு வந்து சேர்ந்தோம்.

20-25 ஆண்டுகளுக்கு முன் இரிச்மண்டு வந்து இறங்கிய பெரும்பாலான தமிழர்களின் வாழ்க்கை-வரலாற்றின் பொதுப் பகுதி மேலே உள்ள பத்திகள். சில சிறு மாற்றங்கள் இருக்கலாம். வேறு ஊருக்கு போய் கொஞ்ச நாள் இருந்து பின் இங்கு வந்து சேர்ந்திருக்கலாம், இங்கே வந்து பின் வேறு இடத்துக்கு போய் மீண்டும் திரும்பிய பலர் உண்டு. எதுவாகினும், அடிப்படைச் சட்டகம் (template) மேலே உள்ள பத்திகள் தான்.

வந்துவிட்டோம். புது ஊர், குளிர் இதுவரை காணாதது, இணையம் அதன் மழலைப் பருவத்தில் இருந்தது (ஊருக்கு தொலைபேசியில் பேச பல வேலைகள் செய்ய வேண்டும், அது பற்றி பிற்பாடு). எல்லோரும் புதுசு. எங்காவது தமிழ் போன்ற முகங்களைக் கண்டால், அவரிடம் பேசலாமா வேண்டாமா என்ற தயக்கம். நம்மைப் போலவே தயக்கத்தோடு உள்ளவரிடம் சிறு புன்னகை புரிந்து நெருங்கிப் போனால் "மீரு தெலுகா" எனக் கேட்டு இல்லை என்றதும் அவர் *U-turn* அடித்ததில் வாங்கிய மொக்கை என திருவிழாவில் காணாமல் போன குழந்தையென நின்றிருந்த காலங்கள் உண்டு. இளையராசாவும் யாகூ மெசஞ்சரும் மட்டுமே துணையிருந்தார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக, தமிழும் பேசும் நண்பர் குழு அமைத்துக் கொண்டு, ஆற்றில் மிதந்து ஓடும் பரிசலாக வாழ்க்கையின் போக்கில் அப்படியே ஓடிக்கொண்டிந்தோம். தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் நடைபெறத் துவங்கின. ஊர் நடுவே உள்ள பொதுக் கிணற்றில் நீர் நிரம்பியது போல ஆனது. நட்புறவை நாடி தாகத்தோடு காத்திருந்தவர்கள் கூடும் இடம் ஆனது தமிழ்ச்சங்கம். இன்றுவரை, பழைய தமிழ்ப்பட நாயகன் பேருந்தில் இருந்து புதிய ஊருக்கு திருதிருவென முழித்தபடி இறங்குவது போல இரிச்மண்டில் வந்திறங்கும் தமிழர்களுக்கு ஊர்க்கிணறு தமிழ்ச்சங்கம்தான். புதியவர்களுக்கு மட்டுமல்ல; பலருக்கு நட்புகள் அரும்பியது இங்கே தான். நம் பிள்ளைகள் தமிழ் படிப்பது இங்கே தான். தமிழ்நாட்டுக்கு இயற்கையால் துன்பம் நேர்கையில் பொருளுதவி செய்திட ஓடி வந்து நாம் நிற்பதும் இங்கேதான். உள்ளூரில் ஏழை மக்கள் குளிர் போக்க போகனாக கம்பளி கொடுக்க அணுகியதும் இங்கேதான்.

விளையாட்டு நிகழ்ச்சிகளாகட்டும், கலைநிகழ்ச்சிகளாகட்டும், இலைபோட்டு பொங்கல் விருந்து படைப்பதாகட்டும் இரிச்மண்டு தமிழரிடையே

நட்புறவுப் பாலத்தைக் கட்டியதில் பெரும்பங்கு ஐயம் திரிபற தமிழ்ச்சங்கத்துக்கேதான்.

யாதும் நம் ஊரேதான், 'கட்றா பொட்டிய' -ன்னு முரட்டுத் துணிச்சலில் வந்தவரை, இரிச்மண்டில் உள்ளவர் யாவரும் கேளிரே என நட்பியல் எழுதிக் கொண்டிருப்பது தமிழ்ச்சங்கம்.

**ஒப்புரவு எனில் Social Service என்று பொருள்.**

"எம்புள்ளைக்கு வெந்நீர் போடக்கூடத் தெரியாது, வீட்ல ஒரு வேலை செய்ய மாட்டான்/ள்" என்று ஒரு காலத்தில் உயரிய பட்டம் வாங்கியவர்கள் சட்டையை மடித்துக் கொண்டும் முந்தானையை வரிந்து கொண்டும் செய்யும் பொது வேலைகளை பார்க்க வேண்டுமே.

விடிய விடிய வேலை செய்து காட்டுக்குள் கூடாரம் அடித்து மக்களை தங்க வைத்ததாகட்டும், கைமாறு வேண்டா கடமையாளர்களாக ஆண்டு முழுதும் ஞாயிறுதோறும் தமிழ் கற்பிக்கும் தமிழாசிரியர்களாகட்டும், காலில் சக்கரம் இல்லாமலே சுழன்றடிக்கும் நிருவாகக் குழுவினராகட்டும், எங்காவது இடர் நேரும் போது பொருள் திரட்டிட உள்ளூர் இசைக் கலைஞர்களை ஒருங்கிணைத்து நிகழ்ச்சி நடத்தி நிதி திரட்டிக் கொடுப்பதாகட்டும் எவ்வளவு வேலைகள் சேர்ந்தாலும் கொஞ்சம் கூட சலித்துக் கொள்வதில்லை மேலே குறிப்பிட்ட "பட்டத்து இளவரசர்கள்/ இளவரசிகள்". பிடிச்ச வேலையைச் செய்வதில் ஏதுடா/டீ துன்பம்? வேலைதானே, இன்னொரு லோடு இருந்தால் அதையும் கொண்டு வா என அசராது செய்கிறார்கள்.

ஆம், பொதுச் சேவை செய்வதால் துன்பம் வரும் எனில் காசு கொடுத்துனாலும் அந்த "துன்பத்தை" வாங்கிக்கறேன் கொண்டு வாங்கடான்னு வரிசைல தமிழ்ச்சங்கமாக நிற்கிறார்கள் உள்ளூர்காரர்கள்.

மிகச் சுவையான பழங்களைக் கொடுக்கும் ஒரு பெருமரம் காய்த்துக் குலுங்கி ஊர்க்கிணற்றின் அருகே பொதுமக்களுக்காக இருப்பது போல இரிச்மண்டில் நட்பையும் உறவையும் மகிழ்ச்சியையும் வழங்கி 25 ஆண்டுகளாக தமிழ் வளர்த்து வரும் தமிழ்ச்சங்கம் வாழிய வாழிய வாழியவே.

கட்டுரையில் உள்ள உவமைகள் அனைத்தும் வள்ளுவரும் பூங்குன்றனாரும் சொல்லியவை. நடுநடுவே மானே தேனே பொன்மானே சேர்த்து *Remix* மட்டுமே புதுசு.

# மழலை மலர்க்கொத்து

அன்பால் ஆர்வத்தால்
அரவணைப்பால் ஆவலால்
என் ஞாயிற்று கிழமையை
மகிழ்விக்கும் என் மழலை மலர்க்கொத்து

புன்னகையால் பொலிவால்
கேள்விகளால் குறும்பால்
புத்துணர்வை தரும் என் மழலை மலர்க்கொத்து

இனிமையாய் இயல்பாய்
இன்பமாய்
அத்தையென்றும் ஆன்டியென்றும்
ஆசிரியையென்றும்
பொலிவூட்டும் என் மழலை மலர்க்கொத்து


சிரிப்பால் பண்பால்
மட்டுமின்றி
என் தாய்மொழியான தமிழ்மொழிக்கு
உங்கள் மழலைச் சொற்களால்
பெருமை சேர்க்கும் என் மழலை மலர்க்கொத்து

ஆயிரம் வணக்கங்களுடன்
சமர்ப்பிக்கிறேன்



**சுனிதா**

# தமிழ்க்குடும்பங்களின் சங்கமம்



ஜெயகாந்தன் நாராயணசாமி

இந்த 2024ஆம் ஆண்டோடு தமிழ்ச்சங்கம் நிறுவி 25 ஆண்டுகள் ஆகிவிட்டது! நான் 1997ல் சென்னையிலிருந்து கலிபோர்னியா வந்தபோது அறிமுகமான பல தமிழ் நண்பர்களால் நம் வீட்டை விட்டு நெடுந்தொலைவு வந்தவிட்ட நினைப்பு அதிகம் இல்லை! ஆனால் 2002ல் நான் கலிபோர்னியாவில் 5 ஆண்டுகள் பழகிய பல தமிழ் நண்பர்களை எல்லாம் விட்டு புளோரிடா சென்றபின் தமிழ், போனில் மட்டுமே பேச முடிந்தது பெரும் இழப்பாக இருந்தது! ஓர் ஆண்டு கழித்து புளோரிடாவிலிருந்து இரிச்மண்டிற்கு குடிபெயர்ந்த பின்னர், தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் மூலம் மீண்டும் பல தமிழ்க்குடும்பங்கள் அறிமுகம்! அதில் பலர் இன்றும் நம் குடும்பத்தில் ஒருவராக (நாங்களும்!) இருப்பது சிறப்பு!

இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் தமிழ்க்குடும்பங்களின் சங்கமம் என்றால் மிகையாகாது! ஒருவருக்கொருவர் தகவல் பரிமாறிக்கொள்வதுடன் தானாக முன் வந்து எந்தக் கைமாறும் எதிர்பார்க்காமல் உதவி செய்வதும் இங்கு மட்டும் தான் பார்க்கமுடியும்! எங்க வீட்டம்மா மருத்துவமனையில் இருந்த போது சங்க நண்பர்கள் நாங்கள் கேட்காமலே வீட்டு உணவு கொண்டுவருவது நெகிழ்வான தருணங்கள்! யாராவது புதிதாக இரிச்மண்டிற்கு வந்திருந்தால், தயங்காமல் தமிழ்ச்சங்கத்தை அணுகி தகவல் கேட்டுக்கொள்ளலாம்! கடந்த 10 ஆண்டுகளாக வாட்சப் வந்தபின்னர் சங்க நண்பர்கள் அரட்டை அரங்கம் என்ற குழுவில் சினிமா, அரசியல், நாட்டு நடப்பு, பொருளாதாரம், கல்வி போன்ற பல விபரங்களைப் பகிர்கின்றனர்! இது போல தமிழ்ச்சங்கமும் ஒருவழித்தகவல் பரிமாற ஒரு குழுவை உண்டாக்கினர்! சில நண்பர்கள் சேர்ந்து “உதவும் கரங்கள்” குழுவின் வழியாக வீட்டு பராமரிப்புத்தகவல் மற்றும் நல்ல தொழில்நுட்பப் பணியாளர்களை பரிந்துரை செய்வது, மற்றுமொரு குழுவில் பல இயற்கை விரும்பிகள் சேர்ந்து வாரத்தில் ஒருநாள் வெர்சீனியாவின் பல மாநில மலை/பூங்கா/காடுகளுக்கு சென்று வருவதுண்டு! நண்பர்கள் சேர்ந்து கைப்பந்து, ஊறுகாய்ப் பந்து (அதாங்க பிக்கிள் பால்!) போன்ற விளையாட்டுகளுக்கு வாரந்தோறும் நினைவூட்டல் அனுப்புவதுண்டு! மேலும் தமிழ் ஆர்வலர்கள் சேர்ந்து “ஓதுவது ஒழியேல்" எனும் குழுவிலும், அதில் பலர் தமிழ்ச்சங்கத்தின் வலைப்பூவிலும் பல படைப்புகளை பகிர்கின்றனர்!

அது சரி, நாம் குடிபுகுந்த நாட்டிற்காக வேறு என்ன பெரிதாக செய்து விட்டீர்கள் என்று கேட்பவருக்கு, ஆண்டுதோறும் ஒன்று அல்லது இருமுறை வீடில்லாதவர்களுக்கு உதவும் அமெரிக்க தேவாலயங்களுடன் இணைந்து இரவு உணவுற்கு பண



உதவியும், செயல் உதவியும் தவறாது தமிழ்ச்சங்கத்தின் வாயிலாக செய்கின்றோம்! மேலும் பல பேரிடர்களின் போது கலை நிகழ்ச்சிகள், பயிலரங்கங்கள், போட்டிகள் மூலம் பெருமளவில் நிதி திரட்டி மிகக் கவனமாக தேர்வு செய்த தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பியிருக்கிறோம்! தமிழ்ச்சங்கத்தின் கோடைக்கால முகாம் நுழைவுச்சீட்டுகள் ஒரே மணி நேரத்தில் விற்றுவிடுவதில் அதன் சிறப்பு தெரியவரும்! கூடாரங்கள், சிறார் விளையாட்டு, காலைச் சிற்றுண்டி, பகலுணவு மற்றும் மாலை சிற்றுண்டி/பார்பக்யு என சிறப்பாகச் செய்வதும், ஒவ்வொரு ஆண்டும் புதிய இடத்திற்கு செல்லும் மகிழ்ச்சி என அதனை விவரிக்க இன்னும் பல பக்கங்கள் வேண்டும்!

இதெல்லாம் தான் இங்கே இருக்கின்ற வேலை இறுக்கத்தின் இடையில் நம் கலாச்சாரத்தையும் தமிழ் மொழியையும் வளர்க்க எங்களால் ஆன சிறு முயற்சி!

## கேலி சித்திரம்






உமா சரவணன்

# சிந்தனை செய் மனமே!!

**கண்டதையும் கேட்டதையும் நினைக்குற**
**விழித்திருக்க, பசித்திருக்க மறக்குற**
**என்னத்தையோ ஆராயுற எண்ணத்தைத் தவிர**
**சிந்தனை செய் மனமே!!**

**உலகம் நல்லா புரியுது, விஞ்ஞானத்தோடு விரியுது**
**திரைகடல் ஓட சொல்லி திரவியம் தேடுது**
**மெய்ப்பொருள் காணும்போது திணறுது**
**சிந்தனை செய் மனமே!!**

**எதுக்கு வந்தேன் தெரியல**
**வந்த வேலை முடியல**
**மக்கள் தொண்டோ, மகேசன் தொண்டோ**
**மனத்துக்கண் மாசிலன் தானே**
**நாலு பேருக்கு நல்லதுன்னா எதுவுமே தப்பில்ல**
**சிந்தனை செய் மனமே!!**



அரவிந்தன் மணிவண்ணன்

# Mehta Financial Group, LLC

## Comprehensive Financial Planning and Wealth Management

9609 Gayton Rd, Suite 102 | Richmond, VA 23238
Ph: 804-273-1610 | Fax: 804-273-1609
Email: Info@mehtafinancialgroup.com | Web: mehtafinancialgroup.com

**AS FEATURED BY:**

THE WALL STREET JOURNAL. YAHOO! FINANCE CNBC USA TODAY CBS NEWS

- Financial Planning
- Life Insurance Solutions
- Investment Strategies
- Retirement Planning
- Asset Allocation Models
- Wealth Management
- College Savings Plans
- Asset Accumulation
- Portfolio Management
- Estate Planning



**Divam N. Mehta, CFP®, ChFC®, MBA**

Securities offered through Registered Representatives of Cambridge Investment Research, Inc., a broker-dealer member FINRA/SIPC. Advisory Services offered through Cambridge Investment Research Advisors, Inc., a Registered Investment Adviser. Cambridge and Mehta Financial Group, LLC are not affiliated.



# இரிச்மண்டு தமிழ்ப் பள்ளி

**தேமதுர தமிழோசை உலகமெல்லாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்**

- பாரதியார்

செழுமையும் தொன்மையும் நிறைந்த தமிழ் என்னும் ஆலமரத்தின் விழுதுகள் பாரெங்கும் பரவி இருக்க, அதில் ஒரு விழுதாக வேரூன்றியதுதான் இரிச்மண்டு தமிழ்ப் பள்ளி. பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் கற்பிக்கும் பணியினை செவ்வனே செய்து வருகிறது. சிறிய குழுவை அமைத்து அதன் மூலம் தமிழ் மொழியை கற்றுத் தந்த எங்களுக்கு அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் ஒரு சிறந்த வழித் துணையாக இருந்தது.

கடந்த பதிமூன்று ஆண்டுகளாக அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்தின் பாட புத்தகங்களை பயன்படுத்தி வருகிறது. ஆரம்ப காலத்தில் 2003 ஆம் ஆண்டில் 20 மாணவர்களையும், 5 ஆசிரியர்களையும் கொண்டு தொடங்கிய இப்பள்ளி, இன்று மழலை வகுப்பு முதல் நிலை 8 வகுப்புகள் வரை, 183 மாணவர்கள் மற்றும் 19 ஆசிரியர்கள் என விரிவடைந்துள்ளது.

ஆசிரியர்கள் : ஆசிரியர்களின் உன்னதமான சேவை இங்கே மறக்க முடியாத ஒன்றாகும். தமிழை குழந்தைகளுக்கு புகட்டும் பாசமும், அறிவு சார்ந்த வழிகளும் அவர்களின் தனித் திறமை. இதனால் மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்கத் தொடங்கியது, மேலும் பெற்றோர்களின் பங்கேற்பும் அதிகரித்தது.

மாணவர்கள் மென்மேலும் வளர எங்கள் பள்ளி புதிய முறைகளில் போட்டிகள் வைக்கத் தொடங்கியது. மாணவர்கள் வெகு உற்சாகத்துடனும் கலந்து கொண்டனர். அது ATA நடத்திய தமிழ் போட்டிகளில் பங்கு பெற முக்கிய காரணம். எங்கள் பள்ளி மாணவர்கள் தேசிய அளவில் போட்டிகளில் கலந்து விருதுகளை வென்று வருகின்றனர்.



**திருமதி.லதா தியாகராஜன்**

தன்னார்வலர்கள்: எங்கள் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் பணியை தடையின்றி செய்வதற்கு பக்கபலமாகவும், உறுதுணையாகவும் இருக்கும் தன்னார்வலர்கள் உதவி குறிப்பிடத்தக்கது. இவர்கள் தங்கள் நேரத்தை ஒதுக்கி ஆண்டு முழுவதும் துணை ஆசிரியை, வீட்டுப்பாடம் சரிபார்ப்பது மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, தேர்வு நேர உதவி என்று மிக சிறப்பாக உதவிகள் செய்து வருகிறார்கள்.

**பள்ளியின் சாதனைகள்:**

முத்தமிழ் என்னும் இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய

மூன்றையும் மாணவர்கள் வெளிப்படுத்தும் வகையில் நமது பள்ளியின் முயற்சிகள் கீழ் வருமாறு:

கொரோனா பேரிடர் காலத்தில், தமிழ்ப் பள்ளியின் சேவையினை தொடரும் வகையில் இரண்டு ஆண்டுகள் மெய்நிகர் வகுப்புகள் நடைபெற்றன . இக்காலத்திலும் மாணவர்கள் தம் தமிழ் திறமையை வளர்க்கவும் மற்றும் வெளிப்படுத்தும் வகையில் ஆத்திச்சூடி, திருக்குறள், நாட்டுப்பற்றுப் பாடல், பேச்சுப் போட்டி ஆகிய போட்டிகளை மெய்நிகர் முறையில் சிறப்பாக நடத்தியது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு மாணவரிடத்தும் பெற்றோரிடத்தும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இரிச்மண்டு தமிழ் சங்கத்தின் மாத இதழ் "கதம்பம்" இதழில் தமிழ் மாணவர்கள் என்னும் பகுதியில் மாதம் ஒரு வகுப்பு ஒரு தலைப்பு என்ற அடிப்படையில் தமிழ் ஆசிரியர்கள் அறிவுரையின் படி கதை, கட்டுரை, ஓவியம், மாறு வேடம் என பல்வேறு தலைப்புகளில் பள்ளி மாணவர்களின் பங்களிப்பு வெளியாகிறது.

பீட்ஸ் ரேடியோ நடத்திய சிறுவர்களுக்கான ஒரு நிமிட சவால் என்ற தமிழ் நிகழ்ச்சியில் நம் பள்ளியின் மாணவ மாணவியர் கதை, பாடல், திருக்குறள் ஒப்புவித்தல் என சிறப்பாக பங்களித்தது ஒலிபரப்பாகியது. அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் நடைபெற்ற பல போட்டிகளிலும் நம் பள்ளி மாணவ மணிகள் பங்குபெற்றதும் வெற்றி பெற்றதும் பெருமைக்குரியது.

தமிழ் வளர்ப்பு என்பது நம் அடுத்த தலைமுறைக்கு தமிழைக் கொண்டு சேர்ப்பதுவே ஆகும். எக்கண்டம் சென்றாலும் எந்நாட்டில் வாழ்ந்தாலும் நம் தாய் தமிழ் மறவாத தமிழ் உள்ளங்களின் ஆதரவோடும், மாணவ மணிகளின் முயற்சியோடும், ஆசிரிய பெருமக்களின் ஆற்றலோடும் இரிச்மண்டு தமிழ்ப் பள்ளி நம் தாய் தமிழை அடுத்தடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் பணியினை காலம் கடந்து என்றும் செவ்வனே செய்வதே பள்ளியின் நோக்கம்.


**தமிழன் என்றொரு இனமுண்டு**
**அவனுக்குத் தனியொரு குணமுண்டு**
**அமிழ்தம் அவந்தம் மொழியாகும்**
**அன்பே அவனது வழியாகும்**


– கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்

National General Insurance
MERCURY INSURANCE
PROGRESSIVE
KEMPER
DAIRYLAND AUTO · CYCLE INSURANCE
THE GENERAL
Allstate You're in good hands.
Trexis Insurance
American MODERN
FOREMOST INSURANCE GROUP
Rockingham Group INSURANCE SINCE 1869
Commonwealth
Insurance Agency
Joel Johnson 804 426 1984


Rainbow Makeup Artistry LLC
Makeup Artist
Exalted Beauty: Your Canvas, My Art
Traditional Makeup
Airbrush Makeup
Creative Makeup
Makeup Lessons
Book Your Appointments At
732-429-6301


LAA CREATORS
Content Creative | Media
Social Website
804-801-0711
https://laacreators.com
laacreators18@gmail.com


FEMME JOCK
REDUCE PAIN | IMPROVE FUNCTION
FINEST QUALITY
100% MEDICAL GRADE
DESIGNED IN USA
99% SATISFACTION RATE
PREMIUM PELVIC FLOOR SUPPORT
ERGONOMIC FIT
EASY ON/OFF WEAR
FIRM SUPPORT
DESIGNED & DEVELOPED BY PHYSICAL THERAPIST IN USA
AVAILABLE ON WEBSITE, AMAZON, ETSY AND OTHER MARKET PLACES
Visit us: www.thefemmejock.com


RVA
RVA Physical Therapy & Sports Rehab
Your Road to Recovery Begins Here
Do you have a pain somewhere in your body that prevents you from doing what you want to do?
Visit the experts of RVA Physical Therapy and they will find a solution for you.
Call 804-396-6753 today or book online at
www.rvaphysicaltherapy.com
2620 A Gaskins Rd, Henrico, VA 23238 | 107 Heaths Way, Midlothian, VA 23114
We accept all major insurances.
Follow us on Instagram


FATHOM
REALTY
Buying
OR Selling
HOME?
Call today for your real estate needs -
I am never too busy for your referrals
johnsondet@gmail.com
www.homeswithjohnson.com
Johnson Thankachan
804 931 1265


K12Skills
Mathematics for Life
MATHEMATICS
COACHING
CLASS
For Elementary, Middle,
High school and SAT
CONTACT
MANDAR DESHPANDE
PHONE : 804.803.3819
Email : info@k12skills.com
visit us online at
www.k12skills.com

# தமிழ்ப் பள்ளிப் புகைப்படத் தொகுப்பு




















Richmond Tamil Sangam




























Richmond Tamil Sangam








ரிச்மண்ட் தமிழ்ச் சங்கம்

**EARLY CHILDHOOD EDUCATION**

# The Peacock Montessori

**Play is the work of the Children**
**-Maria Montessori**

**Discover Montessori Excellence!**

**"Enroll your child in our nurturing environment for**



**individualized growth"**



- ★ **Affiliated With International Association For Progressive Education**
- ★ **VA State Approved Family Day Care**



**25th**
**Anniversary Wishes RTS !**

**Age - 4 to 6**
**Time 8.30 AM to 5.30 PM**

## Director - Subha Babu



**Contact Us At**
**info@thepeacockmontessori.com**
**804 767 7333**
**5404 Bennett Ln, Glen Allen, VA**

# இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் வெள்ளி விழா கொண்டாட்டங்கள்

## இசை மழை நனைத்தபொழுது















# தமிழ்ப்பள்ளி









# நினைவுப்பரிசுகள்




























# மலர் வெளியீடு











# ருசியோ ருசி

















# விருந்தினர்





# ஆர் டி எஸ் - 25 உருவான கதை



சந்தானகுமார் மோகனசுந்தரம்

தென்னை மரத்துல தேள் கொட்டினா பனை மரத்துல நெறி கட்டுமாம் என்பது பழமொழி. துபாயில மழை பெய்தால் ரிச்மண்டுல புயல் அடிக்குமாம் என்பதே புதுமொழி. என்ன ஒன்னும் புரியலையா? சரி வாங்க கதைக்குள்ள போவோம்.

நம்ம கதையின் கதாநாயகன் ஒரு பக்கா 420. அட ஆமாங்க நெஜமாவே அந்த 4/20 தான் நம்ம கதாநாயகன். இந்த 4/20யை மெருகேத்தி எப்படியோ தேர்வு செஞ்சு, டீப் ரன் பள்ளியையும் புக் பண்ணியாச்சு.

அதுக்கு அப்புறமா கதையிலே மானே தேனே பொன்மானே போடற வகையில 4/20 வேணுமா வேணாமா, யாரை கூப்பிடனும், என்ன மாதிரி நிகழ்ச்சி நடத்தணும் என்றெல்லாம் யோசித்து ஒரு வழியா முடிவு பண்ணியாச்சு. இங்கேதான் கதையிலே ஒரு திருப்பம்.

அந்த பள்ளியிலிருந்து வந்த அழைப்பு தலையிலே இடி மாதிரி விழுந்தது. அவங்களுக்கு 4/20யை புடிக்கலையாம். சரி 4/20 இல்லேன்னா என்ன ஒரு 10/20 அல்லது 11/20யை வெச்சு கதையை முடிக்க வேண்டியதுதானே? அது எப்படி, நமக்கு பெட்ரோமாக்ஸ் லைட்டே தான் வேணும். எனவே ஹனோவர், கூச்சுலாந்து, செஸ்டெர்பீல்டு, போவாதான் (பிரின்ஸ் வில்லியம், கரோலின், லௌடொன், ஆர்லிங்டன் போதும் போதும் லிஸ்ட் நீண்டுகிட்டே போகுது) கவுண்டில எல்லாம் தேடிப்புடிச்சு வேற ஒரு பள்ளியை தேர்வு செஞ்சோம். அப்பாடா எல்லாம் நல்லபடியா முடிஞ்சுதுன்னு நினைக்கும்போதுதான் கதையிலே மற்றொரு திருப்பம்.

நம்ம கதாநாயகன் இங்க நமக்கு கால்ஷீட் குடுத்துட்டு, Ukrop ரன்னுக்கு, பஞ்சாபி மேளாவுக்கு, பட்டம் விடும் விழாவுக்கு என்று நாலாபக்கமும் அவரோட கால்ஷீட்டை குடுத்துட்டாரு போல இருக்கு. 4/20க்கு அத்தனை போட்டி. எதை எடுப்பது, எதை விடுப்பதுன்னு இரிச்மண்டு தமிழ் சங்கத்து உறுப்பினர்களுக்கு திண்டாட்டமோ திண்டாட்டம்.

இப்படியாக 4/20யும் நெருங்கியாச்சு. சூப்பர் சிங்கர்ஸ் சென்னை ஏர்போர்ட்ல சுயமி எல்லாம் எடுத்து, Have a Safe tripன்னு மெசேஜ் எல்லாம் போட்டாச்சு. இடி விழுந்த இடத்துல இப்ப நிஜமாவே மின்னல். துபாய்ங்கற பாலைவனத்துல வரலாறு காணாத மழை . எல்லா விமான சேவையும் ரத்து செய்யப்பட்டு நம்ம சூப்பர் சிங்கர்ஸ் துபாய் வழியா வருவதில் இடியாப்ப சிக்கல். வேற வழியே இல்லாம நியூயார்க் போய் கூட்டிட்டு வரவேண்டியதுதான் நமக்கு இருந்த ஒரே வழி.

தடைக்கற்கள் பல இருந்தும் அவற்றையெல்லாம் படிக்கற்களாக மாற்றி நம்ம நிர்வாக குழு தன்னார்வலர்கள் உதவியுடன் ஒருவழியாக இந்த 25ஆம் ஆண்டு விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்தோம்.

வீட்டை கட்டிப் பார்! கல்யாணம் பண்ணி பார்!! வெள்ளி விழா நடத்தி பார்!!!

searchblox

Is Your Enterprise **Ready for SearchAI?**

# Elevate Your Adobe Experience Manager (AEM) Site with AI Chatbots.

SearchAI **leverages the power of artificial intelligence** to transform the way customers and companies retrieve information.

For Customers

**Customer Self Service**

Leverage AI to answer user questions and queries.

For Customers

**Customer Advisor**

Show strategic products and answers automatically.

For Customers

**Information Access**

Help users find products, services and people - fast.

For Employees

**Knowledge Management**

Ask internal ChatBot for endless company data.

For Employees

**Employee Self Service**

Connect distributed teams across all data silos.

For Employees

**Operational Efficiency**


Onboarding or Training? Do it automatically with AI.

**Read more on how you can elevate your AEM site with AI Chatbots and schedule a demo.**

**We simplify search for complex organizations.**



**சிவகாமி செல்லப்பன்**



**பரமகல்யாணி சங்கரன்**

சங்கம் என்பது தமிழை வளர்க்கும் பொருட்டு புலவர்கள் ஒருங்கிணைந்த ஒரு கூட்டமைப்பு. இதைச் செயல் படுத்த, தமிழ்ச்சங்கம் என்னும் பெயரில் பல்வேறு கால-கட்டங்களில் பல்வேறு சங்கங்கள் நிலவிவந்தன. குறிப்பாக, வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களுக்கு, தமிழை வளர்ப்பதில் தமிழ்ச்சங்கங்கள் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன.

அவ்வாறு, இக்குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் வெள்ளி விழா காணும் இரிச்மண்டு தமிழ் சங்கமும், அமெரிக்கா தமிழ் அகாடெமியுடன் இனைந்து இரிச்மண்டு தமிழ் பள்ளி வாயிலாக இந்நகர் குழந்தைகளுக்கு நமது தாய் மொழியாம் தமிழ் மொழியை பயிற்று வருகின்றது.


இரிச்மண்டு தமிழ் பள்ளி, குழந்தைகளுக்கு ஏட்டுப் படிப்பை மட்டுமே குறிக்கோளாய் எடுத்துச் செல்லாமல், வெவ்வேறு போட்டிகள் நடத்தி, அதன் மூலம் அவர்களுடைய சிந்திக்கும் திறன் மற்றும் பேச்சுத் திறன்களை வளர்ப்பதில் பெரும் கவனம் செலுத்தி வருகிறது. குழந்தைகளின் வெளியுலக அறிவை அவர்கள் அறிந்த வகையில் வளர்க்க களப்பயணங்களை மேற்கொண்டு அதன் மூலம் அவர்கள் கற்றதை கண்டு களிக்கச் செய்கிறது. இது எல்லாவற்றிற்கும் மேலாக, குழந்தைகள் கற்கும் இந்த தமிழ் மொழி, அவர்களுடைய உயர் கல்விக்கு உதவும் வகையான அங்கீகாரங்கள் பெறுவதற்கு உண்டான முயற்சிகளை செய்து வருகின்றது.

தமிழன் என்று சொல்லடா - தலை நிமிர்ந்து நில்லடா என்ற நாமக்கல் கவிஞரின் கூற்றுக்கேற்ப, தமிழ்க்களஞ்சியங்களை உருவாக்கும் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மற்றும் வெள்ளி விழா காணும் இரிச்மண்டு தமிழ் சங்கத்திற்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.


அன்புடன்,

**சிவகாமி செல்லப்பன், பரமகல்யாணி சங்கரன்**


# தமிழ்க் கல்வி நற்பணியாளர்கள்




இலக்குவன்
பழநியப்பன்
(2005 - 2006)




ராஜேஷ்
ஸ்ரீனிவாசன்
2004-2005



இரவி
திருவேங்கடத்தான்
(2005 - 2006)




சத்தியா
திருவேங்கடத்தான்
(2005 - 2006)



கார்த்திகேயன்
அங்கமுத்து
(2006 - இன்றுவரை)



லதா தியாகராஜன்
(2006-இன்றுவரை)




வெங்கடேசன் சீனி
செட்டியார்
(2007-இன்றுவரை)



முத்துராஜ்
சண்முகவேல்
(2008- இன்றுவரை)



சிவகாமி
சோலையப்பன்
(2010-2017)



மெய்யப்பன்
மெய்யப்பன்
(2010 - 2015)



ஸ்ரீதர்
பாலகிருஷ்ணன்
(2011 - 2012)



பாரதி திருநெல்லை
(2011 - 2012)



அனிதா நடராஜன்
(2012-2013)

# தமிழ்க் கல்வி நற்பணியாளர்கள்



சிவகாமி செல்லப்பன்
(2013- இன்றுவரை)



சுனிதா சந்திரமோகன்
(2013-2021)



குழல் சுந்தர்
(2013-2016)



ஜெயகௌரி சிற்றரசன்
(2014-2023)



கவிதா மகேஷ்
(2014-2015)




பிரவீனா இராம்குமார்
(2016 -இன்றுவரை)



சரவணன் இராசமாணிக்கம்
(2017 - இன்றுவரை)



அகிலா ஆனந்த்
(2017-2018)



பா. அருண் சாகர்
(2018-2022)



சுனிதா செந்தில்ராஜ்
(2020- இன்றுவரை)



சூர்யா பாலசுப்ரமணியன்
(2020 - இன்றுவரை)



கிருத்திகா ராதாகிருஷ்ணன்
(2020 - இன்றுவரை)

# தமிழ்க் கல்வி நற்பணியாளர்கள்



சங்கீதா வெங்கடேசன்
(2020-2023)



காயத்திரி மஹேந்திரன்
(2020-2023)



தீபா பிரகாஷ்
(2020 - 2021)



அஷோக் பழனிசாமி
(2021- இன்றுவரை)



விக்ரமன் இராமலிங்கம்
(2021 -இன்றுவரை)



உமாதேவி சுப்பிரமணி
(2021-2022)



பிரேமலதா கார்த்திகேயன்
(2022- இன்றுவரை)



சுகன்யா சுரேஷ்
(2022-2023)



பத்மப்ரியா செந்தாமரை கண்ணன்
(2023-இன்றுவரை )




புவனேஸ்வரி கோவிந்தசாமி
(2023-இன்றுவரை)



ஷர்மிளா சரவணன்
(2023- இன்றுவரை)



பரமகல்யாணி சங்கரன்
(2023- இன்றுவரை)



மார்செலின் லூவிஸ்மார்ட்டின்
(ATA ஒருங்கினைப்பாளர்)


MIRCHI'S
Indian Kitchen & Bar
In the heart of West Cary
(Opp Mod Pizza in Amberly Place)
WE AVAILABLE FOR:
Corporate Events
Family Party
Birthday Party
Private Events
Daily Catering
Wedding Party
CONTACT US
+919 650 3007
mirchisnc.com
328 Sembler Lane, Cary , NC 27519
(Intersection of Green level Church & Carpenter Fire Station)

# அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்— ஆசிரியர் விருது



வெங்கடேசன் சீனி செட்டியார் (2021)



சிவகாமி செல்லப்பன் (2021)



Muthuraj 2021 ATA award



சரவணன் இராசமாணிக்கம் (2022)



Gowri 2022 ATA award



பிரவீனா இராம்குமார் (2022)


கார்த்திகேயன் அங்குமுத்து (2023)


Latha 2023 ATA award

# Hardwin Software Solutions Pvt. Ltd

Transform your ideas to solutions



Best Wishes RTS for Celebrating 25th anniversary year

## Our Services:

**DevOps Services:**

- Assessment and Implementation
- DevOps Managed Services
- Automation and Orchestration
- Performance Optimization
- DevOps tools

**Data warehousing services:**

- Data Acquisition and Integration
- Data Architecture and Modelling
- Data Reporting and Visualisation

**AI and ML:**

- AI Consulting and Development
- ML models and algorithms
- NLP and Data support
- Cybersecurity consulting
- Managed Detection and Response
- Threat and Vulnerability Management
- Data Protection and Privacy
- IoT Security

**Web and Mobile apps development:**

- UI/UX Design
- Custom web development
- Design and Architecture
- Mobile apps development

## Specialization:

| Web Technologies | Native Android | UI/UX | Native IOS | Database | Server | CMS |
|---|---|---|---|---|---|---|
| Java | Kotlin | Figma | Flutter | MySQL | Node | Drupal |
| Python | Java | Adobe XD | Swift | PostgreSQL | Go Lang | Wordpress |
| .Net | Flutter | InVision | Ionic | MongoDB | PHP | |
| Node | Ionic | Wireframe | React Native | | | |
| Javascript | Dart | Photoshop | | | | |
| SASS | React Native | Illustrator | | | | |

Office locations - US, Middle East, & India

www.hardwinsoftware.com



ஆக்கம்
AAKAM
BUILDERS
Welcome to the Future
Hygrevar Ventures
INDIA'S BIGGEST SATELLITE TOWNS
For DELHI - GURUGRAM & NOIDA
For MUMBAI - NAVI MUMBAI & THANE
For CHENNAI -
PROPOSED MAMALLAPURAM SATELLITE TOWN
NEAR OUR MAMALLAN SATELLITE TOWN
Gated Community
Special Pre Launch Offer
PREMIUM VILLA PLOTS @ 9 LAKHS Onwards
WHY INVEST? - LOCATIONAL ADVANTAGE
• BEST INVESTMENT
• HIGH APPRECIATION
• MAJOR NEW DEVELOPMENTS
• RENOWNED DEVELOPER
( Close to 1 Million Square feet Delivered )
DTCP APPROVED
LAYOUT NO. 72/2023
TN RERA APPROVED
TN/01/LAYOUT/1566/2023
• LOCATION :- CLOSE TO
OMR, ECR, GST, PERIPHERAL RING ROAD !!!
• READY TO BUILD VILLA PLOTS
• SURROUNDED BY HOUSES & SHOPS
• 20 + WORLD CLASS AMENITIES
Chengalpattu
ECR
OMR
Outer Ring Road
Mahabalipuram
Poonjeri
Mahabalipuram
AAKAM BUILDERS PVT. LTD
HYGREVAR VENTURES
F3, First floor, Door No.475,
Anna Salai (Link Road),
Nandanam, Chennai - 600 035.
+ 91 90437 43701
+ 91 90437 43702
www.hygrevarventures.in
1. 2 minutes walk to the Bus Stop
2. 3 minutes Drive to Thirukazhukundram
3. 3 minutes Drive to Outer Ring Road
4. 10 minutes drive to Mahabalipuram Temple
5. Vicinity of Government Proposed Mamallapuram Satellite Town
6. 2 minutes walk to Thirukazhukundram to Mahabalipuram Highway
Disclaimer : * This brouchure is merely illustrative and does not constitute a legal offering. Information contained herein are subject to change without notice.

# போட்டிகள்



கட்டுரைப் போட்டி -1



கட்டுரைப் போட்டி – 1



கதை சொல்லும் போட்டி



தமிழ் பாட்டுப் போட்டி



திருக்குறள் போட்டி -1



திருக்குறள் போட்டி -2



பேச்சுப்போட்டி -1



பேச்சுப்போட்டி -2



பேச்சுப்போட்டி -3



வாசித்தல் போட்டி -1



வாசித்தல் போட்டி -1



வாசித்தல் போட்டி -1

# குறளும்– chatGPT யும்

chatGPT பற்றிய செய்திகள் சமீப காலமாக அதிகமாக கேள்விப்பட முடிகின்றது. இணையத்தில் எங்கு பார்த்தாலும் chatGPT என்ற வார்த்தை பயன்படுத்தப்படாமல் இருக்காது. தமிழ் காவியமானான திருக்குறள் கூட தற்பொழுது chatGPT மூலமாக பயிற்றுவிக்கப்படுகிறது. www.thirukural.ai ஐப் பயன்படுத்தி ChatGPT மூலம் திருக்குறள் விளக்கவுரையை ஆராயும் போது, - மு. வரதராசன் , மு.கருணாநிதி, பரிமேலழகர் , சாலமன் பாப்பையா ஆகியோரது உரை விளக் கத்துடன் மேற்கோள் காட்டப்பட்டது. பல்வேறு



GG (Glen Allen Ganapathy)

விளக்கங்களுடன் - ஒவ்வொரு குறளின் சூழலையும் நாம் சித்தரிக்க முடிந்தால் - குழந்தைகளுக்கு குறளைப் புரிந்துகொள்வது இன்னும் எளிதாக இருக்கும் என்று நான் நினைத்தேன்.

இந்த கருத்தை மேலும் சோதிக்க - சில திருக்குறளை சித்தரிக்க Microsoft CHATGPT ஐ பயன்படுத்தி சில குறள்கள் சித்தரித்து உள்ளேன் . இதோ சில மாதிரிகள்.



**பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**

**வேந்தர்க்கு வேண்டும் பொழுது**

பொருள் : பகல் நேரமாக இருந்தால் கோட்டானைக் காக்கைவென்று விடும் எனவே எதிரியை வீழ்த்துவதற்கு ஏற்ற காலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்**

**செல்வத்து ளெல்லாந் தலை.**

பொருள்: செழுமையான கருத்துகளைச் செவிவழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்.





**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**

**உள்ளத் தனைய துயர்வு.**

பொருள்: தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும் அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய**

**தற்றது போற்றி உணின்.**

பொருள்: உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து, உணவு அருந்துகிறவர்களின் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை.





**சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை.**

பொருள்: பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது எனவே எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

நீங்களும் உங்களுக்கு பிடித்த திருக்குறளை ChatGPT மூலம் சித்தரித்து உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொல்லலாமே


FOX JEWELERS
21-22K Gold
INTERNATIONAL JEWELRY
Add a touch of sophistication to your style with 21-22K Gold Jewelry from Fox Jewelers USA. Our Luxury Collection is perfect for the modern, fashionable jewelry shopper.
21K Gold Ring With Diamonds Designed in Dubai
Contact for Pricing
18K White Gold Diamond Necklace with Dimond Dangles and Bracelet
Contact for Pricing
Discover beautiful, top quality jewelry designed to make you shine
GET IN TOUCH
www.foxjewelersusa.com
Fox Jewelers | 11736 W Broad St
Richmond, Virginia, 23233
CONTACT US NOW
(804) 729-4997
STAY CONNECTED WITH US!

# நான் கண்ட இரிச்மண்டு

**வி. நா. சந்தானகோபாலன்**



ஒவ்வொரு முறை இந்தியாவிலிருந்து வரும் பொழுதும், இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் புதிதாகத் தோன்றுகிறது.

தமிழகத்திலேயே அரிதாகி வரும் பல திருவிழாக்களையும் தமிழர் கலாசாரத்தின் சிறப்புகளையும் அடுத்த தலைமுறைக்கு ஒற்றுமையாக எடுத்து செல்லும் தமிழ்ச்சங்கத்தின் பணி பாராட்டத்தக்கது.

குடியரசு தினத்தை ஒட்டி எங்கள் கால தேர்தல் பற்றி என் பேரனுடன் நடத்திய உரையாடல் நிகழ்வு போன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்திலிருந்து வரும் என் போன்றோர்க்கும், இரிச்மண்டிலேயே பிறந்து வளரும் என் பேரன்கள் போன்றோர்க்கும் இணைப்பு பாலமாக திகழ்கிறது.

வெள்ளி விழா காணும் இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் மேன்மேலும் வளர்ந்து மேலும் பல உயர்வுகளைக் காண வாழ்த்துகிறேன்.




வெள்ளி விழா காணும் இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்
மேன்மேலும் தழைத்தோங்க
எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துகள்!



தமிழால் இணைவோம்.

மார்செவின், ரேவதி, ஜாஷ் & ஜெரிக்



உயிரே உறவே தமிழே...
மலைச்சாமி, கவிதா,
அஷ்வத், விபவ்






வெள்ளி விழா காணும்
இரிச்மண்டு தமிழ்
சங்கத்திற்கு எங்கள்

**இதயம் கனிந்த**
**நல்வாழ்த்துக்கள்!!!**


Congratulations RTS on reaching the Silver Jubilee milestone. Wishing RTS and its members many more years of Tamil enriched activities.
Sugandhi, Anish, Anirudh & Viswa

Congratulations to Richmond Tamil Sangam on reaching its silver jubilee!

Your unwavering commitment to making a difference over the past

# 25 years

is truly inspiring.

Here's to many more years of impactful service and positive change ahead!

## Venu, Sneha, Aadhira & Mohnish



Heartiest congratulations to RTS and the beloved Richmond friends for the 25th year celebration.

Our best wishes and prayers for RTS to serve the Tamil and Richmond community for generations to come. With Love



## Selvam, Padmaja, Sampriti & Sadhana




# உறவுகள் தொடர்கதை



ராம் ஷங்கர் நாகராஜன்

மூர்த்திக்கு வயது 70. அவருக்கு ஒரே மகன் மாது, 25 வருடத்திற்கு முன் அமெரிக்காக்காவிற்கு படிக்கச்சென்றவன் அங்கேயே செட்டிலாகி விட்டான். மாதுவுக்கு ஒரே மகள், பெயர் தீயா. சிறு வயதிலிருந்தே பாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவள். அவள் அம்மா சரோ அவளது ஆர்வத்திற்கேற்ப 5 வயது முதல் பாட்டு பயிற்சிக்கு அனுப்பினாள். தீயா MITயில் பட்டப் படிப்பு முடித்தாலும் அவளது முழு கவனமும் பாட்டில் இருந்தது.

ஆரம்பத்திலிருந்தே மூர்த்தி வைத்ததுதான் வீட்டில் சட்டம். கோமதி ஒரு வாயில்லா பூச்சி. காலை சிற்றுண்டியில் துவங்கி, என்ன காய் வாங்குவது, என்ன சமைப்பது, இரவு என்ன செய்வது முதற்கொண்டு மூர்த்தியின் முடிவே கோமதிக்கு வேத வாக்கு. மூர்த்தி மிகவும் கண்டிப்பானவர். மூர்த்தி காபி பிரியர். ஒரு நாளைக்கு 5 முறை குடிப்பார். அவருக்கு சொன்ன நேரத்தில் கோமதி காபி கொடுக்கவில்லையென்றால் கோமதியிடம் கடிந்துகொள்வார்.

கோமதிக்கு பரதநாட்டியம் என்றால் உயிர். கலயாணத்திற்குபின் மூர்த்தியின் வற்புறுத்தலால் ஆடுவதை நிறுத்திக்கொண்டாள். இதை பல முறை கூறியும் மூர்த்தியின் மனம் இரங்கவில்லை. மனதில் அது பெரிய ஏக்கமாகவே மாறியது.

கோமதி இருந்தவரை மூர்த்திக்கு வாழ்க்கை நன்றாகவே சென்றது. மூன்று முறை அமெரிக்கா சென்று மாது வீட்டில் சந்தோஷமாக தங்கி வந்தார்கள். கோமதி அவரை தனிமையில் விட்டுச்சென்றாள். திடீரென மாரடைப்பால் காலமானாள். அவளது இழப்பினால் மூர்த்தி ஸ்தம்பித்துப்போனார். கோமதி இல்லாமல் மூர்த்தியால் தனியாக இயங்க முடியாது என்பது மாதுவிற்கு நன்றாக தெரியும். ஆகையால் அவன் வற்புறுத்தி அமெரிக்கா கூட்டிச்சென்றான். அவளது நினைவுகளை விட்டுச்செல்ல மனசில்லாமல் மகனுடன் அமெரிக்கா வந்தார். அப்பாவிற்கு Green Card விண்ணப்பித்தான்.

இதற்கு முன் 3 முறை மகன் வீட்டிற்கு வந்திருந்தாலும் இந்தமுறை அவருக்கு கடினமாகத்தான் இருந்தது. மகன், மருமகள், பேத்தி இருந்தாலும் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப் பட்டார். மூர்த்திக்கு கொஞ்சம் கர்நாடக சங்கீத ஞானம் உண்டு. பலமுறை பழகியிருந்தாலும் தீயாவுடன் இப்போதுதான் நீண்ட நாட்கள் இருக்கும் சந்தர்ப்பம் அமைந்தது. "அசலைவிட வட்டிக்குத்தான் மதிப்பு அதிகம்" என்பார்கள். அதைபோல் தாத்தாவும் பேத்தியும் நன்றாக பழக ஆரம்பித்தார்கள். தீயாவின் சங்கீத ஞானத்தைக்கண்டு அவர் மெச்சினார்.

தமிழ் திரையுலகில் பெரிய பின்னணிப்பாடகியாக வேண்டுமென்பதே தனது நீண்ட நாள் கனவு என்றாள் தீயா. இருவரும் பல இரவுகள் நீண்ட நேரம் சங்கீதத்த்தைப்பற்றி உரையாடிவிட்டு தூங்குவது வாடிக்கையானது. மூர்த்திக்கு இது மிகவும் பிடித்தது. இதைக்கண்ட மாதுவும் சரோவும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

6 மாதம் கடந்தது. மூர்த்தி தனது சென்னை வீட்டை போட்டது போட்டபடி விட்டு வந்ததால் நிறைய வேலைகள் பாக்கி இருந்தது. மாதுவிடமும், சரோவிடவும் பேசி சென்னை கிளம்பினார். இந்தமுறை தீயா தன்னிடம் நன்றாக ஒட்டிக்கொண்டதால், அவளிடம் பிரிய மனசில்லாமல், அரைமனதுடன் கிளம்பி வந்தார்.சென்னை வந்தபின்

தனிமை அவரை மிகவும் வாட்டியது. தீயாவுடன் தினமும் FaceTime செய்தால்தான் அவருக்கு தூக்கம் வரும். சில வாரங்கள் கடந்தன.

திடீரென தொடர்ந்து 4 நாட்கள் தீயாவின் FaceTime வரவில்லை. மாதுவிடம் கேட்டார், அவன் பதில் ஏதோ தட்டிக்கழிப்பதுபோல் தோன்றியது. தீயாவின் நம்பருக்கு கால் செய்தால், அது ஸ்விட்ச் ஆஃ செய்யப்பட்டதாக மெசேஜ் வந்தது. மிகவும் வருத்தத்துடன் அன்று படுத்தார். தூக்கம் வரவில்லை. அவர் கண் அயரும்போது மணி 12 இருக்கும்.

விடியற்காலை மணி 5 இருக்கும் யாரோ அழைப்பு மணி அடிக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தார் மூர்த்தி. யாராக இருக்கும்? நிதானமாக எழுந்து வாசல்கதவை திறந்தார். அவர் காண்பது கனவா இல்லை நினைவா எனபது புரியவில்லை. தீயா 2 பெரிய பெட்டிகளுடன் வாசலில் நிற்கிறாள். தாத்தாவை பார்த்த சந்தோஷத்தில் அவரை இறுகப்பற்றி அணைத்துக்கொண்டாள் தீயா. மூர்த்திக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னை கிள்ளிப் பார்த்து உண்மைதான் என ஊர்ஜிதப் படுத்திக் கொண்டு பேத்தியை உள்ளே அழைத்தார்.

"தாத்தா - நீங்க போனதுக்கு அப்புறம் உங்களை நான் ரொம்ப மிஸ் பண்னேன். எப்படியாவது உங்க கூட சென்னை வரமாட்டோமான்னு ஏங்கிட்டிருந்த எனக்கு விஜய் டிவி சூப்பர் சிங்கர் ஆடிஷன் luckily USAல இருந்தது. அப்பா அம்மா கிட்ட அடம்புடிச்சு ஆடிஷன் போய் select ஆயிட்டேன் தாத்தா. இனிமே இந்த 6 மாசம் உங்ககூட சென்னைலதான் இருக்கபோறேன். டைட்டில் ஜெயிச்சா நான் நெனச்ச மாதிரி இங்கே பின்னணி பாடகி ஆயிடுவேன் " என தீயா சொல்லுவதைக் மூர்த்திக்கு இன்னொரு பிறவி எடுத்த ஒரு சந்தோசம் பொங்கியது. இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் தன் மனசாட்சி மூர்த்தியிடம் கேள்வி கேட்டது "நீ கோமதிக்கு சரியான மதிப்பு கொடுக்கவில்லை. நீ இதேபோல் கோமதியிடம் அவளது விருப்பத்திற்கு தடையில்லாமல் இருந்திருந்தால் அவள் எவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பாள்?".

தனது மனசாட்சிக்கு பதில் சொல்ல திணறிய மூர்த்தி அதற்கு பிராயச்சித்தமாக தனது முழு ஒத்துழைப்பை தன் பேத்திக்கு கொடுக்கப்போவதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டார் மூர்த்தி.




25ஆம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாடும் இரிச்மண்டு
தமிழ்ச்சங்கத்திற்கு, எங்கள் குடும்பத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள் !

# பிழைக்க வந்தேன், செழித்து நின்றேன்!



அருண் நடராஜன்

குறிப்பாக தமிழகத்தில் பிறந்தவன் நான்...
சொந்தநாடு சொந்தநாடு
என்று சொல்லிக்காட்டும் எனக்கு
இந்த நாட்டில் என்னவேலை என்று அமெரிக்கா நிந்தனையாக
கேட்பது புரிகிறது...
பதில் சொல்ல பின்னோக்கி
செல்கிறேன்.....
தமிழ் நாட்டில் ...தாயின் அரவணைப்பில் தவழ்ந்து
தந்தையின் வழிகாட்டலில் நகர்ந்து,
நடந்து பட்டப்படிப்பினை முடித்து
அமெரிக்க நாட்டில் உயர்
கல்வி கற்க வேகமாக விழைந்த
என்னை ...இருகரம் நீட்டி வா என வரவேற்றது இந்நாடு.....
துடிப்பான இளைஞர்களுக்கு
பட்டப் படிப்பு மட்டுமல்ல,
துடுப்புடன் ஒரு படகுபோல்
எடுப்பான ஒரு வேலையும் தர
முன் வந்தது. வாழ்க்கையில்
வேரூன்ற வேறென்ன வேண்டும்
வந்துபோக நினைத்த என்னை
தங்கித்தழைத்திட வழிவிட்ட
அமெரிக்கா எனக்கு பிழைக்கும்
நாடாகத் தோன்றவில்லை
அழைக்கும் நாடாக பெருமிதம்
கொள்கிறேன்...
வாழ்க தமிழ் ...வாழ்க இந்தியா
வாழ்க அமெரிக்கா.....

# இதயம் நிறைந்த வெள்ளி விழா வாழ்த்துக்கள்



## கவிகா வாசு, இதயா வாசு, தேவி வாசு மற்றும் வாசு குடும்பத்தினர்

"இரிச்மண்டு தமிழ் சங்கத்திற்கு
வெள்ளி விழா வாழ்த்துக்கள்.



சக்திவேல் நடராஜன்,
பூர்ணிமா, ஸ்ரீயா, அக்ஷயா

# கலையில் சிறந்த இரிச்மண்டு






































RICHMOND TAMIL SANGAM


FRIENDS
FOREVER




RICHMOND TAMIL SANGAM
நிகழ்ச்சிகள்












2013


11/16/2014 14


ரிச்மண்ட் தமிழ் சங்கம்
Richmond Tamil Sangam














ரிச்மண்ட் தமிழ்ச் சங்கம்
Richmond Tamil Sangam
Rich Melodies










ரிச்மண்ட் தமிழ்ச் சங்கம்
SAVE WATER


Richmond Tamil Sangam




Richmond Tamil Sangam










Est.1999


Est.1999
www.richmondtamilsangam.org








Richmond Tamil Sangam


ரிச்மண்ட் தமிழ்ச் சங்கம்
Richmond Tamil Sangam










Est.1999
www.richmondtamilsangam.org


ரிச்மண்ட தமிழ்ச் சங்கம்
Richmond Tamil Sangam











# விருந்தோம்பல்



**வைத்தீஸ்வரன்
ஜெகநாதன்**



**கார்த்திகேயன்
சௌந்தரராஜன்**

விருந்தோம்பல் என்பது தமிழ் மொழியில் "விருந்தினரை அதீத மரியாதையுடன் வரவேற்பது" எனப் பொருள் கொண்டது, தமிழ் பண்பாட்டின் ஒரு அழகான அம்சமாகும். இது பலதரப்பட்ட சமூக உறவுகளை ஊக்குவித்து, சமுதாய உணர்வையும் சொந்த உணர்வையும் உருவாக்குகிறது.

அமெரிக்காவில் தமிழ் உணவுடன் விருந்தோம்பல் நிகழ்த்துவது தமிழ் கலாச்சாரத்தின் அழகை வெளிப்படுத்துவதோடு, அமெரிக்க நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்கும் அதைக் கற்றுக்கொடுக்க ஒரு அருமையான வாய்ப்பாக இருக்கும்.

இரிச்மண்டு தமிழ் சங்கத்தில், தமிழின் சுவையூட்டி, அனைவரும் ஒற்றுமையுடன், விருந்து செய்து கொண்டாடி, இயல்பாக, எளிமையாய், உறவுகளின் மதிப்பை உணர்ந்து,விருந்தோம்பல் நிகழ்வில், அன்பின் செல்வம் பொழிந்து, சாதம் சாம்பார், ரசம் பொரியல், அப்பளம் பாயசம் இனிப்பு, செம்மையாக சுவைத்து, விருப்பமாய் உணவிற்கு சுவையூட்டி நமது அடுத்த தலைமுறைக்கு இந்த விருந்தோம்பல் பண்பை வாழை

இலை விருந்து மூலம் கொண்டு சென்றது மகிழ்ச்சி!

# கலாட்டா குழு நண்பர்கள்!!



வெள்ளி விழா காணும் இரிச்மண்டு தமிழ் சங்கத்திற்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள் !!

வாழ்க தமிழ்!! வளர்க
இரிச்மண்டு தமிழ் சங்கம் !!

# விருந்தோம்பல்
























GAP



























# எனது பார்வையில் இரிச்மண்டு தமிழ் சங்கம்



GG (Glen Allen Ganapathy)

| இரிச்மண்டு தமிழ் சங்க நிகழ்வுகள் |
|---|
| 1999- இரிச்மண்டு தமிழ் சங்கம் நிறுவப்பட்டது |
| முதல் ஆண்டில் உறுப்பினர் எண்ணிக்கை 57 ஆக இருந்தது. |
| 2001 - இலாப நோக்கமற்ற நிறுவனமாக (Non-Profit Association) ஆக இரிச்மண்டு தமிழ் சங்கம் அங்கீகாரம் பெற்றது. |
| தமிழ் சங்க உறுப்பினர்கள் சேர்க்கை 100 ஐ தாண்டியது. |
| 2004 - தமிழ் பள்ளி நடத்துவது பற்றி ஆலோசனை நடந்தது. |
| மக்கள் தொடர்பை மற்றும் செய்தி தொடர்பை மேம்படுத்த "தமிழ்த்துளி" என்ற பத்திரிக்கை நடத்தியது. |
| 2005- முதல் முறையாக கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. |
| 2007 - கோடையில் சிறுவர்களுக்கான தமிழ்ப் பள்ளி - பதினைந்து சிறுவர்களுக்கு நடத்தப்பட்டது . தமிழ் சங்க வலைப்பு (blog site ) அறிமுகப்படுத்தப்பட்டது. |
| பெரியவர்களுக்கான டென்னிஸ் போட்டி நடத்தப்பட்டது |
| 2009 - தமிழ்ச் சங்கத்தில் தமிழ் வகுப்புகள் முறையாக கோவிலில் இருந்த தாற்காலிக இருப்பிடத்தில் துவக்கப் பட்டன. |
| 2011- தற்காலிக இடத்தில் இயங்கிக் கொண்டிருந்த தமிழ் வகுப்புகள் வகுப்பறைகளுக்கு மாற்றப்பட்டன. |
| 2013- கோடை கால-வெளியூர் முகாம் (outdoor camping) அறிமுகப்படுத்தப்பட்டது. |
| தமிழ்ப் பள்ளி- அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்திடம் பதிவு செய்யப்பட்டது. |
| 2015- தமிழ் சங்க உறுப்பினர்கள் சேர்க்கை 240 ஐ தாண்டியது. |

| உலக நிகழ்வுகள் |
|---|
| 1990- H-1B visa குடி வரவு சட்டம் அறிமுகப்படுத்தப்பது. |
| அமெரிக்காவில் Y2K bug & Dot.com தொடர்பான வேலைக்கு தமிழர்கள் வருகை. |
| 1999- கார்கில் போர் முடிவுக்கு வந்தது. |
| 2001 - September 11 - நியூயார்க்கில் தீவிரவாதி தாக்குதல். |
| 2003-Tesla Inc நிறுவனம் நிறுவப்பெற்றது. |
| 2004- facebook நிறுவனம் நிறுவப் பட்டது. கூகுள் பங்குச் சந்தையில் அறிமுகம். |
| 2006- Cognizant நிறுவனம் $1-bn வருவாய் ஈட்டியது. |
| 2007-Quatar விமான நிறுவனம் வாஷிங்டன்(IAD) சேவையை தொடங்கியது. |
| ஆப்பிள் நிறுவனம் iphoneஐ அறிமுகப்படுத்தியது. |
| 2008- Tesla நிறுவனம் வாகனங்களை வெளியிட்டது. |
| 2009- இரிச்மண்டு புகழ் CIRCUIT CITY நிறுவனம் திவால் ஆனது. |
| 2010- இரிச்மண்டு ஹிந்து கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. |

| |
|---|
| தமிழக வெள்ள நிவாரண நிதியாக கலை நிகழ்ச்சி மூலம் $27,000 திரட்டப்பட்டது. |
| 2017 -- நேரடி இசை நிகழ்ச்சி மூலம் $24000 நிதி திரட்டி, பல்வேறு இரிச்மண்டு தொண்டு அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது. |
| 2019-- தமிழ் சங்க உறுப்பினர்கள் சேர்க்கை 300 ஐ தாண்டியது. |
| தமிழ்ப் பள்ளியில் 150 க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கை. |
| நம்ம ஊர் திருவிழா எனும் தமிழர் திருவிழா அறிமுகபடுத்தப்பட்டது. |
| வாழை இலை விருந்து எனும் அறுசுவை நிகழ்வு அறிமுகபடுத்தப்பட்டது. |
| 2021- செய்தி தொடர்பு துறையில் முதல் முறையாக சங்கச்செய்திகள் உறுப்பினர்களுக்கு சுலபமாக போய் சேர வாட்ஸாப் சேனல் அறிமுகபடுத்தப்பட்டது . கதம்பம்- மாத இதழ் தொடங்கப்பெற்றது. |
| 2024 – இரிச்மண்டு தமிழ்ச் சங்கம் வெள்ளி விழா ஆண்டில் அடியெடுத்து வைத்தது. |

| |
|---|
| 2011 ஆண்டு ICC உலக கிரிக்கெட் போட்டியில் இந்தியா வென்றது. |
| 2014- WhatsApp நிறுவனத்தை facebook வாங்கியது. |
| 2015- கூகிள் நிறுவன CEO ஆக சுந்தர் பிச்சை தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| 2017-டொனால்ட் டிரம்ப் - அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதி ஆனார். |
| 2019-40 ஆண்டுகளுக்கு பிறகு அத்தி வரதர் எழுந்தருளினார். |
| 2020- கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தடுக்க நாடு முழுவதும் 21 நாள் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. |
| 2022- ChatGPT அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2023- பிரபல பாடகி டெய்லர் ஸ்விட்ட் ERAS இன்னிசை பயணத்தை தொடங்கினார். |




இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின்
தமிழ்த் தொண்டு மேன்மேலும் தொடர வாழ்த்துகள்!
சுதா, ஜெயகாந்தன், சரவண், சச்சின், சிரேயஸ்!


Happy Silver Anniversary to Tamil Sangam
Aditya and Chitra Chavan

இரிச்மண்டு தமிழ் சங்கம் மற்றும் இரிச்மண்டு தமிழ் பள்ளி
மேன்மேலும் சிறக்க எங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

**இர.சோ.சுந்தர், குழல்மொழி சுந்தர், சிபி சுந்தர்**



வெள்ளிவிழா காணும் இரிச்மண்டு
தமிழ்ச்சங்கத்திற்கு எங்களது குடும்பத்தின்
சார்பாக மனமார்ந்த வாழ்த்துகள்!!!



**இளமாறன், மேகலா,
கீர்த்தி, தமன்.**

25 வருட தன்னலமற்ற சேவை மற்றும்
25 வருட நம்பிக்கை
மேலும் தொடர வாழ்த்துக்கள்!

**பிரசன்னா, கமலாம்பிகை,
நிதிலா, ஜீவன், நேத்ரா**



# ஆர் டி எஸ் கேம்ப்பிங்கு முகாம்

இரிச்மண்டு தமிழ்ச் சங்கம் ஏற்பாடு
கேம்ப்பிங்கு கேம்ப்பிங்கு என்று கூப்பாடு
கிட்டோபீக்கு பார்க்குன்னு வெச்சாங்க ஒரு போர்டு
அது என் வாயில நுழைய நான் பட்ட பாடு...

போனதில்லை இதுவரை
போய்த்தான் பார்ப்போமே ஒரு முறை
பதிவு செய்தோம் முதன் முறை
புதிய அனுபவம் ஒன்றை பெற

நாள் பார்க்காம நேரம் பார்க்காம
பூசை செய்யாம வாஸ்துன்னு பேச்சே இல்லாம
எல்லோரும் கட்டினாங்க வீடு அங்கே
மகிழ்ச்சிக்கு இல்லை ஒரு எல்லை கோடு

சில பத்து குடும்பம்
பலவிதமான கூடாரம்
பார்க்கவே ஒரு சிறிய கிராமம்
என்றே சொல்ல தோன்றும்

அதிகாலை கண்விழிக்க அலாரம் தேவை இல்லை
பறவைகளின் கீச்சுக்கள் செய்யுதே அந்த வேலை

கதிரவனுக்கு காலை வணக்கம் சொல்ல
நடந்தோம் கடற்கரைக்கு மெல்ல

காலை மாலைன்னு தேநீருக்கு பஞ்சமில்ல
வடை சுண்டலுன்னு நொறுக்குத் தீனியும் நேரத்துக்குள்ள
பசின்னு வயிறு கிள்ளுறதுக்குள்ள
சாப்பாடு ரெடினு மெசேஜ்ஜூ குரூப்புல

கடற்கரையில் பிள்ளைகள் விளையாடும் போதிலே
பாப்சிக்கல் வாயிலே அதனால வெயிலே தெரியலே
பூந்தியும் மாங்காயும் ஊறின மோரிலே
இது அமெரிக்கானு மறந்தே போனேன் உண்மையிலே

நிலாச்சோறு சாப்பிட்டதுண்டு பல முறை
பீச்சுல பீட்சா இதுவே முதல் முறை
தயிர் சோறும் ஊறுகாயும் கொடுத்தாங்க
அந்த ஊறுகாய் எங்க கிடைக்கும் கொஞ்சம் சொல்லுங்க

ஹவாயன் தீம்முல அனைவரும் போட்ட ஆட்டத்துல
பல வேடிக்கை விளையாட்டுகள்ல
குறிப்பா கொத்து பொராட்டாவுல
என் மனமும் கொத்துதே நினைவுகளிலே

கல்யாணத்துக்கு அப்பறம் ஒவ்வொரு பெண்ணும்
வேலையே செய்யாம வேளாவேளைக்கு சாப்பிடணும்

அப்படினா அம்மா வீட்டுக்குத் தான் போகணும்
இல்ல.. இல்ல.. இனிமே கேம்ப்பிங்கு போகணும்

பலே பலே ஏற்பாடு
சுவையான சாப்பாடு
அடுத்த வருடம் எப்போ புறப்பாடு
என அனைவரும் கேட்கும் வகையில் செயல்பாடு
அப்படியே நம்ம தமிழ்ச் சங்கத்துக்கு ஒரு ஓ...போடு...

கடைசியா ஒன்னு சொல்லிக்குறேன்
கண்ணுல கொஞ்சம் தண்ணிய வெச்சுக்குறேன்
"நன்றி சொல்ல உனக்கு
வார்த்தை இல்ல எனக்கு
நான் தான் மயங்குறேன்"
இத்தோட என் உரையை முடிச்சுக்குறேன்.
மீண்டும் அடுத்த கேம்ப்பிங்கில் சந்திக்குறேன்



சுனிதா செந்தில்ராஜ்


ஒன்று பட்டால் உண்டு வாழ்வு! மொழி என்பது நமது பண்பாட்டு அமைப்பின் உயிர்நாடி, அது நம் பல்வேறு பின்புலங்களையும் பாரம்பரியத்தையும் ஒன்றாக இணைத்து சமூகம ஒற்றுமையை வளர்க்கிறது. மொழி வளர்ச்சி மற்றும் கூட்டுக் கொண்டாட்டங்கள் மூலம் நம் சமூகத்தை மேலும் மேலும் வலுப்படுத்திப் பொலிவுறச் செய்யும் இரிச்மண்டு தமிழ்ச் சங்கம் வாழ்க வளர்க!!
சத்தியா சண்முகசுந்தரம்
குடும்பத்தினர்

**நம்மை ஒரு குடும்பமாக இணைந்து, நமது வேர்களைத் தழுவி, மொழிப் பெருமையை வளர்த்து, வருங்காலத் தலைமுறையினர் நமது மொழியியல் தொடர்ச்சியைப் பேண வழி வகுத்து நம்மை வழி நடத்தும் இரிச்மண்ட் தமிழ்ச் சங்கம் என்றும் இளமையொடு தமிழ் போலவே வாழ்க வளர்க.**



# வாசு சண்முகம்

## குடும்பத்தினர்

# கோடைக்காலக் காற்றே

















chassis




U-HAUL

























U-HAUL










































ரிச்மண்ட் தமிழ்ச் சங்கம்
Richmond Tamil Sangam
Est.1999
www.richmondtamilsangam.org



# RTS வெள்ளிவிழா வாழ்த்து பாடல்

சங்கே முழங்கு
சங்கே முழங்கு தமிழை வணங்கு

எங்கள் சங்கம் என்றும் வளரும்
இருபத்தைந்தாம் ஆண்டாம்
சங்கே முழங்கு சங்கே முழங்கு
தமிழை வணங்கு

இரிச்மண்ட் மண்ணில் தமிழ் சங்கம் தன்னில்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டோம்

அயராது உழைக்கும் நிர்வாகக் குழுவை
புகழ்ந்து பாடிட சங்கே முழங்கு
சங்கே முழங்கு

கலை நிகழ்ச்சியோடும் வாழை விருந்தோடும்
வண்ணக் கேளிக்கை கொண்டாட்டமும்



**மேகலா இளமாறன்**

கதம்ப இதழோடும் முகாம் அமைத்தும்
வெற்றி கண்டோம் என்றும் நாங்கள்

ஆதரவாளர்கள் அன்பைக் கொண்டு
சங்கம் வளந்ததென்று முழங்கு சங்கே
ஆதரவாளர்கள் அன்பைக் கொண்டு எங்கள்
சங்கம் வளந்ததென்று முழங்கு சங்கே

சங்கே முழங்கு
சங்கே முழங்கு

கைபந்தும் எறிப்பந்தும் விளையாடும்
தோளெங்கள் வெற்றித் தோள்கள்
மணற்கேணியை போல் தமிழ் பள்ளியிலே
அன்பு குழந்தைகளின் தமிழை வளர்ப்போம்

மக்களை மகிழ்விக்க என்றென்றும்
உழைக்கின்ற சங்கம் நம் தமிழ் சங்கமாம்
சங்கே முழங்கு
சங்கே முழங்கு தமிழை வணங்கு !!!

அன்னிய மண்ணிலே வாழ்கின்ற உணர்வை
அளவே மாற்றிடும் அழகுத்தமிழ்ச்சங்கமிது!
கணினியே கதியென்று நாள்முழுதும் பணியாற்றும்
இரிச்மண்டு தமிழர்களை ஒற்றுமையாய் கூட வைக்கும்
உன்னதக் கலைக்கூடம் நம் இரிச்மண்டு தமிழ்ச்சங்கம்!
வளரும் படைப்பாளிகளை வரவேற்கும் தாய்வீடு.
மழலைகள் தமிழ்கற்க தரமான பள்ளிகள்
தமிழுணர்வை ஊட்டிவிடும் தன்னம்பிக்கையைத் தூண்டிவிடும்
ஆண்டுதோறும் உறுப்பினர்களின் அழகான சுற்றுலா
சங்கத்தமிழ் வளர்க்கும் மாத இதழ் கதம்பமுண்டு
தலைமைகள் மாறினாலும் தரம்மட்டும் உயர்வுதான்!
அயல்நாட்டில் கணினிமயமாய் கால்நூறு ஆண்டுகள்
வெற்றிநடை போடுதம்மா! அப்பப்பா கண்படுமே!
வெள்ளி விழா ஆண்டிலே நற்பணிகள் ஓங்கட்டும்.
இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் பொன்விழா கொண்டாட
அனைவரும் இணைந்து ஆர்வமுடன் பணிபுரிவோம்!

## உன்னதக் கலைக்கூடம் நம் இரிச்மண்டு தமிழ்ச்சங்கம்



**நொளம்பூர் கண்ணன்**

# Coding classes for high school students & adults



What to learn

- Python Programming
- Java Programming
- App Development
- Data Science
- Big Data
- AWS Certification preperation

**Tech Gurukul**

*Education Changes Lives*

Tech Gurukul USA's vision is to provide the oppurtunity to learn coding and computer science to all our school students

Contact us for the next available schedule.

Hurry and become a computer wizard!

www.techgurukulusa.com

(804) 484 - 9178




ravigutta09@gmail.com

**Ravi Gutta**

**Realtor®, Principal Broker**
**Robinhood Real Estate & Mortgage**

**630 - 865 - 2493**

# விளையாட்டும் இரிச்மண்டு தமிழ்ச் சங்கமும்






















































# THE INDIAN ASIAN GROCERIES & HALAL MEAT SUPER MARKET

RICHMOND, VA

We're your go-to place for good value treats.



RICE ITEMS · STAPLES · OIL · FLOURS · DRY FRUITS

FROZEN · FRUITS · VEGETABLES · MEAT · CHOCOLATES

We are into the Business for more than a Decade & always strive to bring the joy into Our Customer's Houses

& MANY MORE

Maharajah
Indian Asian Groceries & Halal Meat

3851 Springfield Rd, Glen Allen, VA 23060 | +1 (804) 965-2723
Maharajagrocery19@gmail.com








PAWS










ரிச்மண்ட் தமிழ்ச் சங்கம்


















PAWS








Authentic Indian

# கண்டுபுடிங்க பார்ப்போம்...!!!

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | ன் | இ | ர | பி | ஓ | ங் | னா | ல | ஜ | தெ |
| வ | ங் | தி | ம | ஷ் | சீ | சி | ல | இ | ற | ன் |
| ரெ | னா | மி | கி | ய | யா | னா | ண் | ந் | ஆ | ஆ |
| ஸ் | ள | ங் | ரீ | சி | ம | ம் | ட | தி | சி | ப் |
| ட் | து | க | ன் | ஆ | த | லை | ன் | யா | யா | பி |
| இ | மி | ல | லா | ந் | பி | அ | ஷ் | ன் | யா | ரி |
| து | ச | ம் | ந் | ங | ல | ஹா | ரே | ற | ன் | க் |
| ரே | ல | ஹா | து | மி | ணை | ஸ் | இ | பி | து | கா |
| தி | ன் | யா | ரா | ன் | ய | க | கா | அ | யா | ளு |
| இ | எ | க | ஸ் | பி | ய | ன் | க | ர் | ங | ஸ் |
| ஏ | ர | ம | ணை | சி | ர | பு | ஞ் | சி | ஔ | ரா |

உலகில் மிக பெரியவை :-

1. உலகிலேயே மிகப்பெரிய நாடு எது?
2. உலகிலேயே மிகப்பெரிய விலங்கு எது?
3. உலகிலேயே மிக உயரமான மலை எது?
4. உலகிலேயே மிகப்பெரிய நகரம் எது?
5. உலகிலேயே பெரிய பாலைவனம் எது?
6. உலகிலேயே அதிக மழை பெரும் இடம் யாது?
7. உலகிலேயே மிக உயர்ந்த சிகரம் எது?
8. உலகிலேயே பெரிய தீவு எது?
9. உலகிலேயே மிகப்பெரிய கண்டம் எது?
10. உலகிலேயே பெரிய ஏரி எது?
11. உலகிலேயே பெரிய எரிமலை எது?
12. உலகிலேயே மிகப்பெரிய வைரசுரங்கம் எங்குள்ளது?



சிவரஞ்சனி கிருஷ்ணமூர்த்தி

13. உலகிலேயே மிகப்பெரிய தீபகற்பம் எது?
14. உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு எது?
15. உலகிலேயே அதிக மக்கள் தொகை உள்ள நாடு எது?

விடை 151 பக்கம்...


DESIBITES
KHATE JAO
MODERN
INDIAN
Cafe
Visit Us :
3621 cox rd , Unit C, Henrico , VA -23233
Phone : 804-585-1999

# கண்டுபிடிங்க பார்ப்போம் ...!!!

## விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | ன் | இ | ர | பி | ஓ | ங் | னா | ல | ஜ | தெ |
| வ | ங் | தி | ம | ஷ் | சீ | சி | ல | இ | ற | ன் |
| ரெ | னா | மி | கி | ய | யா | னா | ண் | ந் | ஆ | ஆ |
| ஸ் | ள | ங் | ரீ | சி | ம | ம் | ட | தி | சி | ப் |
| ட் | து | க | ன் | ஆ | த | லை | ன் | யா | யா | பி |
| இ | மி | ல | லா | ந் | பி | அ | ஷ் | ன் | யா | ரி |
| து | ச | ம் | ந் | ங | ல | ஹா | ரே | ற | ன் | க் |
| ரே | ல | ஹா | து | மி | ணை | ஸ் | இ | பி | து | கா |
| தி | ன் | யா | ரா | ன் | ய | க | கா | அ | யா | ஞ |
| இ | எ | க | ஸ் | பி | ய | ன் | க | ர் | ங | ஸ் |
| ஏ | ர | ம | ணை | சி | ர | பு | ஞ் | சி | ஔ | ரா |

ரஷ்யா
திமிங்கலம்
இமயமலை
லண்டன்
சஹாரா
சிரபுஞ்சி
எவரெஸ்ட்
கிரீன்லாந்து
ஆசியா
கஸ்பியன்
லஸ்கார்
தென் ஆப்பிரிக்கா
அரேபியா
இந்தியா
சீனா





Website : https://marketcafeglenallen.com/
☎ : (804) 934-0144
EST. MC 2011
Market Cafe
THE ADDA : CASUAL DINE IN
EAT & DRINK
10950 NUCKOLS RD, GLEN ALLEN, VA 23060



## நன்றியுரை

சங்கத்தின் வெற்றிக்கு முதுகெலும்பாக விளங்கும் இரிச்மண்டு தமிழ் சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

ஆயிரம் கல் தொலைவு தாண்டி வந்தாலும் எத்துணை ஆண்டுகள் ஆனாலும் நம்முடைய தமிழ்ப் பண்பாடும், மொழிப்பற்றும் மாறாதது. இந்தத் தமிழ்ச்சங்கம் தொடங்கப்பட்டு, அனைவரின் பேராதரவுடன் வளர்ந்து கொண்டே வருவதே அதற்குக் சிறந்த எடுத்துக்காட்டு.

இரிச்மண்டு தமிழ் சங்கத்தை 25 ஆண்டுகளாக நன்முறையில் வழி நடத்தி செல்ல உறுதுணையாக இருக்கும் அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் முதற்கண் நன்றி.

இந்த வெள்ளி விழா மலரை நாங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கிறோம்.

இந்த இதழ் உருவாக்கத்துக்கு மார்செலின் லூவிஸ்மார்ட்டின் முதல் விதை போட்டார். பின், நித்யா கணபதி மற்றும் ஸ்ரீலதா சந்தானகோபாலன் முன்னெடுப்பால் வளர்ந்து உருப்பெற்று, அனைத்து கழக உறுப்பியினரும் ஒற்றுமையாக பங்களித்ததன் வழியாக, இன்று வெளியிட்டுக்கு வந்தே விட்டது.

தங்கள் அணியினரின் விபரங்களையும் விழா மலரில் சேர்த்துக் கொடுத்து, சங்கத்தின் வளர்ச்சிக்கு உழைத்த அனைத்து நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் பெருமைப்படுத்திய அனைத்து தலைவர்களுக்கும் நன்றி!

பிழை திருத்தி, சரிபார்த்தலை பொறுமையாக கவனித்த கார்த்தி அங்கமுத்து மற்றும் நாகேந்திரன் பரசு அவர்களுக்கு நனி நன்றி!

இந்நூலை சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுத்த சு.சுடலைமுத்து துரை அவர்களுக்கும் நம் உள்ளார்ந்த நன்றி.

இந்தப் புத்தகம், நமது சங்கம் மற்றும் நமது சமூகம் வளர்ந்த விதம், நம் நினைவுகள் மற்றும் சாதனைகளின் தொகுப்பு. ஒரு விதத்தில் ஒரு காலப் பெட்டகம்.

நம் சங்கத்தை முன்னோக்கி வெற்றி பாதையில் செல்ல உதவிய அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும், நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும் ,

வணிக ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கும் நம் அனைவரது நன்றியை தெரிவிக்கின்றோம்.

தமிழை பேச்சில், வாழ்வில் பயன்படுத்த வருங்கால சந்ததியினரை என்றும் ஊக்குவிப்போம். அவர்களும் தமிழ் போல் தழைக்கட்டும், நீண்ட நல்வாழ்வு ஒற்றுமையுடன் தமிழ் போலவே வாழட்டும்.

வாழ்க தமிழ், வளர்க தமிழர் வாழ்வும் ஒற்றுமையும்.

நன்றி.

**சுபாஷினி அருணாசலா**

**(செயலாளர்)**



# நன்றி!




# இரிச்மண்டு தமிழ் மக்களின் சிறப்பான ஆதரவுக்கு நன்றி!

## நம் வெற்றிப் பயணம் தொடரும்...

We strive to provide exceptional honest care with state-of-the-art technology for you and your entire family. Big and small.

# Lifetime Dentistry
*at Short Pump*




## Kalpana Kaleswaran, DDS
### General Dentist

12244 W Broad St Henrico, VA 23233
lifetimedentistryatshortpump.com
**804-360-8890**

**Dental Services offered include**

- Cosmetic Dentistry
- Crowns/Bridges
- Endodontics
- Oral Surgery
- Invisalign therapy
- Emergency care



**In-Network Insurances we participate with**

- Anthem Blue Cross Blue Sheild
- MetLife
- Cigna
- Delta Dental
- United Healthcare
- Medicare Advantage

# Aha Indian Kitchen





Biryani's



Cake's &Pastries



Pulav's

Our expert chefs curate a menu that celebrates the rich tapestry of Indian cuisine, offering a diverse range of mouthwatering dishes. Each bite tells a story of authenticity, passion, and innovation.

At Aha Indian Kitchen, we invite you to immerse yourself in a symphony of flavors that leave a lasting impression.

1 804-859-2023

3409 Old Parham Rd, Richmond, VA 23294, United States